# சுத்தானந்தரின்
# மந்திர மாலை

கவியோகி மஹரிஷி
சுத்தானந்த பாரதியார்

வெளியிட்டோர்
சுத்தானந்த நூலகம், திருவான்மியூர்,
சென்னை 41. Ph: 97911 77741

Copy Right : @Shuddhananda Yoga Samaj(Regd),
Shuddhananda Nagar, Sivaganga - 630 551

## ***ஓம் சுத்த சக்தி***

### *அறிமுகம்*

*ஒவ்வோர் உள்ளமும் இன்பத்தைத் தேடுகிறது; புறத்தே திரிந்து புலன்வழியே அனுபவிக்கும் இன்பங்கள் தெவிட்டிப் போகின்றன. உள்ளே மனங்குவிந்து தியானத்தில் அடையும் இன்பம் நிலைத்திருக்கிறது. நிலையான உள்ளின்பத்தை அடைந்தால் உலகின் இரு விகாரப் புயல்களும் முக்குண மோதல்களும் நம்மைக் கலக்காமல், "**எப்போதும் இனியானை கலந்து**" **இன்பமே எந்நாளும் துன்பமில்லை** ....... என்றநிலை பெறலாம். அத்தகைய இன்பத்தையே சுத்தானந்தம் அல்லது தூய உள்ளின்பம் என்கிறோம். அந்த இன்பத்தை அடைய மனதைப் பண்படுத்த வேண்டும். ஒரு யாழில் இன்னிசை உள்ளது; அந்த இன்னிசையை மீட்டப் பழகவேண்டும். முறையாக இசைப் பயிற்சி பெற்றவனே யாழில் தான் விரும்பிய நாதகீதத்தை மீட்டி இன்பமளிப்பான். அதே மாதிரி நமக்குள் நாடியாழ் உள்ளது; அஃது ஓங்கார மிசைத்து இன்பமளிக்கும். இந்த இன்பத்தைப் பெறுதற்குச் சிறந்த சாதனம் மந்திர ஜபமாம். ஜபயோக சாதனத்தால் மூலக்கனல் விழித்தெழுந்து மேலேறிப் பரநாதப் பண்முழங்கத் தூண்டும். ஜபசாதகர் தமது விருப்பத்திற்கேற்ற மூர்த்தியை உபாசித்து அரிய சித்திகளைப் பெறலாம். மந்திர ஜபமும் உபாசனையும் சேர்ந்த வழிபாட்டிற்கே இந்த மந்திரமாலை எழுந்தது.*

*இந்நூலில் கணபதி, முருகன், நடராஜப் பெருமான், மஹாவிஷ்ணு, சுத்தபராசக்தி உபாசனை, சக்தி உச்சாடனம் ஆகிய பூஜை உபாசனை மந்திரங்களும், மூர்த்தி விளக்கங்களும் அடங்கி யுள்ளன. வேதத்தில் சூரியன், அக்கினி ஆகிய இரண்டு சுடர் வணக்கம் முதன்மைபெற்றது. மந்திர மாலையில் யோக வேள்வி மந்திரம், சுடர் வணக்கம், நவக்கிரகமாலை, ஆகிய அரிய மந்திரங்களைக் காணலாம். பிறகு சமயோக தீபிகையும், சமயோக சாதன மாலையும், சமயோக விண்ணப்பமும் மந்திரமாலையின் சிகரமாக அமைந்துள்ளன. இவை உலக தீர்க்க தரிசிகள், தவயோக சித்தர்கள் கண்ட அனுபூதி உண்மைகளையும் நமது **மஹரிஷி சுத்தானந்தர்** கண்ட சுயானுபூதியையும் தெளிவாக விளக்குகின்றன.*

*"மந்திரமாலை" என்றொரு பழைய நூலின் பெயர் திருவாசகத்திற் காண்கிறது. அந்நூல் மறைந்துவிட்டது. அந்தப் பெயர் நிலைத்து விளங்கவே நமது **கவியோகி மஹரிஷி சுத்தானந்த பாரதியார்** இந்த மந்திர மாலையைத் தொகுத்தளித்தார். இந்நூல் கவியோகி சுத்தானந்தர் தமது உபாசனைக்காகவும் பாராயணத்திற்காகவும் பாடிய நூல். இதை நமது வேதாகமச்சுரங்கம் என்னலாம். இதிற் கண்ட ஒவ்வொரு மூர்த்தியையும் உபாசித்து, உள்ளே கண்டு, அந்தந்த மூர்த்திகளின் அருளைக் கொண்டு ஏராளமான பாமாலைகளைத் தொடுத்து மனித சமுதாயத்திற்கு அளித்துள்ளார் **சுத்தானந்தர்**. சுத்தசக்தி உபாசனா பலத்தினால் அவர் **பாரத சக்தி** மகாகாவியம் அருளினார். சுத்தானந்தர் ஒரு மலைக்குகையில் நிட்டை கூடியிருந்து சமயோக சாதன மாலையைப் பாடினார். அதன் கருத்தைச் சமயோக தீபிகை எளிய இனிய உரைநடையில் விளக்குகிறது. சாதி, மத, சாத்திர, கோத்திர, நாடு, நிற வேறு பாடில்லாமல் மனித மரபு சுத்தான்மப் பொதுவில் ஒன்று பட்டு வாழும் சுத்த ....... முக்த ....... சமத்துவ நிலைக்கு உலகை அழைக்கும் சமயோக விண்ணப்பம் நம் உள்ளத்தை அள்ளுகிறது.*

***சுத்தானந்தர்*** *அனுபவ ஞானி, அருள்யோகி. அவர் வாக்குகள் உள்ளுணர்விற் பூத்தவை. அவரது கவியருவியின் ஊற்று சுத்த சக்தி சைதன்யமே.*

***சுத்தானந்தர்*** *தமது யோக சமாஜத்தில் உள்ளடங்கி, உள்விழித்து, தனிமோன சமாதியில் ஆழ்ந்து, கடவுட் கலப்பால் மலரும் அருள் வாக்குகளை அமைதியாக உலகிற்கு அளித்து வந்தார்.*

*உலகான்ம நேயர்களே, சுத்தானந்த அமுதத்தை அள்ளிப் பருகுங்கள்; அன்பை வளருங்கள்; அருளைப் பெருக்குங்கள்; இன்பச் சிகரத்தில் சமயோகத் தாண்டவமாடிப் பரவச மெய்துங்கள்.*

***வண்மை வாழ்க, உண்மை வாழ்க !***
***நன்மை வாழ்க, ஞாலம் வாழ்க !***

**சுத்தானந்த நூலகம்**

# ஓம்
# சுத்தானந்தர் மந்திரமாலை
# 1. கணபதி பூஜை



## *1. கணபதி தத்துவம்*
## *மந்திரமாலை கணபதி பூஜையுடன் தொடங்குகிறது.*

*நாம் கடிதம் எழுதும் பொழுது முதலில் பிள்ளையார் சுழி போடுகிறோம். நாளும் கிழமையும் பிள்ளையார் பூஜை செய்கிறோம். சிவன் பிள்ளையாரே கணபதி. பிள்ளையார் கோயில் இல்லாத ஊர் நமது நாட்டில் இல்லை. அரசமரத்தடி குளக்கரை எங்கும் பிள்ளையாரைக் காணலாம். பிள்ளையாருக்குக் குட்டிக்கொண்டு, தோப்புக்கரணம் போட்டால் எடுத்த காரியம் சித்தியாகும்; பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்தால் நலம் என்று கருதுகிறோம். பிள்ளையாரை வழிபட்டே கலியாணமும் மற்றும் சுபகாரியங்களும் நடக்கின்றன. பிள்ளையாரைப் பாடி வணங்கியே எதையும் தொடங்குகிறோம். பிள்ளையார் வழிபாட்டை எல்லோருமே பக்தியுடன் செய்கிறார்கள்.*

*தமிழில் "ஓம்" எழுதுங்கள். அந்த வடிவே **கணபதி**. கணபதி ஓங்கார வடிவம். யானையே "ஓம்" என்று தெளிவாகப் பிளிறும்; யானை கம்பீரமான தோற்றமும், அயரா உழைப்பும், திடபலமும், அறிவும் கொண்டது. தாவர உணவையே உண்டு, சக்தியுடன் பொலியும் யானை முகத்தைக் கணபதிக்குத் தந்தனர் அருட்பெரியார். கணபதி உருவைக் கவனியுங்கள். கால் மடித்து அமர்ந்த கோலம் **அகரம்** போலும். வயிறு **மகரம்** போலும், தலையும் துதிக்கையும் **உகரம்** போலும். **அகர உகர மகர ஓங்கார வடிவம் கணபதி வடிவானது**. குண்டலிசக்தியே **மூஷிகம்**. பாசத்தை அறுக்கும் பாசாங்குசமும், பதியறிவைத் துலக்கும் கொம்பெழுத்தாணியும், ஏழுலகும் ஈசுவர சக்தியில் அடக்கம் என்பதற்காக மோதகமும், சாதனத்திற்கு சிறந்த ஜபயோகத்தைக் காட்ட ஜபமாலையும் கணபதி கையிற் காண்கிறோம். நான்கு கரங்கள் **சரியை, கிரியை, யோக, ஞான** சாதனங்களால் தர்மார்த்த காம மோட்சப் பயன்களை பெறும் அறிகுறிகளாகும். சிவனைப் போலவே கணபதிக்கு முக்கண் உண்டு. நடுக் கண் ஞானக் கண்.*

*கடவுள் ஒன்றே; அது அனந்த குண சின்மயம். அதன் குணங்களுக்கே பல பெயர் வடிவுகளைத் தந்து உபாசிக்கிறோம். இலிங்கம் அந்தராத்ம வடிவம்; நடராஜா ஐந்தொழில் வடிவம்; முருகன் சிவக்கனல் வடிவம்; தட்சிணாமூர்த்தி மோன ஞானபோத வடிவம். பராசக்தி பரம்பொருளின் இச்சா கிரியா ஞானசக்தி வடிவம். அவ்வாறே கணபதி இறைவனுடைய திவ்விய வல்லமையின் வடிவமாகும். சிவகணங்களுக்குத் தலைமை பூண்டு அசுர பலத்தை அழிக்க முனைந்ததும் கணபதியே. ஔவையார் கணபதி உபாசனைகளால் சக்தியும் முக்தியும் அடைந்தார். லோகமான்ய திலகர் கணபதி உபாசனை செய்தே மேடை*

யேறினார். கணபதி எங்கும் காரியசித்தி அளிக்க முன்னே நிற்கிறார்.

## 2. கணபதி வழிபாடு

ஆவணி சுக்கில சதுர்த்தியன்று கணபதி வழிபாடு நாடெல்லாம் நடைபெறுகிறது. நாடோறும் வழிபாடு செய்தல் நலம். காலை எழுந்து வெளியே சென்று கொன்றை, வில்வம், அலரி, பவளமல்லிகை, தாமரை முதலிய மலர்களை கொய்து வருக. நன்றாக நீராடி, தூய ஆடை அணிந்து, சிவ சின்னங்கள் தரித்து, பக்தியுடன் பூஜை அறை புகுக. திரு விளக்கு ஏற்றுக. உறுதியாக அமர்க. கணபதி திருவுருவை ஐந்து நிமிஷம் தியானம் செய்க. "**ஓம் கணபதி**" என்ற மந்திரத்தை ஜபமாலையில் 108 தடவை சொல்லுக. ஜபம் முடிந்த பிறகு பிள்ளையாரைச் சுத்தம் செய்க. அணிமணிகள் சூட்டுக; தோத்திரம் செய்த பின், மலர்களைத் தூவி அர்ச்சனை செய்க. தூபம் தீபம் காட்டுக. நிவேதனம் செய்து, வரம் வேண்டித் துதி பாடுக. இசைக் கருவிகளுடன் பாடலாம். முடிவில் ஒரு நிமிஷம் தியானம் செய்து, இதயத்தில் உபாசனா மூர்த்தியை ஆவாகனம் செய்து கொண்டு பாடுக. வழிபாட்டின் இறுதியில் அவரவருக்குகந்த பாடல்களை ஆர்வமுடன் பாடுக !

## 3. கணபதி தியானம்

செல்வக் கணபதியே சித்தி விநாயகனே
கல்விக் கடலே என் கண்மணியே ....... வெல்லுஞ்சொல்
ஈந்துன்னைப் பூசிக்கும் இன்பந் தரவேண்டும்
சார்ந்துன்னை வாழ்ந்தேன் சரண். (1)

ஞாலமெலாம் உன்புகழை நாட்டக் கவிபுனைந்தேன்
காலமெல்லாம் உன்னைக் கருதிடுவேன்.......வேலவனின்
அண்ணாவுன் அன்பர்களை ஆதரிக்கும் மெஞ்ஞானக்
கண்ணா எனைக்கண்ணாற் காண். (2)

## 4. கணபதி ஆராதனை

கணபதி ஓம்சிவ கணபதி சிவஓம்
குணபதி யெனவே கும்பிடு மனமே
அகரமே இருக்கை; மகரமே வயிறாம்;
உகரமே துதிக்கை ஓம்கண பதிக்கே.
மூலகுண் டலியாய் முளைத்துமுக் காலும்
ஞாலந் தன்னை நடத்தும் கோலமே
கணபதி சிவமெனக் கருதிடு வோமே.
உலக மெல்லாம் உளங்கை யடக்கி
நிலவிடும் உருவை நினைத்திடு வோமே.
மெய்சிலிர்த் திடவே விழியுகுத் திடவே

கைகுவித் திடுவோம் காதலித் திடுவோம்.
அடங்கிய தூயர் அறிவுணர் புலவர்
தொடங்கிய முயற்சி துகளற ஓங்கும்
வல்லமை யருள்வான், வரங்களைத் தருவான்.
செல்வ விநாயகன் சேவடி பணிவோம்.

*அன்புடன் வணங்கும் அடியவர் என்றும்*
*இன்புறச் செய்யும் இறைவனைப் பணிவோம்.*
*உத்தமர் வேண்டும் சக்தியை நல்கும்*
*சித்திவி நாயகன் சேவடி பணிவோம்.*
*உள்ளம் குவிந்தே உட்கண் மலர்ந்தே*

*வெள்ளி மலைச்சிவன் பிள்ளையை நினைவோம்.*
*சங்கர குருவின் ஐங்கர விளக்கை*
*நன்கறம் பொருளிசை நயந்திடத் தொழுவோம்.*
*பாலுந் தேனும் பாகும் பருப்பு*
*நாலும் படைத்தே நாம் பணிவோமே.*
*மலையர சளித்த கலையர சனுக்கே*
*நிலைபெறும் ஆன்ம நிவேதன மாவோம்.*
*தடைகளைத் தகர்த்தே மடமையைத் தவிர்த்தே,*
*அடைந்தவர்க் கபயம் அருள்பரமா த்மா;*
*அல்லலை நீக்கி அன்பர்கள் புரியும்*

*நல்வினை யிசைபெற வெல்துணை யவனே,*
*ஓம் சுத்தசக்தி ஓம்சிவ முருகா,*
*ஹரிஹர பிரமா பரமா குருஓம்,*
*நாரண காரண பூரண வென்றும்,*
*அருவே உருவே அருளே என்றும்,*
*குகனே அகநா டகனே என்றும்,*
*அப்பா அம்மா அல்லா அகரா,*
*ஒப்பறு முதல்வா ஒருவா என்றும்*
*பலமதம் வணங்கும் பரம்பொருள் ஒன்றே.*
*அதன் வல்லமையே ஆனை முகத்தோன்;*

*விக்கின ராசன் விநாயகப் பெருமான்;*
*துக்க நிவாரணன் சுகந்தரும் கடவுள்.*
*சயமிகு வல்லபை சக்திக் கனலான்*
*கயமுக வரக்கனைக் கடிதினில் ஒழித்தான்;*
*வம்புசெய் தீயர் வலிமையை ஒடுக்கக்*
*கொம்பினை யொடித்தே குணுக்கென் றெறிந்தான்;*
*மூஞ்சூ றாகிய முரடனைக் குமைத்தே*
*வாகன மாக்கி வாகையும் புனைந்தான்.*
*தொட்டது துலங்கா நட்டம் விளைத்த*
*இலக்கண சுந்தரி இடர்களைத் தீர்த்தான்.*

*கணபதி ஓமெனக் கழல்பணி திறத்தால்*
*தேர்கரி குதிரை ஏர்பெற ஊர்ந்தே*
*சுந்தர சேரனார் வந்துறு முன்பே*
*செவ்விய ஞானி ஔவைப் பிராட்டி*
*கயிலை சேரக் கருணை புரிந்தோன்.*
*பதுமவி நாயகன் பதமலர் பணிவோம்.*
*வல்லப கணபதி, வந்தனம் ! வந்தனம் !*
*கொம்பெழுத் தாணி கொண்டுயர் மலைமேல்*
*பாரதம் எழுதிய பண்டிதா போற்றி !*
*வியாசரும் சுகரும் வான்மீகி முனியும்*

*பாசமோ டிசைத்த பரமனே போற்றி !*
*அயில்வேல் பிடித்த மயில்வேல் முருகன்*
*புவிவலம் வருமுன் சிவசக்தி சுற்றி,*

ஞானக் கனிபெறு நம்பியே போற்றி !
பாசம் விலக்கப் பாசாங் குசமுடன்
பத்தியைத் துலக்கப் படிகமா லையுடன்,
மொழிவளங் காட்டும் எழுதுகொம்புடனே,
பூரண முள்ளே பொதிமோ தகமும்,
கொண்ட கரங்களின் கொடைவளம் போற்றி !
மதிரவி யக்கினி மருவுமுக் கண்ணால்

துதியடி யார்க்கருள் சுடரே போற்றி !
காமனை எரித்தோன் கண்மணிப் பிள்ளாய்,
தூமன யோகத் தோற்றமே போற்றி !
பிரம சரியப் பெருந்தகை போற்றி !
அரியநற் சித்திகள் அளிப்பாய் போற்றி !
சூரனை வேலன் சுட்டிடத் துணைசெய்
வீரருள் வீர விசயனே போற்றி !
சுபகா ரியத்தைத் தொடங்கி முடிக்க
முன்னே நிற்கும் முதல்வா போற்றி !
பஞ்சபூ தங்களைப் பலவுருச் செய்தே

அறிவாய் உயிர்க்கும் இறைவா போற்றி !
கதிர்விடு மூலக் கனலே போற்றி !
கதிரவன் உள்வளர் காந்தமே போற்றி !
வினைக்கட் டறுக்கும் விமலா போற்றி !
உயிர்களை யூட்டும் பயிர்வளம் போற்றி !
பயிர்களை யூட்டும் பசுமையே போற்றி !
காண்புவிக் குயிராய்க் காண்பாய் போற்றி !
ஆண்பெண் வடிவம் பூண்பாய் போற்றி !
திருவுல குயிர்கள் ஒருகுல மாக
மருவிடும் அன்பு மருந்தே போற்றி !

ஆண்மை பெருக்கிக் கேண்மை துலக்க,
ஒற்றுமை துலக்கும் ஒருவா போற்றி !
அறமுடன் வளமும் அறிவுடன் பலமும்,
அன்புடன் அழகும், அளிப்பாய் போற்றி !
அழகுடன் கற்பும் அமுதுடன் சுவைபோற்
பழகிடச் செய்யும் பண்பே போற்றி !
யோகமும் சுத்த போகமும் வாழ்வில்
இசையுடன் கவிபோல் இணைப்பாய் போற்றி !
பாட்டுடன் கூத்தும் படமுடன் சிற்பமும்
ஏட்டுடன் எழுத்தென இசைப்பாய் போற்றி !

தங்கமெய்ப் புதல்வரைத் தந்தொளி வளர
மங்கல மனையறம் வளர்ப்பாய் போற்றி !
சோதனை வரினும் வேதனை வரினும்
ஆயிரம் படைகள் அடுத்தடுத் துறினும்
அபய மளிக்கும் அண்ணால் போற்றி !
எதிர்ப்புப் படலம் எத்தனை வரினும்
எடுத்தநற் பணிகளை இயற்றி மகிழும்
வெற்றிக் குயிரே விநாயகா போற்றி !
அமைதியில் ஊன்றி ஆற்றலைப் பெருக்கி,
ஆற்றலை யெல்லாம் அருட்பணி யாக்கி,

எல்லா வுயிர்களும் இன்புற வேண்டி

நல்ல பணிகளை நாட்டுவாய் போற்றி !
ஆவணி சதுர்த்தியில் அருணோ தயத்திற்
பூம்புன லாடிப் புதியது புனைந்து
மந்திரம் ஓதி மறைகளைப் பாடி,
சிந்தனை செய்து சிவமுறத் துதித்து,
வந்தனை செய்து மாமலர் தூவி,
அமுத முடனே ஆத்ம நிவேதனம்,
படைப்போம் இன்பப் பரமா போற்றி !
உள்ளன் பெல்லாம் உனக்கே யர்ப்பணம்,

சிந்தையும் செய்கையும் தெய்வமே யர்ப்பணம்.
பூவெலாம் அர்ப்பணம் பாவெலாம் அர்ப்பணம்.
அருவியும் குருவியும் ஆழியும் தொண்டரும்
பாடும் பாட்டெலாம் பதியே அர்ப்பணம்.
பேச்செலாம் உனது பேச்சே யாகுக !
மூச்செலாம் உனது முயற்சியாய் வளர்க !
நினைப்பெலா முனது நினைப்பென நீளுக !
எழுத்தெலா முன்னை வழுத்திட வெழுக !
வழுத்திடும் வாக்குன் வரமென மிளிர்க.
சிரத்தினில் உன்னொளி திகழுக நன்றே.

கருத்திலுன் கருத்தும் கையிலுன் செயலும்,
காலிலுன் வேகமும் கண்ணிலுன் கருணையும்
நாவிலுன் அருளிசை நற்கவி வளமும்,
மெய்யிலுன் பலமும் வீறுடன் ஊறுக !
இதயத் துனதருள் உதயமா குகவே !
உயிரில் உயிர்க்கும் ஒருவா போற்றி
உன்பசிக் கனலினை ஊட்டுக வுணவே.
நாடிகள் உனது நாதயா ழாகுக !
நரம்பினில் உனது நல்லிசை மீட்டுக !
உதர முன் சக்தி ஓட்டமா குகவே !

மெய்யெலாம் உனது தெய்வ மின்சாரம்
ஏறுக ! சக்தி ஊறிப் பாய்கவே !
அங்கம் உனது தங்கக் கோயிலாம்.
உயிர்வாழ் வெல்லாம் யோகமே யாக
ஏகமாய்ப் பூரண யோகமாய்ப் பொலிக !
யோகத் தாலே போகம் பொலிக !
போகத் தாலுயிர்த் தாகந் தீர்கவே
ஜயகண நாதா ! ஜயகண நாதா !
ஆறா தாரமும் ஆயிர விதழும்
மகாகுண் டலியின் மன்றம தாகுக !

ஓம் சுபமங்கள ஒளியே போற்றி !
ஒளிக்கணம் உலவும் வெளியே போற்றி ;
சிவபுரங் காக்கும் தேவர் தலைவா !
ஒவ்வொரு நாளும் செவ்விய தாக
பூமா லையுடன் பாமா லைசூட்டிப்
பணிந்தோம் காவாய் பரமாக்ஷரனே !
சித்தி அருளாய், சீர்மை அருளாய்,
வித்தை அருளாய், வெற்றி அருளாய்.
சக்தி அருளாய், சமத்வம் அருளாய்.
பக்தி அருளாய், முத்தி அருளாய்.

*விஞ்ஞா னத்தின் விளக்கமே போற்றி ;*
*மெஞ்ஞா னத்தின் வேதமே போற்றி !*
*மரண பயத்தை மாய்ப்பாய் போற்றி !*
*விதியை வெல்லும் மதியே போற்றி !*
*கருத்தினி லினிக்கும் கரும்பே போற்றி !*
*அடியார் துயரங் கடிவாய் போற்றி !*
*அன்பருக் கபயம் அளிப்பாய் போற்றி !*
*இன்ப மளிக்கும் இறைவா போற்றி !*
*ஓங்கா ரத்தின் உட்பொருள் போற்றி !*
*ஔவைக் கருள்செய் ஐங்கர போற்றி !*
*ஞானா னந்த வானே போற்றி !*
*அறிவே போற்றி ! ஆற்றலே போற்றி !*
*இளமையே போற்றி ! எழிலே போற்றி !*
*கண்ணே போற்றி ! கருத்தே போற்றி !*
*விண்ணே வெளியே வியனே போற்றி !*
*விமலா போற்றி ! வித்தகா போற்றி !*
*பொறையே போற்றி ! போதமே போற்றி !*
*கணபதி போற்றி ! கரிமுக போற்றி !*
*குணபதி போற்றி ! குலபதி போற்றி !*
*சித்தி விநாயக சேவடி போற்றியே*

*சரணம், சரணம் ! சதுர்மறை முதல்வா !*
*சரணம் யோகத் தலைவா சரணம்*
*சரணம் ! சரணம் ! சற்குரு மணியே !*

## *5. தீபாராதனை*

*சக்திக் கணபதியே சாதுக்க ளைக்காக்கும்*
*சுத்த சிவஞான ஜோதியே ....... பக்தியுடன்*
*என்னையுனக் கீந்தேன் இறைவா குருபரனே*
*உன்னையெனக் கீவாய் உகந்து.* (1)

*கணபதிஓம் என்று கருத்துருகி நின்றேன்*
*குணபதியே தேனருவிக் குன்றே ....... கணமதனில்*
*தூயநல் லார்க்குத் துணைசெய்வாய் உள்ளத்தே*
*கோயிலிருந் தென்பூசை கொள்.* (2)

*கங்கைபோல் யோகக் கனவு கவியாகப்*
*பொங்கிவரச் செய்வாய் புனிதனே ....... சங்கரனார்*
*சேயே அருட்சோதித் தெய்வமே உய்வருளும்*
*தாயேநின் அன்புவரந் தா.* (3)

*வேத விநாயகனே வெற்றிக் கதிர்பரவுஞ்*
*சோதி விநாயகனே தொண்டர்தொழும் ....... ஆதிசுத்த*
*சத்திச் சுடரேஓம் சச்சிதா னந்தபர*
*முத்திபெற முன்னின் றருள்.* (4)

## 2. நடராஜ உபாசனை



மேலே பாருங்கள். வான் வட்டம் ....... அது நீலக்கூடாரம் போல விரிந்துள்ளது. அந்த அகன்றவெளியில் எத்தனையோ கோடிக்கோடி நட்சத்திரங்கள் மிளிர்கின்றன; கிரகங்கள் சுழல்கின்றன; எண்ணுக்கடங்காத நுண்ணிய அணுத்திரள்கள் அதிர்ந்தோடுகின்றன. இப்பெரிய வான் சூழ்ந்த உலகம் மாபெருங்கோயில். இக்கோயிலில் ஒரு சுத்த சிற்சக்தி நிரம்பி யிருக்கிறது. அந்தப் பரமசக்தியால் உந்தப்பட்டது மாயாசக்தி .......மாயாசக்தி உலகை விளையாட்டுகிறது. அணுக்களை மோத விட்டு, கூட்டியும் பிரித்தும், சேர்த்தும் வகுத்தும் தொகுத்தும், பல அற்புதக் காட்சிகளை விளக்குகிறது. அண்டமெல்லாம் அணுக்களின் ஆட்டமே. ஆகாசமே அணுக்கூட்ட விரிவுதான்; அதனின்று காற்று, கனல், நீர், நிலம், பயிர், உயிர் எல்லாம் போந்தன. எல்லாம் அணுத்திரளின் பெயர் வடிவ பேதங்களே. சடமான அணுக்களின் கருவில் சித்தானசக்தி ஆடுகிறது ....... சடமான உடலில் சித்தான ஆன்மசைதன்யம் ஆடுகிறது; இந்த ஆட்டமே உயிர் ஓட்டம். அண்டபிண்ட சராசரங்களெல்லாம் வானளாவிய சிற்சபை; அச்சபையில் நடன மாடும் சுத்தசக்திமயப் பொருளே நடராஜனாம்; உலகமெல்லாம் நடராஜ லீலையேயாம். ஆண் ....... பெண் வாழ்வெல்லாம் சிவசக்தியாடலே.

ஒவ்வொன்றிலும், ஒவ்வோர் உயிரிலும் உள்ளமாய், உள்ளத்தின் உள்ளே நின்ற கருவாய், உயிர்க்குயிராய் நடமாடுவது சுத்தசிவ சக்தி ....... அதைத்தான் நடராஜாவாக நமது நாட்டுத் தவயோக சித்தர் உருச்செய்தனர்.

நமது புண்ணிய பூமியின் தனிப்பெருஞ்செல்வம் ஆத்மீக அருட்செல்வம் ....... அந்தச் செல்வச் சிற்பிகளே நமது யோக முனிவர்கள். இவர்கள் ''அவனருளே கண்ணாகக் கண்டு'' உயிராவணம் இருந்து, உற்று நோக்கி உள்ளத்துணர்ந்து உருவெழுதி நமக்குக் கடவுளை உணர்த்தினர்.

கடவுள் என்பது சடமான உடலையும் மனதையும் கடந்து, மாயைப் பொறிகளான தத்துவங்களையும் கடந்து, (ஆன்ம தத்துவம் 24ம், வித்தியா தத்துவம் 7ம் தாண்டி) சுத்தவித்தை, ஈசுரம், சதாக்கியம் ஆகிய நிலைகடந்து சுத்தசிவ சக்தியாயிருக்கும் ஓர் அறிவுணர்வேயாகும். அந்த அறிவான தூய சிற்சக்தியே ஐந்தொழில் புரிகிறது.......சுத்த சிவம் சாட்சியாயிருக்கிறது. அது வான்போன்று நின்ற கோலமாயிருக்கிறது.

இயற்கையுலகிற்கு மேல் விரிந்த வானைப்பாருங்கள் ....... அதுவே சுத்தசிவத் தோற்றம்; அதையே இலிங்கமாக உருச்செய்தனர் யோக முனிவர். அருவான அறிவுப் பொருளுக்கு உருவான விளக்கமீந்து ஆகாயத்தைக் காட்டினர் முனிவர். சிதாகாசத்தில் உணர்வாகும் பரம் பொருளுக்கு எல்லையற்ற ஆகாயத்தையே ஆதாரமாக, உருவாகக் குறித்தனர். ஆகாயத்திலிருந்தே காற்று, கனல், கதிரவன், மதி, மழை, மண், பயிர், உயிர் எல்லாம் போந்தன. இத்தன்மையைக் குறிக்கவே நடராஜாவை உருச்செய்தனர் நம் பெரியோர். அது இதயக்குகையில் இருளைப் பிளந்து ஒளி மயமாகச் சுடரும் கருத்தையே குகனாக, முருகனாக உருச்

செய்தனர். முருகன் என்பது சுழுமுனைக் கனல்; அது நெற்றியில் ஆறு பட்டையாயிருக்கும். அதன் ஒருபுறம் வள்ளி என்னும் இடாநாடியும் மற்றொருபுறம் தெய்வயானை என்னும் பிங்கலை நாடியும் உள்ளன. தீவிரமான செயற் பிழம்பாக எழுந்த ஷண்முக சக்தி அசுர பலங்களை ஒழித்து அமரத்தன்மை தருகிறது. இருளை ஒழித்து அருளைத்துலக்குகிறது. இப்படி நிகழும் ஐந்தொழிலுக்கும் சாட்சியாக மௌனமாக தட்சிணாமூர்த்தம் உள்ளது. தத்துவங்கள் சுத்த சக்தி விளக்கமாக எழுந்து செயல் புரிந்து, முடிவில் சுத்த சச்சிதானந்த மௌனத்தில் கலந்து போகின்றன.

ஆதலால் இலிங்கம், நடராஜா, முருகன், திருமால் தட்சிணாமூர்த்தி ஆகிய தெய்வ வடிவங்களெல்லாம் ஒன்றே. எல்லாம் சுத்த சக்தி மோனத்தில் எழுந்து சுதந்திர சக்தியாக விளையாடி அகண்ட சமத்துவ சக்திக் கடலில் கலந்து மகாதுரிய சாந்தத்தில் லயமாகும்.

உலகில் நாம் எத்தனையோ நினைக்கின்றோம், கற்கின்றோம் கேட்கின்றோம்; மனவேறுபாட்டால் "கடபுட" வென்று சத்தமிட்டு வாதாடுகின்றோம். சாதிசமய சாத்திர கோத்திர பேதங்களைக் கொண்டு மனிதசமுதாயத்தைப் பிரிவினைக் கந்தலாக்குகின்றோம். எல்லாம் ஆணவச் சூழ்ச்சி, ஆசைப் புயல், மனவிகாரத் தினவினால் விளைவன. அமைதியாக உள்ளிருந்து நோக்கினால் ஒரு ***சின் முத்திரை*** தோன்றும். "ஏ மனிதா ஆணவம், மாயை, கன்மம், காமம், வெகுளி, மயக்கம், மனமொழி மெய்யழுக்குகளை விட்டொழி; உள்ளே தியானம், உரையில்மோனம், செயலில் நிட்டைகூடி அமைதியாயிரு" என்று ஜீவசாட்சி கட்டளையிடும். இன்ப நிட்டை கூடும்.

இந்த இன்ப நிட்டையின் சாதனங்களையும் அதனால் வரும் சொரூப சித்தியையும் நடராஜ வடிவம் காட்டி நிற்கிறது. நமது சமயத்தை அறியாதார் கூட நடராஜாவுக்குக் கலை மதிப்புத் தந்து போற்றுகின்றனர். நமது நாகரிகமும் கலைப்பண்பும், அருட்செல்வமும், யோக ரகசியங்களும், நமது வேதாகம சாதனங்களும் நடராஜ வடிவைச் சுற்றி அமைந்துள்ளன.

நடராஜன் அருள்பாலிக்கும் சிதம்பரத்தை நினைத்தாலே உள்ளம் சிலிர்க்கிறது. சித்¸அம்பரம் ஸ்ரீ சிதம்பரம். சித் என்றால் ஞானம்; அம்பரம் என்றால் ஆகாயம் ....... சிதம்பரம் என்றால் ஞானாகாசமாகும். அதுவே தில்லை, அதுவே சுத்த சக்திமயமான திருச்சித்தம்பலம். "கோயில்" என்றாலே சிதம்பரத்தைக் குறிக்கும். இக்கோயில் ஆதார ரகசியங்களையும், 60 புறத்தத்துவங்களையும், 36 அகத்தத்துவங்களையும், சிவசக்தி யோகசித்தியையும் தன்னுட் கொண்டு வேதாகமங்களுக்கே ஒரு சிற்ப விளக்கமாக அமைந்தது. இதில் ஐந்து திருச்சபைகள் உள்ளன. அவை சிற்சபை, கனகசபை, நிருத்தசபை, தேவசபை, ராஜசபை என்பனவாம். சிற்சபையில் நடராஜக் கோலத்தைப் பார்க்கப் பார்க்க ஆனந்த வெள்ளம் அலைபுரண்டோடுகிறது. அருவான சிதாகாசத்தில் உருவான அம்பலத்தரசன் எழுந்து நிற்கிறான். வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி ஊனாகி உயிராகி நின்ற ஒருவனே அவன். ஒப்பில் அப்பன் மனவிருளைப் போக்கும் ஞானஜோதி, கற்பனை கடந்த அற்புதக் கோலம்; சிற்பர விளக்கம்.

செழும் பொன் பொலியும் அழகன், மாணிக்கச் சுடர் மேனியன், கூற்றறியாக் கோமான், பிறவாப் பெரியோன், அனாதிமுத்தன், அன்பர் உள்ளத்தில் கோயில் கொண்ட அருட்சோதி,, தோன்றாத் துணையாகி எம்மைக் காக்கும் தோழன், சிவகாமி மணவாளன், கருணையே வடிவான கண்ணுதல் ....... அவனை எப்படித்துதிப்போம் ? தில்லைத் தெருத்தூசி திருவடியார் அடித்துகள். தில்லைக் காற்று திருவாக்குகளின் பூங்குழல் ! தில்லையை நினைத்தால் அருட் கண்ணீர் துளும்பும். நெஞ்சில் ஆனந்த அமுதூறும். வேதாகமப் புலவர், பதஞ்சலி,

*வியாக்ரபாதர், திருவுடைஅந்தணர், அபிமன்யு, வியாசர், சுகர், சௌனகர், சூதர் முதலிய முனிவர் கூட்டம் தில்லையப்பனை வழிபட்டது. திருமூலர் திருமந்திர விளக்கம் இங்கே கண்டு அடங்கினார்.*

*சித்தம்பலக் கிழவனாய் வந்து திருவாசகம் பாடுவித்தான் நடராசப் பெருமான். மாணிக்கவாசகம் பஞ்சாட்சரப் படியில் இருந்தது. அதன் பொருளை விளக்கினார் மாணிக்கவாசகர். எப்படி? "இதுவே பொருள்" என்று நடராஜ சிவத்தின் அருளில் மறைந்தார். இப்படியே சிவஜோதியில் மறைந்து போக நமது சீவன் துடிக்கிறது. உள்ளத்தான் அருளும் வாக்கை உலகிற்கு எழுதித்தந்து அவன் அன்பு வெள்ளத்திற் கலந்து போகவேண்டும். தூக்கிய திருவடி நிழலில் வீடுகொண்டு நடனச்சிலம்பொலி பருகிப்பருகி டமருக ஓங்காரம் கேட்டுக் கேட்டு, சிற்கனற் சோதியில் கற்பூரம் போல மறைந்துபோக ஆன்மா முறையிடுகிறது.*

*'எப்போது வந்தாய், வா அன்பா. அபயந்தருகிறேன் எனது தூக்கிய திருவடி நிழலில் இரு' என்று உபசரிப்பது போலிருக்கிறது நடராஜ முகம்.*

*"பரிதிவாழ் ஒளியாப்பாதமே யல்லாற் பற்று நான் மற்றிலேன் கண்டாய்" என்று அடைக்கலம் புகுமின், கருணையே நோக்கிக் கசிந்துளம் உருகுமின். அவனொடுங் கலந்து வாழ்வீர் ! ஐந்தொழில் முதல்வனைப் பாரீர் ! டமருகம் ஆக்கமாம் நாதமொலிக்கிறது. அளித்தல் அபயக் கரத்தில் விளங்கும், தீ அழித்தலைக் குறிக்கும். ஊன்றிய பாதத்தில் மறைப்பும் தூக்கிய திருவடியில் அருளலும் விளங்கும்.*

*இந்த ஐந்தொழில் நடனத்தால் திருஆட்சி, அருளாட்சி உலகில் நடக்கிறது. நடனப் பெருமான் அங்கமெல்லாம் யோக சித்தி விளக்கமேயாகும். யோகத்தின் முதற்படி ஜபசாதனம். அதனால் ஓங்காரநாதம் கேட்கும். ஓமிலிருந்து எல்லா மொழிகளும் போந்தன. அதை டமருகம் குறிக்கிறது. ஜபசாதனத்தால் மனம் தூயதாகி ஜீவசுத்தி எய்தியதும் குண்டலிக்கனல் கொழுந்தேறும். அதையே இடக் கையில் ஏந்திய கனல் குறிக்கிறது. திருமுடியில் உள்ள கங்கை உடல் குளிர, உயிர் குளிர, உளங் குளிரப் பாயும் தெய்வ சேதனத்தைக் குறிக்கிறது. மதி, இரவி, கனல் ஆகிய மூன்றும் இடாபிங்கலா சுழுமுனை நாடிகளின் சேர்க்கையைக் குறிப்பன. புருவ நடுவே அவை ஒன்று கூடும்போது மஹா குண்டலி விளக்கமாகும். அதிலேதான் சக்தி சிவத்துடன் ஐக்கியமாகி சுத்தசக்தி மயமாக விளக்கும். அதன் சாதனத்தையே திருவடிகள் விளக்குகின்றன.*

*நடராசப் பெருமானுக்கு ஆருயிர் முற்றும் அடைக்கலமாக வேண்டும். நம்மைக் கொடுத்தால் தன்னைக் கொடுப்பான். எனது யான் அற்றால் நம்மைத் தனதாக்கிக் கொள்வான் தயாபரன்.*

*அடைக்கலம் நிறைவானதுமே இறைவன் ஊன்றிய திருவடியால் ஆணவமலத்தை நசுக்கி அசுரத்தன்மைகளை அழித்தொழித்து பெத்தான்மாவைச் சுத்தான்மா ஆக்குகிறான். பிறகு தூக்கிய திருவடி நிழலில் அதைச் சேர்க்கிறான். அபயக் கரத்தால் ஆன்மா உய்வதற்கு வேண்டிய சக்திகளைத் தருகிறான்.*

*அபயக் கரத்தைக் கண்டதும் ஆன்மாவின் அச்சம் விலகும். தூக்கிய திருவடியைப் பிடித்ததும் ஆன்மா தாக மோக வேகங்கள் ஆறி அமைதியின்பம் பெறும். அதனால் பிறவாமுத்தி கிடைக்கும் தில்லை சேர்வோம்; இல்லைபிறவி, நினைப்பவர் மனம் கோவிலாய்க் கொண்ட நடராஜனைத் "தினைத்துணைப் பொழுதும் மறந்துய்வனோ ! " என்று அப்பர் பாடுகிறார்.*

*நடராஜாவின் குஞ்சிதபாதத்தைத் தியானித்தாலே போதும்; அதன்கீழ் எப்போதும் குடியிருப்பதாக உணர்ந்தாலே போதும். மாணிக்கவாசகர் அவ்வாறுணர்ந்து "நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க !" என்று*

வாழ்த்தெடுத்தார். ஆதியாம் பாதமலர், அந்தமாம் செந்தளிர்கள், தோற்றமாம் பொற்பாதம், போகமாம் பூங்கழல்கள், ஈறாம் இணையடிகள், காணற்கரிய தாமரைப் பாதம், உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்களைப் போற்றி செய்கிறார் மணிவாசகப் பெருமான். நாயன்மார்கள், திருமூலர், பட்டினத்தார், தாயுமானார், அருட்சோதி வள்ளலார் அனைவரும் அந்த அற்புத நடனக் கோலத்தை உபாசித்தே உய்தனர். யானும் உய்தேன். சிறுவயது முதல் நடராஜப்பெருமானைப் பாடியே உணவு கொள்வது வழக்கம். அப்படிப் பாடிய பாடல்களே இன்று அச்சேறி உலகில் நடம்புரிகின்றன.

எனக்கருளிய தில்லையப்பன் உமக்கு அருள இதோ அபயக் கரம் காட்டி நிற்கிறான். வாருங்கள் ....... நினைந்து நினைந்து உணர்ந் துணர்ந்து அன்பு நிறைந்து வாருங்கள். முறுவல் பூத்த முகமலர் காணீர். அபயக்கரங் காணீர் ! தூக்கிய திருவடி துணையென நம்புவீர். மனிதப் பிறவியின் பயன் மன்றிலாடும் மாணிக்க ஜோதியைக் கண்டு கலப்பதேயாகும். ஐம்புலனும் அவனை உணர்க ! சிந்தை நினைக ! ஆன்மா அணைக ! ஆனந்தம் பெறுக! சீவன் சிவமயமாகுக !

இந்த ஆனந்த நடனக் காட்சியை நாம் எப்படிச்சொல்லால் விளம்ப முடியும்? உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய நடராஜனை எல்லாரும் உபாசிக்க வேண்டும். அதற்கு மந்திரம்: ஓம் நடராஜ சிவம் ....... நடராஜபரம் ....... நடராஜ ஜயம் என்பது. இதை உண்ணும் போதும் உலவும்போதும் உறங்கும்போதும் எப்போதும் எண்ணி உருகுக ! இதயத் துடிப்பும் மூச்சும் ஓம் சுத்த சக்தி சிவ மந்திரமாகுக!

## 1. தியானம்

அம்மை யப்பன் அருட்பெருஞ் ஜோதியான்
எம்மை யாளும் இறைவன் குருபரன்
தம்மைத் தந்தவர் தாபந் தணிப்பவன்
செம்மல ரடியைத் தினம்சிந் திப்பாம்.

குருவடி வாக வந்தெமக் கின்பங்
    கொடுத்திடுங் குணநிதி போற்றி !
கருணையால் எங்கள் கடமையில் வெற்றி
    காட்டிடுங் கடவுளே போற்றி !
ஒருமையில் ஓங்கும் யோகியர் காணும்
    ஒளிவளர் சுத்தனே போற்றி !
திருவருளன்பர் உளத்திலே நடஞ்செய்
    சிவநட ராஜனே போற்றி !

சிறப்பிலாத் தீமை நீங்கும்; சிந்தையில் வந்தி னிக்கும்;
பிறப்பினைப் பெருமை யாக்கும்; பேரின்பச்செல்வம் நல்கும்;
இறப்பிலா வாழ்வு சேரும்; இதயம் வாழ் ஈசனாரை
மறப்பிலா தெந்த நாளும் மனதுற வணங்கு வோமே !

இருளிட ரச்சந் தீரும்; இகபர சுகங்கள் ஓங்கும்;
திருநெறி வாழ்க்கை சேரும்; தீயவர் பகைமை வீழும்;
ஒருமையில் உள்ள மொன்றும்; ஒற்றுமை யுலகி லாகும்;
அருளொளி காட்டுந் தில்லை அப்பனை வணங்கு வோமால் !

## 2. நடராஜா அர்ச்சனை

*ஓம்சிவ குருவே, ஓம்நட ராஜா,*
*ஓம்பரம் பொருளே, உனைச்சரண் புகுந்தோம் !*
*வணக்கம், வணக்கம், வாய்மையே வணக்கம்;*
*வாய்மனங் கடந்த தூயா வணக்கம்;*
*துரியா காச விரிவே வணக்கம்;*
*ஞானம் பரந்த வானே வணக்கம்;*
*சச்சிதா னந்த சற்குரு வணக்கம்;*
*ஓமில் அகரமாய் ஒலிப்பாய் போற்றி,*
*சூரிய னுள்வளர் சுடரே போற்றி,*
*தீயுள் வளருந் தேசே போற்றி !*

*கார்மழை யாய்வருங் கருணையே போற்றி.*
*உலகெலாங் கோயில் உடையாய் போற்றி,*
*உயிரெலாம் உடலாய் உடுத்தாய் போற்றி,*
*ஒப்புயர் வில்லா ஒருவனே போற்றி,*
*பன்மையாய் விளங்கும் ஒருமையே போற்றி,*
*எப்பொரு ளுக்கும் இறைவா போற்றி !*
*எம்மதத் திற்கும் இசைவாய் போற்றி,*
*சைவம், வைணவம், சாக்தம், கிறிஸ்தவம்,*
*இஸ்லாம் ஆகிய எம்மதத்திற்கும்*
*சம்மத மான சாட்சியே போற்றி !*

*அரன்மால் அயன்குகன் அல்லா பிதாவெனப்*
*பலமதம் போற்றும் பரமா வணக்கம் !*
*எனதென தென்றே யிறுமாந் திடர்செய்*
*வெறியர் காணா வித்தகா போற்றி,*
*அன்பு காட்டும் அற்புதா போற்றி,*
*இன்பமே யியல்பாம் ஏகனே போற்றி,*
*துன்பந் துடைக்குந் துரையே போற்றி,*
*அடியார்க் குதவும் அருளே போற்றி*
*அருவாய், உருவாய் குருவாய், பிறவாய்,*
*எப்படி யன்பர் எங்கே நினைக்கினும்,*

*அப்படி யாங்கே யக்கணம் அருளும்*
*தோன்றாத் துணையே, துரியப் பொருளே,*
*புலன்களுக் கெட்டாப் போதமே போற்றி !*
*உயிரும் உடலும், உள்ளும் புறமும்,*
*உலகும் வானும் இலகும் ஒருவா,*
*விண்சுட ரான கண்மணி போற்றி !*
*மொழியெலாம் பிறந்த ஒலியுரு போற்றி !*
*அகமெலாம் பொலியும் முகமலர் போற்றி,*
*தீதை யெரிக்குந் தீஞ்சுடர் போற்றி,*
*வசீகர மான மலர்நகை போற்றி,*

*கங்கை பொங்குங் கதிர்முடி போற்றி*
*மதிவளர் சாந்த மலையே போற்றி*
*அபய மளிக்கும் அருட்கை போற்றி,*
*திருவடி காட்டுஞ் செங்கை போற்றி,*
*ஆணவம் போகவே யழுந்தடி போற்றி,*
*உய்யத் தூக்கிய மெய்யடி போற்றி,*
*இதயந் தோறும் பொதுநடம் போற்றி,*

*ஐந்தொழில் புரியும் ஐயா போற்றி,*
*சிற்சபை தன்னிற் செய்திரு நடத்தால்*
*செகவிளை யாடல் செய்வாய் போற்றி !*

*நெறியிலா நெறியிற் பொறிவழி செல்லும்*
*அடியரைத் தடுத்தாள் அப்பனே போற்றி !*
*காணா விடினுங் கண்டுகொண் டிருக்கும்*
*உயிர்க்குயி ரான உட்பொருள் போற்றி !*
*அப்பனே, உன்மல ரடியே துணையாய்*
*உன்னரு ளாட்சி யுலகில் விளங்கவே,*
*உன்பெயர் சொல்லி, உண்மை யான*
*பொதுநலப் பணிகள் புரிந்து வருகிறோம்;*
*நாடு வாழ நல்வினை தொடர்ந்தோம்;*
*பணியும் பயனும் பரமா உனக்கே !*

*வெற்றிமேல் வெற்றி விளைப்பாய் போற்றி;*
*பாதகப் பகைவரும் சாதக மாகத்*
*திருந்தி வரவே செய்வாய் போற்றி !*
*அலைமனம் அடங்கும் அமைதி யருளாய்;*
*சித்தம் நிலைக்கச் சிவக்கன லருளாய்;*
*பக்தி யோங்கும் பரிசெமக் கருளாய்;*
*சஞ்சலப் பேய்களைச் சாடி யழித்தே,*
*கவலைக் கல்லைக் கரைத்தருள் புரிவாய் !*
*பொறாமைப் புல்லர் வராது விரட்டுவாய் ;*
*அச்சமும் கலக்கமும் துச்ச நினைவும்,*

*அரக்கர் வஞ்சமும் அதர்மப் பதர்களின்*
*சூதும் வாதும் சூழ்ச்சியும் பொய்யும்,*
*அன்புச் சோலையுள் அணுகா தருள்வாய் !*
*உன்னருட் பணிக்கே உயிர்க்கும் எங்கள்*
*உடலும் மனமும் உறுதி பெற்றே,*
*ஆற்றலும் ஆயுளும் ஆத்தும சக்தியும்,*
*சுத்தசன் மார்க்கச் சுதந்தர வாழ்வும்,*
*அருளும், அருட்பணிக் காகிய பொருளும்.*
*அன்பும் பெருகும் இன்ப மருள்வாய் !*
*தியாக வீரராய், யோக தீரராய்,*

*பூரணம் பெற்றுப் பூரணம் பரப்பும்*
*அமரராய், உன்னருள் ஆலய மான*
*உலகிற் கின்ப நலஞ்செய வருளாய் !*
*தூயனே, உன்னைத் துதித்துப் பணியும்*
*அடியார் குழுவில் அமர்ந்திட வருளாய் !*
*அப்பரைப் போலே அன்புப் பணியும்,*
*பாலறா வாயர் போலவுள் ளறிவும்,*
*சுந்தரர் போலே செந்தமிழ்ச் சொல்லும்,*
*"இது பொருள்" என்றுனை இரண்டறக் கலந்த*
*மணிவா சகர்போல் மாசறு காதலும்,*

*அம்மையார் போலே அருளடி நேயமும்*
*ஔவையார் போலே செவ்விய மதியும்,*
*திருமூ லர்போற் செழுந்தவ யோகமும்.*
*மெய்கண் டார்போல் உய்நெறி விளக்கமும்,*

*பட்டினத் தார்போற் பழுதறு துறவும்,*
*வள்ளுவர் போலே இல்லறப் பண்பும்,*
*தாயுமா னார்போல் ஆய்ந்தவுள் ளமைதியும்,*
*வள்ளலார் போலே தெள்ளருட் சோதியும்,*
*ஆழ்வார் போலே அடைக்கல வுறுதியும்,*
*சங்கரர் போலே சகசாத்ம சித்தியும்,* 100

*வியாசர் போலே வியன்பெறு புலமையும்*
*கம்பன் போலே கவிதைக் கலையும்*
*காளிதாசனின் கனிசொல் வளமும்*
*வேதமுனிவரின் வித்தகச் செல்வமும்*
*கண்ணன் யோகமும் ராமன் வீரமும்*
*எங்களுக் கருளியுன் னிச்சையை நடத்தாய் !*
*அறிவதெல் லாமுன் அருளின் அறிவே;*
*புரிவதெல் லாமுன் பூரண சக்தியே;*
*நமச் சிவாயஓம் நமச் சிவாயஓம் !*
*ஆண்டவா, சிற்சபைத் தாண்டவா போற்றி !*
*ஹர ஹர சங்கர, அம்பல வாணா !*
*போற்றி போற்றியுன் பூங்கழல் போற்றி !* 112

### 3. தீபாராதனை

1. *உலகெலாம் அன்பு மேவி ஒருகுல மாக வாழ்க !*
*கலகமுந் துயரும் வீழ்க ! கருணையுங் களிப்பும் பொங்க,*
*நலமெலாம் விளைய, ஞான ஞாயிறு பொலிய நாளும்*
*இலகுவாய் சுத்த ஜோதி ! இறைவனே போற்றி போற்றி!*

2. *ஒள்ளிய துரிய வானில் ஓங்கிடுஞ் சோதி வாழ்க !*
*தெள்ளிய ருள்ளே யன்பாய்த் திகழ்பரஞ் சோதி வாழ்க!*
*உள்ளமே தில்லை யாக ஓமொலி இசைய தாகத்*
*துள்ளிநின் னடன மாடும், தூயசிற் சோதி வாழ்க !*

**ஓம் ஓம் ஓம் !**

## 3. முருகன் வழிபாடு



## 1. முருக தத்துவம்

*அரு, உரு, குரு ஆகிய மூன்று பாவனையில் அன்பர் இறைவனை வணங்குவர். ஆர்வமுடன் எதைச் செய்தாலும் நன்மை கிடைக்கும். மனம் ஒன்றில் ஈடுபட்டுயர உருவ வழிபாடு வேண்டும். நண்பனொருவனுடைய*

*படத்தைப் பார்த்தால், அவன் நினைப்பு வருகிறது. ஊகமாக எழுதிய சிவனுருவைக் கண்டால், மனம் சிவன் பெருமையை நினைக்கிறது. நடராஜாவைப் படத்தில் பார்த்தாலும் உள்ளஞ் சிலிர்க்கிறது; எத்தனையோ தத்துவப் பொருள்கள் முன்னே நிலவுகின்றன ! சிவன், திருமால், முருகன், சக்தி, கணபதி ஆகிய தெய்வ வடிவங்களை நம்மவர் பல்லாயிரம் ஆண்டுகளாக வழிபட்டு வருகின்றனர். தமிழகத்தில் முருகனை வழிபடும் அன்பர் பெருந்தொகையினர் உளர். மயில் வேல் முருகனை நினைத்தால் ஆவேசங்கொள்ளாத தமிழரில்லை.*

*'முருகன்' என்று நாம் வணங்கும் பொருள் சிவஜோதிக் கனலே ! சிவனைப் போலவே முருகனும் பிறப்பிறப்பில்லாத நித்தியப் பொருள்; புராணங்களில் சொல்லும் பிறப்பும் தத்துவார்த்தங் கொண்டதே. மனிதனிடம் தெய்வத் தன்மையான அன்பு, உண்மை, அருள், இரக்கம், அறம், தீரம், ஞானம், சாந்தம், பொறுமை, தியாகம், அஞ்சாமை, முதலியவை உள்ளன. இவற்றால் அவன் என்றும் இன்புறலாம். அதே மனிதனிடம் பொய், கோள், பொறாமை, சிறுமை, அகம்பாவம், நிந்தனை, நாத்திகத் திமிர், சுயநலப் பேராசை, திருட்டு, வஞ்சனை, மோசம், கொலை, கொடுமை முதலிய அசுரத்தன்மைகளும் உள்ளன. மனித மனம் இந்த இருவினைப் போராட்டமே. பண்படாத மனத்தில் அசுரத்தன்மைகள் அழிநடம் புரிந்து வாழ்வைப் பாழாக்குகின்றன. உலகில் நடக்கும் போர்களெல்லாம், போர்களை ஊக்கும் அசுரர்களெல்லாம், இந்தத் தீய மனத்திற் பிறந்தவர்களே. மனந் திருந்தினால் இனந் திருந்தும். அசுரக் கொடுமை தாங்காமல் தெய்வத் தன்மைகள் சுத்த ஜோதி மயமான சிவனிடம் முறையிடு கின்றன. சிவன் தனது சக்தியைத் துலக்கித் தனது ஆன்ம வீரியக் கனலையே முருகனாக விளக்குகிறான். முருகன் அசுரப் படைகளையும், அகம்பாவச் சூரனையும் வென்றடக்கி, தெய்வத் தன்மைக்குச் சுதந்தரமளிக்கிறான். சிவக்கனலால் தீமையை அழித்து நன்மையை விளக்குவதே, சூரபத்மனுக்கும் முருகனுக்கும் நடந்த போரின் உட்கருத்தாகும்.*

*மனிதன் அறிவு, அழகு, எழில், இளமை, இன்பம், வீரம், ஆற்றல் ஆகிய இவற்றை வேண்டுகிறான். இவற்றின் வடிவே முருகன். ஞான சக்தியே வடிவேல். இச்சா சக்தியும் கிரியா சக்தியுமே வள்ளி தெய்வானைகள். சிவக்கனலாகிய முருக தத்துவம் ஒவ்வொருவர் புருவ நடுவிலும் ஆறுபட்டையுள்ள ஒளியாகக் காணும். அதையே யோகிகள் ஆறுமுகமாக உருச்செய்தனர். துரிய நிலையான மலைமேல் சுந்தர வீரவடிவாக, அபயக் கரங்காட்டி, அச்சமொழிக்கும் வேல்சக்தியுடனிலகும் சுப்பிரமணியனை, சுந்தர மூர்த்தியை, எம்மதத்தினரும் வழிபட்டுப் பயனெய்தலாம். உருவாகப் புறவழிபாடு செய்ய முடியாதவர்கள், அருவாக உள் வழிபாடு செய்க.*

## 2. முருகனை வழிபடு முறை

*வழிபாடு என்றால் அருள் வழியே நடப்பது என்பது பொருள். முருகன் அருளைப் பெறும் வழியே ஒழுகுவதுதான் சிறந்த வழிபாடாகும். ஓர் அரசன் அன்பைப் பெற வேண்டு மானால் அவனுடைய சட்ட திட்டங்களை மதிக்க வேண்டும்; நம்பிக்கையாக நடக்க வேண்டும். முருகன் அரசருக்கரசன். மேற்சொன்ன தெய்வத் தன்மைகளே அவன் சட்டம். அசுரத் தன்மைகளை விலக்கி, அன்பு, கருணை, அமைதி, அறிவு, ஆர்வம், நன்றி, வீரதீர பராக்கிரமம் ஆகிய தெய்வத் தன்மைகளை வளர்க்க வேண்டும். மனம், மொழி மெய்த் தூய்மையும், வாய்மையும் வேண்டும். இவற்றுடன் முருகனை உள்ளே மனங்குவிந்து தியானித்து, இந்நூலிற் கண்ட வழிபாடு வணக்கங்களை*

*மானசிகமாகச் சொல்லி வந்தாலே போதும். மனங்குவிந்து ஏகாக்கிரப்படுவது எளிதன்று. குடிகாரப் பேய்க் குரங்கு போல மனம் துள்ளும். அதை அடக்கச் சில நியமங்கள் வேண்டும். எதிரே ஓர் உருவம் முதலில் வேண்டும். அழகான முருகன் படம் அல்லது சிலை, அல்லது கோயில் சந்நிதி போதும். இவற்றின் துணையால், இதய முருகனையே கருத வேண்டும். நண்பன் படத்தைக் காண்கிறோம்; காகிதமன்று, வர்ணமன்று; படம் எதைக் குறிக்கிறதோ, அப்பொருளே நண்பன். அதுபோல் உருவின் பொருளே முருகன். இப்பொருளை வழிபடுவோர், மனத் தூய்மையும் அதற்குதவியான உடற்சுத்தமும் காக்க வேண்டும். அசுத்தமான உடலில் மனம் ஒருமை யுறாது. அசுத்தச் சுற்றத்தில் ஆபாச எண்ணங்களே எழும். ஆதலால், தூய அழகிய மலர்வனக் காட்சியமைந்த கோயில்களில் அல்லது தனி அறைகளில் முருகோபாசனை செய்க. உடம்பு நன்றாகக் குளித்து, புத்தாடை யணிந்து, அவரவர் விரும்பிய சமயச் சின்னங்களைப் பூண்டு, திருவிளக்கேற்றி, மணப்புகை எழுப்பி, சுத்தமாக உருமுன் அமர்க; முதலில் முருகனை ஆவாகனம் செய்ய, ஆர்வத் துடிப்பை முரலுக; பிறகு முருகனைக் குகமந்திரஞ் சொல்லி சுத்தம் செய்தல், துடைத்தல், பொட்டிடல், அன்பு செய்தல் முதலியன நடக்கட்டும். பிறகு நாண்மலர்களால் அருச்சனை மந்திரஞ் சொல்லிப் பூசிக்கவும். பிறகு சூடம், சாம்பிராணி காட்டி, முருகனைத் தியானிக்க உபாசனை மந்திரஞ் சொல்லுக. முருகன் எதிரே அல்லது உள்ளத்தில் ஜோதிக் கனலாக எழுந்ததாய் உணர்ந்து, ஆவேசமாக அன்பு சொல்லி "ஓம் சிவஷண்முகா, சரவணபவனே, நீயே துணை" என்று வழிபாட்டை முடிக்கவும். கனிகள், உணவுகள் நிவேதனம் செய்யும் போதும் குகமந்திரமே சொல்லலாம்; அல்லது தன்னையே நிவேதிக்கலாம். வாழ்வெல்லாம், நினைவு மொழி செயலெல்லாம், அவன் மயமாகி அவனுக்கே வழிபாடாக வேண்டும். மறவாது நினைத்தால் இறைவன் அருளுவான். வழிபாடு உள்ளே அமைதியாகத் தியானத்தில் நடக்க நடக்கப் பயன் அதிகமாகும். 'சிவமுருகா ஓம், ஓம் சிவஷண்முகா, சரவணபவ ஓம், ஓம் வடிவேலவா' என்பன முருக மந்திரங்கள்; இவற்றுள் ஒன்றை, காலை மாலை 108 ஜபித்துவர அருள் பெருகும்.*

## 3. ஆர்வத் துடிப்பு

*ஆசை துடிக்கவுள் ளார்வந் துடிக்கவுனைப்*
*பூசை புரிந்தேன் புலவனே ....... தேசுமிகு*
*கந்தா, கடம்பா, கலாப மயில்மேலே*
*வந்தாள் வடிவேல வா !* (1)

*நின்னை நினைக்க, நினது புகழ்பாட,*
*நின்னையே யானாக நேசிக்க ....... என்னையே*
*முற்று மளித்தேன், முருகாவுன் காதலே*
*பற்றிப் பிதற்றுமெனைப் பார் !* (2)

*அன்பு முருகா, அருண கிரிக்குதவும்*
*இன்ப முருகா, இளமுருகா ....... துன்பந்*
*துடைக்கும் இனிய துரையேயென் னுண்மை*
*அடைக்கலத்தை நீயேற் றருள் !* (3)

*தெள்ளிய செந்தமிழாற் செய்யும் வழிபாட்டை*
*உள்ளிருந் தேலாய் உயர்பொருளே.......வெள்ளமாய்*
*எக்களித்துப் பொங்கும் இனிய வுனதருளில்*
*முக்குளிக்கப் பாரென் முகம் !* (4)

*அள்ளிப் பருகியுன் ஆனந்த கானரசம்*
*துள்ளிக் குதிக்கத் துறுதுறுத்தேன் ....... உள்ளத்தில்*
*ஓங்கார மாகி ஒளியாய் நிறைந்தென்னை*
*நீங்கா திருக்க நினை.* (5)

*காலத்தை வெல்லுங் கனசக்தி தந்தருளாய்*
*ஞாலத்தை வெல்லுகின்ற ஞானமருள்.......வேலப்பா!*
*நீயே யெனதுபுகல், நீயே யெனதறிவு,*
*நீயேயென் னின்ப நிலை !* (6)

## 4. குக மந்திரம்

*சக்திக் குமரா ஐயவே லரசே !*
*பத்திக் கினிதான பரஞ் சுடரே !*
*சித்திக் குகனே சிவனார் மகனே*
*முத்துக் குமரா முருகா சரணம்.*

*கதிநீ, மதிநீ, கதிர்வேல் முருகா*
*துதிசெய் யடியார் துணைநீ யரசே,*
*விதிசெய் வினையும் விலகப் புரிவாய்,*
*புதிதா கியவாழ் வருள்புங் கவனே !*

*சத்திக் கனலே, சமர்செய் பகையைக்*
*குத்திக் குமுறும் கொதிவேற் கரனே,*
*தொத்தித் துயர்செய் பிணியைக் களைவாய்*
*பத்தர்க் கருளும் பரமன் மகனே !*

*பவபந் தனைசிந் துக ! பற் றறுக !*
*தவசா தனைசித் திதழைத் தொளிர்க !*
*கவலை, கதிர்முன் பனிபோல் ஒழிக !*
*சிவஷண் முகனும் செருவேல் முருகா !*

*அருளார் முகமும் அடியார்க் கபயம்*
*தருபொற் கரமும், தணலார் விழியும்,*
*கருணைப் பொலிவும் கனிவாய் நகையும்,*
*திருமார் பழகுந் திகழும் முருகா !*

*சிதையா துதியா னம்நிலைத் திடவே,*
*பதையா துமனம் பணிவா கிடவே,*
*இதயத் திலெழுந் துபொலிந் திடுவாய்,*
*உதயக் கிரிபோல் ஒளியார் முருகா !*

*தாயிற் பெரிதா னதயா பரனே,*
*நேயர்க் குபசாந்த நிகே தனனே,*
*காயத் திரியின் கருவே குகனும்,*
*தேயச் சுடரே, சிவஷண் முகனே.*

*அன்பர்க் கெளிதாய் வருவாய், அபயம்*
*நம்பன் அருளும் நலமார் ஒளியே !*
*உன்பொற் பதமென் னுளமுன் றிடவே*
*எம்பால் வருவாய் குருவா யிறைவா !*

*இரவும் பகலும் இதயத் துணையே*
*பரவும் அறிவும் பணியுந் தருவாய்,*
*புரியுந் தொழில் பூசனையா கிடவே*
*பரிவுற் றருள்வாய் பரிபூ ரணனே !*

*பண்ணின் ஒலியே, பரிதிக் கொளியே,*
*கண்ணின் மணியே, கனியின் சுவையே*
*மண்ணின் வளமே, மலரின் மணமே,*
*விண்ணின் விரிவே, அறிவின் விளைவே !*

*கயிலைப் பரமன் கனலே யிதயக்*
*குயிலுக் கிசையே குமரா குழகா*
*பயிலப் பயிலப் பழமா ரமுதே*
*மயிலக் குகமா மணியே சரணம் !*

## 5. முருகன் அருச்சனை

*சிவமுருகா ஓம், ஜய முருகா ஓம் !*
*சரவணபவ ஓம், ஷண்முக குகஓம் !*
*ஓம்சிவக் கனலே, ஓம்குக ஜோதி,*
*ஓம்ஷண் முகனே, சரவண பவனே,*
*சுரர்படைத் தலைவா, சுப்ரம் மண்யா,*
*மந்திர வடிவே, வந்தனம், வந்தனம் !*
*அருளே யான பொருளே போற்றி,*
*அன்பே யான நண்பா போற்றி !*
*இருளிடர் போக்கும் இரவியே போற்றி !*
*கந்தா போற்றி, கடம்பா போற்றி !*
*சேந்தா, குறுஞ்சி வேந்தா போற்றி !*
*வேலா, தானவர் காலா போற்றி !*

*சூரனைக் கொன்ற வீரனே போற்றி !*
*குன்றைப் பிளந்த குமரா போற்றி !*
*குகனே, உமையாள் மகனே போற்றி !*
*இதயக் குகையின் கதிர்மணி போற்றி !*
*ஓங்கா ரத்துள் ஒலியே போற்றி !*
*நீங்கா துள்ளே நிறைவாய் போற்றி !*
*புலவா, ஞானப் பொலிவே போற்றி !*
*சங்க மிருந்த தமிழா போற்றி !*
*முருகா, திருமால் மருகா போற்றி !*
*ஐயா, பன்னிரு கையா போற்றி !*

*அடியார் துயரங் கடிவாய் போற்றி !*
*கருத்தி லினிக்குங் கரும்பே போற்றி !*
*அழகா போற்றி, குழகா போற்றி !*
*வள்ளி யுடனே வடிவேல் பிடித்து*
*மயில்மே லேறி வருவாய் போற்றி !*
*செஞ்சுடர் மேனிச் செவ்வேள் போற்றி !*
*அருட்பெருஞ் சக்தி ஆண்டவா போற்றி !*
*நானெனும் அறிவே யானாய் போற்றி !*
*அன்பருக் கபயம் அளிப்பாய் போற்றி !*
*துன்பந் துடைக்குந் துரையே போற்றி !*

இன்ப மளிக்கும் இறைவா போற்றி !
சிந்தைக் கினிய தேவா போற்றி !
கருத்தைக் கடந்த கடவுளே போற்றி !
கனியினும் கரும்பினும் இனியாய் போற்றி !
மலரில் மணமாய் மணப்பாய் போற்றி !
சோதியில் விளைந்த சுடரே போற்றி !
வெய்யப் பகைவரை நொய்யப் புடைத்துக்
களத்தில் வெற்றி காட்டுவாய் போற்றி !
ஆணவச் செருக்கை நாணப் புடைத்து
நிருதர் குருதியில் நீந்துவாய் போற்றி !

மரண பயத்தை மாய்ப்பாய் போற்றி !
விதியை வெல்லும் மதியே போற்றி !
வீரருக் காண்மை விளைப்பாய் போற்றி !
அடிமைத் தளைகளை அறுப்பாய் போற்றி !
மடமை யிருளை மாற்றுவாய் போற்றி !
வறுமைத் துயர்க்கு மருந்தே போற்றி !
வண்மையும் வளமையும் வளர்ப்பாய் போற்றி !
ஆறுத லளிக்கும் அப்பனே போற்றி !
தீனர்க் குதவும் தெய்வமே போற்றி !
தேனே, ஞானத் தெளிவே போற்றி !

இரவிபோல் என்னுள் எழுவாய் போற்றி !
ஆறா தாரமும் அமைய மலர்ந்தே
ஏழில் ஏறி இலகுவாய் போற்றி !
சகசிரா ரத்தில் விகசித் தொளிரும்
ஆறுமுகச் சுடரே, அறிவுக் கறிவே !
சக்திவேல் பிடித்த பக்தர் காவலா !
கவலை போக்குங் கனிந்த முகமும்,
கருணை நிரம்பிய கமலக் கண்ணும்
அறிவொளி வீசும் அமைதிப் பார்வையும்,
பவளச் செவ்வாய் பளிச்சிடத் தோன்றியென்

இன்னலைத் துடைக்கும் எழிலார் நகையும்,
மலைபோ லுயர்ந்த மாண்புறு தோளும்,
குன்றைத் தகர்க்குங் கொழும்புய வலிவும்,
வரங்களை வாரி வழங்குங் கையும்,
அச்ச மொழிக்கும் அபயக் கரமும்,
மனோகர மான மழவிளந் திருவும்,
காதலைத் தூண்டுங் கண்மணி யழகும்,
இராப்பக லில்லா இடத்தினி லென்னைக்
கூடிக் குழைந்து குலாவிடும் அன்பும்
இச்சையுங் கிரியையும் இருமருங் கிருக்கப்
பச்சை மயில்மேல் பவனி வந்து,
துட்டரை வீழ்த்தித் தொண்டரை வாழ்த்தும்,
மறமயக் கருணையும் அறமயக் கருணையும்,
கொண்டெப் போதும் கண்டுநான் களிக்க
நினைத்ததும் எதிரே நிற்பாய் போற்றி !
அன்னே, என்றன் அப்பா போற்றி !
குமரா, பரம குருவே போற்றி !
மனமணி யான தினமணி போற்றி !
துன்பக் கடலில் துடிக்கு மென்னைத்

*தூக்கிவிட் டுனக்காள் ஆக்குவாய் போற்றி !*

*காமச் சேற்றிற் கலங்கு மென்னைக்*
*கைதந் துண்மை காட்டுவாய் போற்றி !*
*இருமன விகாரத் திடர்ப்படு மெனக்குன்*
*ஒருமன நேயந் தருவாய் போற்றி !*
*கடுஞ்சின வேங்கை கவ்விய வென்னை*
*விடுவித் தமைதி விளைப்பாய் போற்றி !*
*பொறுமையைச் சீறும் பொறாமைப் படையை*
*வராது துரத்த வருவாய் போற்றி !*
*அருட்பணிக் காற்றல் அளிப்பாய் போற்றி !*
*பொய்யிருள் மயக்கைப் போக்குவாய் போற்றி !*

*மெய்யொளி காட்டும் துய்யா போற்றி !*
*ஞானசஞ் சீவி நயந்திட வுள்ளே*
*மோனசஞ் சீவி யானவா போற்றி !*
*மருட்டும் பிறவி மயற்பிணி மாற*
*மலைமருந் தாக வருவாய் போற்றி !*
*சாகா வாழ்வும், வேகா வுடலும்,*
*மும்மல மில்லா நின்மல மனமும்,*
*அண்டினார்க் குதவும் பண்டிதா போற்றி !*
*சொல்லா தறிய வல்லாய் போற்றி !*
*பிள்ளைபோ லென்னைப் பேணுவாய் போற்றி !*

*புல்லரை விலகிப் புனிதரைக் கூட*
*வல்லதிருக்களை வழங்குவாய் போற்றி !*
*பொய்யா நெஞ்சிற் புகுவாய் போற்றி !*
*வலைவீச்சுகளில் மயங்கா தருளாய்*
*எல்லாம் வல்ல செல்வா போற்றி !*
*மங்கல மான மனைமக் களுடன்*
*சீருஞ், சிறப்பும், பேரும் விளங்க*
*வாழ்வாங்கு வாழும் வகையளி போற்றி !*
*உலக நாடகம் உணர்ந்துநின் னருளில்*
*இலகு வீடகம் இன்புற நிலவுக !*

*நாட்டைக் கவரும் பாட்டெனக் களிப்பாய்,*
*உலகை யாளும் பலமெனக் கீவாய் !*
*உள்ள மோங்கும் உயர்வெனக் கருளாய்*
*பொன்வலைப் படாத போத மருளாய்*
*புலனை யடக்கும் புத்தி யருளாய்*
*நல்லருள் வழியே செல்ல விடுப்பாய்*
*சாது முனிவர் சங்கம் அருளாய்*
*அன்பருட் பணியும் அறிவும் யோகத்*
*திறனும் உள்ளத் தெளிவும் அருளாய் !*
*சித்தம் நிலைத்துச் சிவஷண் முகனும்*

*என்ற மந்திரம் இயம்பி யடங்கிச்*
*சமாதி யோகம் சகசமாய்க் கூடி,*
*மகாதுரீய மாதவ சித்தியால்*
*சுத்த சமத்துவ முத்திபெற் றென்றும்,*
*உன்னுடன் நானும் என்னுடன் நீயுமாய்*
*இரண்டறக் கலந்தே இன்புற வருளாய் !*
*சதாசிவக் கதிரோய் சரணம் சரணம் !*

*சத்திய சோதியே சரணம் சரணம் !*
*குகனே, அகநா டகனே சரணம் !*
*முருகா ஓம் ! அறுமுக ஓம் சரணம் !*

## 6. தீபாராதனை

*அருணமுகத் திருவழகா, கருணை விழிக் குழகா,*
*தருண மழை போலுதவுந் தயைமிகுந்த குமரா,*
*இருளரக்கர் குலமழியப் பொருது சுடர் வேலா !*
*குருபரஓம் சிவக்கனலே, குகனேசண் முகனே !*

*அன்புமண மலர்மாலை ஆர்வமுடன் சூட்டி,*
*என்புருக மனங்குழைந்தே என்முகம்பார் என்றோம்;*
*துன்பமிகும் பகைக்குலத்தைத் தூருடனே நூறி,*
*இன்பமுறும் வெற்றியருள் எம்முயிருக் குயிரே !*

*காலையிலே எழுந்திலகுங் கதிரழகுன் அழகே,*
*மாலையிலே பூத்த முல்லை மலர்நகையுன் நகையே !*
*வேலையிலே நடமாடும் வேகமுன திசையே !*
*சோலையிலே மணத்தென்றல் சொல்லுவதுன் சொல்லே !*

*வஞ்சனைசெய் மாயமற வாய்மையொளி காட்டாய் !*
*அஞ்சவருந் தீவினையை அக்கணமே மாற்றாய் !*
*நெஞ்சினிலே நீண்டுயரும் சிவஞான நெருப்பே !*
*தஞ்சமுனை யன்றியிலை; சண்முகனே சரணம் !*

*போரொடுங்கி இருமனத்தின் புகையொடுங்கித் தீதின்*
*வேரொடுங்கிப் பேராசை வித்தொடுங்கி, மறத்தின்*
*கூரொடுங்கி, அறவாழ்வே குலவியுன தருளிற்*
*பாரடங்கி வாழ்ந்திடவே பார்க்குமகிழ் வருளாய் !*

*வருவாயெம் கலிதீர்க்க வள்ளிமண வாளா*
*தருவாயுன் ஆசியினைத் தவயோகம் வெல்ல*
*திருவாரும் தேவர்குலம் திகழவுல கெல்லாம்*
*குருவாக வருவாய்ஓம் குகனே ஷண்முகனே !*

*பற்றலரின் படுமாயப் பாழ்வினைகள் சிந்திப்*
*பெற்றதொரு தாயினரும் பிள்ளைகளைப் போலே,*
*ஒற்றுமையாய் உலகமெல்லாம் ஒருகுலமாய் வாழும்*
*பெற்றியினை யீந்தருள்வாய் பிரியமுள்ள முருகா !*

*எனதுனதென் றிறுமாக்கும் ஈனவெறி யின்றி,*
*மனிதனுக்கு மனிதனுறு மரியாதை காட்டி,*
*மனமொன்றி யினமொன்றி, மயக்கமறப் பொதுவில்*
*தினமொன்றி வாழவருள் செவ்வியவேல் முருகா !*

*பாருண்மை வழியறிந்தே பவபந்த மின்றி,*
*போரின்றிப் பொய்யின்றிப் புன்பொறாமையின்றி*
*ஓருண்மை, ஓருள்ளம், ஓருயர்ந்த கடவுள்*
*ஓரரசுங் கொண்டினிதே ஓங்கவருள் புரிவாய் !*

*தொத்தடிமைத் துயர்தீரச் சுதந்தரமே பெருகப்*
*பித்துலகப் பிரிவினைசெய் பெருந்துயர்கள் தீரப்*
*புத்துயிரும் புதுயுகமும் புதுவாழ்வும் பொலியச்*
*சுத்தசிவ சமயோக சித்தியருள் முருகா !*

*பவபந்தம் போயொழியப் பரமசுகம் அருளாய்,*
*சிவஜோதி, சிவராஜ்யம், சிவசக்தி யிலகும்,*
*புவிவாழ்வைப் பொதுநலஞ்செய் யோகமெனப் புரிவாய்!*
*தவசித்தி தருகின்ற தணலேலூம் சரணம் !*

# 4. விஷ்ணு தீபம்

*மனித வாழ்வின் நோக்கம் கடவுளடைவு. கடவுள் எங்கும் எல்லாமாய் இருக்கிறார். உலகம் கடவுளின் கோயில்; உயிர்த்தொகுதி யெல்லாம் கடவுளின் திருமேனியே. ஒவ்வோர் உள்ளமும் கடவுளின் சந்நிதானம். உள்ளத்தில் கடவுளை நினைத்து, உலகுயிர்களில் கடவுளைக் கண்டு, தொண்டு செய்தலே யோகசாதனம். கடவுளடைவிற்கு வேண்டியது ஒருமையன்பு, உள்ளன்பு. அன்பினால் மனம் பண்படும்; தூய்மையாகும். அன்பு முதிர முதிர அருள் துலங்கும். அருளைப் பற்றிச் சென்றால் பரம்பொருளை உணரலாம். இதுதான் உலகில் விளங்கிய மகான்கள் காட்டிய வழி.......பக்தி மார்க்கம். உள்ளே தியானம், மனதில் அன்பு, உடலில் கைங்கரியம் ....... ஆகிய மூன்று சாதனங்களால் ஆழ்வார், நாயன்மார் ஆகிய பரம பக்தர்கள் இறைவனை அடைந்தனர். நாயன்மார் இறைவனைச் சிவமாகப் பாவித்தனர்; ஆழ்வார்கள் சர்வாந்தர்யாமியாய், சர்வ மங்கள மூர்த்தியாய், உலகைக் காக்கும் விஷ்ணுவாகப் பாவித்தார்கள். பொருள் ஒன்றே; பெயர் — வடிவ பாவனைகளே பல. எந்தப் பெயர் வடிவில் எவரெவர் அன்பு கொண்டு எப்படி வழி பட்டாலும், அவரவர் சிரத்தா பக்திக்கு ஏற்றபடி ஆண்டவன் அருளுகிறான். இந்த உண்மையை ஆழ்வார்களின் வாக்கினாலும் வரலாற்றினாலும் நாம் அறிகிறோம். விஷ்ணு தீபத்தின் பன்னிரண்டு திரிகள் பன்னிரு ஆழ்வார்கள்; தீபத்தின் நெய் திவ்வியப் பிரபந்தம்; தீபத்தின் அலங்காரமான அகல் இராமானுஜர்! இந்த விஷ்ணு தீபத்தை அன்பர் படித்து, நினைத்து, பார்த்து, உணர்ந்து மகிழ்வார்களாக !*

## 1. பிரபத்தி ரகசியம்

*ஜீவாத்மா பரமாத்மனை நம்பி அன்பு செய்து அவனிச்சைக்கே தன்னை அளித்து வாழும் அடைக்கலம், சரணாகதி 'பிரபத்தி ' எனப்படும். 'ப்ரபத்திர் நிரபாயஹேது' என்பது ஸ்ரீமத் ராமானுஜருக்கு ஆண்டவன் அருளிய அசரீரி வாக்காகும். அடைக்கல வழியே அபாயமற்றது. 'ஓம் நமோ நாராயணாய' என்று முதலில் சாதகன் சித்த சுத்தியுடன் இறைவனை உள்ளார வணங்குதல் வேண்டும். 'நாராயணம் - சரணம் ப்ரபத்யே' என்று சரண் புகுதல் இரண்டாவது சாதனம். மூன்றாவது, எல்லா மனோதர்மங்களையும் (சர்வ தர்மான் பரித்யஜ்ய...) சிந்தனைகளையும் சங்கல்ப சம்ஸ்காரங்களையும் விட்டொழித்து துளி அகம்பாவத்திற்கும் இடமின்றி, ஸ்ரீமந் நாராயணனே கதி யென்று வாழுதல், பிரபத்தியின் நிறைவாகும். அந்த நிலையில் எம்பெருமானைத் தவிர வேறொன்றும் தன்னுள்ளும் புறமும் இராது; 'மாம் ஏகம் சரணம் வ்ரஜ' (என் ஒருவனையே சரண்புகு) என்கிறார் பகவான். இதையே அனன்ய சரணாகதி என்பர். இதில் சங்கல்பநாசம், மனோநாசம், மாயாநாசம், துக்கநாசம் எல்லாம் அடங்கும். பிரபத்தி சாதகன், பிரபன்னன் ஆவான். உண்மையான பிரபன்னன், எல்லையற்ற அமைதியின்பம் பெறுவான். 'நான் என்பது முற்றிலும் அற்று, எல்லாம் அவன்; அவனின்றி நானில்லை' என்ற பரம பக்தி நிலையே, பிரபத்தி சாதனமாகும். வேதாகமங்கள், வேதாந்த நூல்கள், யோகரகசியங்கள் எல்லாம் அலசியலசி அனுபவங்கண்ட பிறகு, இந்தப் பிரபத்தி சாதனமே எனக்கு நிம்மதியளித்தது.*

## 2. கவலை யில்லாத வழி

*ஒருவன் பணத்தை மடியில் கட்டிக்கொண்டு உறக்கமின்றிப் பாதுகாக்கிறான். தன்னிடம் வருவோரைச் சந்தேகிக்கிறான்; அவன் நினைவு எப்போதும் பணத்தில் இருக்கிறது. ஒருநாள் அந்தப் பணத்தைத் திருடன் கவர்ந்து செல்கிறான். பிறகு, 'ஐயையோ, போனதே என் பணம்' என்று அடித்து அலறுகிறான், பாவி ! உலக சுக போகங்களில் மனதைப் பறிகொடுத்து, சுயநலத் திமிரில் 'நான், நான்' என்று வாழும் மாந்தர் கதி இதுதான்.*

*இதே மனிதன், தன் பணத்தை ஒரு நல்ல சர்க்கார் பாங்கில் போட்டால், பிறகு கவலையில்லா திருக்கலாம் அல்லவா? பணமும் பத்திரமாய் இருக்கும்; வட்டியும் வரும். வேண்டும் போதும் எடுத்துக் கொள்ளலாம். இதுதான் எம்பெருமானிடம் தன்னை அடைக்கல மாக்கும் பிரபத்தி மார்க்கம். பாங்குப் பணத்தைக் கோயில், ஆசிரமம், வித்யாசாலை, மருத்துவசாலை போன்ற தர்ம கைங்கரியங்களுக்கு ஈந்து விட்டால், புண்ணியப் புகழுண்டாகும். பணமும் லோகநாராயணனுக்கு அர்ப்பணமாகும். கவலை இராது. இதுதான் உன்னதமான பரன்யாச மார்க்கம்.*

## 3. குரு சேவை

*பக்தி — ப்ரபத்தி — பரன்யாசம் என்பது சரணாகதியின் மூன்று படிகளாகும். ஸ்ரீமந் நாராயணன் திருவடிவே மகாலக்ஷ்மி. லக்ஷ்மி நாராயணரை உபாசித்து, பிரபன்னராகி, நியாஸ ப்ரஸாதராக விளங்கும் ஆசாரியார்களே, நமக்கு வழிகாட்டிகள். அவர்களுக்கு அன்பு காட்டி அடைக்கலம் புகுந்து* ***குரு சேவை செய்தல்,*** *பிரபத்திக்கு உரிய சாதனமாகும். ஆசாரிய சேவை, அர்ச்ச உபாசனை, ஆண்டவன் தியானம், அடைக்கலம், அவனிச்சைக்கே ஆளாதல் — தன்னிச்சையறல்; அவனுள் தானும் தன்னுள் அவனும் ஆதல், எல்லாம் வாசுதேவ மயம் (வாசுதேவః ஸர்வமிதி) என்ற விசுவ சைதன்யத்தில் பரம பாகவதனாக வாழ்வது ....... ஆகியவை, பிரபத்தி யோகத்தின் எட்டுச் சாதனங்களாகும்.*

## 4. ஆத்ம ஸமர்ப்பணம்

*ஓர் அழகிய மகளை, எத்தனை நாள் தன் வீட்டிலேயே வைத்து அழகு பார்க்க முடியும்? அவளை ஒரு நல்ல கணவனுக்குக் கட்டிக் கொடுத்தால், அவள் வாழ்வும் மங்கலமாகும், நமக்கும் மகிழ்ச்சியாகும். அதுபோல இந்த மனதை 'எனது யான்' என்ற சிறையில் அடைத்துக் கொஞ்சுவதும், இந்த நர வாழ்வைச் சொந்தம் பாராட்டிச் சுயநலம் பேணுவதும் பந்த தொந்த விகார துக்க சோக மோக வழியாகும். இந்த மனம்—உயிர்—உடல் வாழ்வை உள்ளத்தான் ஆகிய ஸ்ரீமந் நாராயணனுக்கே அர்ப்பணமாக்கி, அவனுடன் ஜீவாத்மா கூடி வாழச்செய்வதே கல்யாணமாகும். அனந்த கல்யாண குணனான பரமாத்மனுக்கு ஜீவாத்மனை அர்ப்பணம் செய்து, தேனும் பாலும் கன்னலும் நெய்யும் ஒத்து, அவனுடன் கூடி வாழலே, பிரபத்தி மார்க்கமாகும். பொன்னும் மணியும் தனித்தனியே சுரங்கத்தில் கிடந்தால் என்ன பயன் ? இரண்டையும் அகழ்ந்தெடுத்துச் செதுக்கித் தூயதாக்கி, மாற்றேற்றி, மணியைச் சாணை பிடித்துப் பொன்னணியில் பதித்து, ஒருவருக்குச் சூட்டினால் அழகாகும். அதே போல, வாழ்வென்னும் தூய பொன்னில் ஜீவமணியைப் பதித்து, அன்பணியாக்கிப் பரமாத்மனுக்கு அணிவித்தால் இன்புறலாம். இதுதான் பிரபத்தி சாதனமாகும். புகைவண்டியில் ஏறிச் செல்லும் போது நமது பெட்டிகளைத் தலையில் சுமந்து வருந்துகிறோமா? பெட்டி, படுக்கையெல்லாம் வண்டியில் போட்டு, நாம்*

*நிம்மதியாய் இருக்கிறோம். அதுபோலவே, இறைவனை அடைக்கலம் புகுந்த பக்தன், மனக்கவலைகளைச் சுமக்க மாட்டான். 'எம்பெருமான் சித்தம் நடக்கட்டும்' என்ற சரணாகதி உணர்வில் இருப்பான். 'நிமித்தமாத்ரம் பவ' — 'என் கருவியாய் இரு — நானே போர் வெல்லுகிறேன். நீ வீரன் கை வாள்போல என்னிச்சையில் இடங்கொண்டிரு' என்கிறான் கண்ணன். இதுதான் பிரபத்தி நிலையாகும்.*

## 5. எல்லாம் அவன் செயல்

*வேறுவழி எங்கே? மனிதன் அற்ப மதியன். அவனுக்கு என்ன உண்டு?... வாய் உண்டு. சோற்றைக் கையாலெடுத்து விழுங்கலாம் — சோற்றை உள்ளேயிருந்து சீரணிப்பது யார்? ஜடராக்கினி, பித்தநீர், கணையநீர் வார்த்து அன்னரசமாக்குவோன் யார்? அன்னரசத்தை ரத்தமாகவும், ரத்தத்தை விந்துவாகவும், விந்துவை மூளையாகவும், மூளையை நினைப்பாகவும், உயிர்ப்பை உயிராகவும் மாற்றுவோன் யார்? எம்பெருமானே! 'நானே தீயாகி அன்னங்களைச் சீரணிக்கிறேன்' என்கிறான், இறைவன். இந்தக் காலம் விஞ்ஞான மதங்கொண்டு சூரிய சந்திரர்களைக் கூட தாம் சிருஷ்டிக்கலாம் என்று மார் தட்டுகின்றனர் பேதை மனிதர். பஞ்சபூதங்கள் இல்லாவிட்டால், ஆகாயத்தின் வரப்ரசாதங்கள் இல்லாவிட்டால், இந்த விஞ்ஞானத்திற்கு இடமுண்டா? புகல் உண்டா? பூத பௌதிக தத்துவங்களெல்லாம் தோன்றியழியும் பிரகிருதியாகும். இந்த மாயப் பிரகிருதி வெறும் ஜடமே. ஜடத்துள் சித்தாகிய ஜீவாத்மாவைப் பரமாத்மா ஆளுகிறது.*

## 6. எல்லாம் அவனுடைமை

*பெயர் வடிவு கொண்ட உடல், உலகில் ஆடுகிறது. பெயர் வடிவ பேதமற்ற ஆன்மா, உடலை ஆட்டுகிறது. வாய் மனங் கடந்த அதிநுட்பமான சுத்த பரமாத்ம சக்தி, ஜீவாத்மாவை ஆளுகிறது; சுத்த சக்தி பரமாத்மனுடன் சமமான சம்பந்தம் பெற்று, சுடரும் கதிரும் போல நிலவுகிறது. ஆதலால் உலகம், உடல், உயிர் எல்லாம், உலகோன், உடலோன், உயிரோன் ஆகிய எல்லாம் உடையவனைச் சரண் புகுந்து வாழ வேண்டும். வேறு கதியில்லை. ஆறுகள் எப்படி எங்கே தாவித்தாவி வளைந்து வளைந்து சென்றாலும், கடலுக்கே வந்து சேரவேண்டும். அந்தக் கடலாவி மேகமாகி மழையாகி ஊற்றாகி, ஆறாகிப் பெருக வேண்டும். அப்படியே உலகுயிர் வாழ்வும் கடவுளிடமிருந்து வந்து கடவுளையே அடைக்கலம் புகுந்து தீரவேண்டும். 'தானே பலவாக விரும்பினான்' — 'ஸோ காமயதா ' 'அவ்வாறே ஆனான்' என்பது வேதவாக்கு. மூலம், கோலம், சீலம், ஆலயம் எல்லாம் அவனே. புருஷோத்தமன் ஒருவனே பிரகிருதி புருஷ தத்துவங்களாக விளங்கி உலகாடலை நடத்துகிறான்.*

## 7. பிரபத்தி யோகிகள்

*இதுதான், பிரபத்தி சாதன சூத்திரம். ஆதிசங்கரர் கூடச் சிவானந்தலகரியிலும் பஜகோவிந்தத்திலும் பிரபத்தி மார்க்கத்தையே மனமுருகப் பாடுகிறார். அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர், திருமூலர் — ஆகிய சைவப் பெரியார் அனைவரும் பிரபத்தி மார்க்கத்தையே அனுஷ்டித்தனர். ஜரதுஷ்டிரர், ஏசுநாதர், முகம்மது நபி, அரவிந்தர் போன்ற தீர்க்க தரிசிகளும், மார்க்கதரிசிகளும் பிரபத்தி யோகிகளே. பிரபத்தி மார்க்கமே, யோக சிகரம்; ஞானமே சிகர ஜோதியாகும்.*

இனி மனங்குவிந்து உளந்திறந்து அன்பு செய்யுங்கள்; பாடுங்கள்.... ஆடுங்கள் ! .... எம்பெருமானையே நாடுங்கள். உள்ளே தேடுங்கள்! அவனருளால் அவன் கூட்டக் கூடுங்கள் !

"ஓம் நமோ நாராயணாய !
நாராயணம் சரணம் ப்ரபத்யே !
பரமாத்மனே பரகதி ! "

## 8. நாராயணத் தியானம்

நாரா யணனே நமதாண்டவனாம்,
நாரா யணனே நமதா சிரியன்,
நாரா யணனே ஞாலத் துயிராம்,
நாரா யணஓம் என நாம் பணிவோம் ! 1

பணிவோம் பரந்தா மனையன் புடனே
அணிவோம் பரமாத்மன் அருட் சுடரை
பிணிபோம், இருள்போம், பிறவித் துயர்போம்,
துணிவோம், தொழுவோம், துளவோனடியே. 2

அடியும் அவனே, அறிவுக் கறிவாம்
முடியும் அவனே, முதலும் அவனே,
வடிவும் பெயரும் வடிவற் றுணரும்
துடியும் அவனே, சுடரா ழியனாம். 3

சுடரா ழியினாற் பகையைச் சுடுவான்
இடரா ழியினின் றெமைமீட் டிடுவான்,
படராழி கடந் திடுபாய்க் கலமே,
நடமா டிதயத் திருநா ரணனே. 4
இதயக் குகையில் எழுஞா யிறவன்,
உதயக் கதிர்போல் உலகிற் கொளியான்,
மதமச் சரரின் மமதைக் கெமனாம்,
முதமங் களனெம் முரளீ தரனே. 5

முரளீ தரமோ கனஸ்ரீ தரஓம்
ஹரிஓம் குருஓம் அகநா யகஓம்,
வரதா யகஓம், வடவேங் கடஓம்
சரணா லயஓம், சரணம், சரணம் ! 6

சரணம் சரணம் ஜகஜீவ பராத்
பரனே சரணம், பரிபூ ரணனே !
சரணம், சரணம், சமயக் கடலே
சரணம் அருவாம் சகுணப் பொருளே ! 7

உள்ளப் பொருளே, உலகப் பொருளே,
வெள்ளப் பொருளே, விண்ணின் விரிவே !
எள்ளத் தனையும் எனைவிட் டகலா
துள்ளப் பொருளே, ஒருவா சரணம். 8

ஏகப் பொருளே, இதயாத் மசுகப்
போகப் பொருளே, புவனத் தொளியே,
தேகப் பொருளே, தியானப் பொருளே,
யோகப் பொருளே, ஹரிஓம் சரணம். 9

*சரணம், சரணம், சடமும் அந்தக்*
*கரணத் துடனா ருயிரும் உளமும்*
*சரணம், தானும் தனதும் வகுளா*
*பரணர்க் கருளும் வரதா சரணம் !* 10

*நானா னெனுமா ணவநா ணிடவே,*
*தானா னெனுமுண்மை தலைப் படவே*
*மோனார் ணவமுழ்  கிமுனைப் பறவே*
*தேனார் திருவேங் கடனைப் பணிவாம்.* 11

*சகமும் சடமும் தரிசித் புருஷன்*
*இகலுக் கிகலாம், இரவுக் கொளியாம்,*
*சுகதுக் கமுறச் சுழலும் வினையேன்?*
*அகமே, அலையா தமர்வாய் மனமே !* 12

*அலைசூழ்ந் தலையும் புவிமீ தினிலே,*
*கலைசெய் திடுகற் பனையற் பசுகம்*
*நிலையோ நிலையோ? நிலைநின் னருள்வே*
*றிலையே!  இறைவா, எனதாண் டவனே !* 13

*நெஞ்சத் துருகும்  நிறையன் பரையும்*
*வஞ்சித் திடுவன் மனமாந் தரெனை*
*நஞ்சொத் திடர்செய் நரகங் கெடவே*
*உஞ்சக் தியருள், உளமா மணியே !* 14

*மணியே, எனதா ருயிருக் கழகாம்*
*அணியே, அவனிக் கொருவான் புகலே !*
*தணியாது வளர் தவசக் தியினாற்*
*பணிசெய் பதமே யருளாய் பரனே* 15

*வான்பார் பைங்கூழ் வங்கப் பறவை*
*தேன்பார் தேனீ தாய்பார் சேய்போல்,*
*ஊன்பார் உயிர்போல் உனைநம் பியுளேன்,*
*யான்பார் அழகா, அருளார் எழிலே !* 16

*பொல்லார் புறமோ டிடுபோர் வலியும்*
*நல்லார் மகிழும் நலமார் செயலும்*
*எல்லா வளமும் இரவாத் தகையும்*
*சொல்லா தருள்வாய், சுடர்மா மணியே !* 17

*இவையும் அவையும் இகமும் பரமும்*
*எவையும் உலகில் இலகிப் பிரியும்,*
*அவையும் உனதன் பருளாடல்; அதன்*
*சுவையும் உனதே, சுருதிப் பொருளே !* 18

## ***பல்லாண்டு***

*பல்லாண்டு பல்லாண் டுயிர்வாழ் விலகப்*
*பல்லாண் டறமும் அருளும் பயில்க.*
*பல்லாண் டுயர்பக் தர்நலம் பெறுக !*
*பல்லாண்டு பரம் பொருள் பாடுதுமே !* 1

*கருணைப் பெருமான், கண்ணன் அருளும்*
*தருணப் பொழிவார் தடமா முகிலோன்,*

அருணக் கிரணத் தழகன், குழகன்,
வருணத் தொளிசேர் வனமெம் மனமே ! 2

பத்துத் தலையோன் பகையும் படையும்
பொத்துப் பொடியிற் பொடியாய் விழவே,
சக்திக் கணைவிட்ட சமர்ப் பெருமான்,
பத்தர்க் கிடர்செய் படர்நீக் குகவே ! 3

வில்லாண் டசுரர் விழவெஞ் சமர்செய்
கல்லாண் டபுயங் களைக்கண் டதுமே,
மல்லாண் டபுகழ் மணிகேட் டதுமே,
'பல்லாண்டு பல்லாண்' டெனப் பா டினமே ! 4

பொலிவோங்குக பொன் யுகநல் லுயிர்கள்,
பொலிவோங்குக புண் ணியகீதை வழி
பொலிவோங்குக பூரண யோகநெறி
பொலிவோங்குக பூமிசை பூசுரரே ! 5

அரணா கியசக் தியருள் பொலிக;
வர நாரண வான்சுடர் தானொளிர்க;
நர நாரண சங்க நலம் வளர்க !
சர ணாகதச் சங்கொலி பொங்குகவே ! 6

## 9. பெருமாள் அருச்சனை

ஓம்பர மாத்மனே, உலகளந் தோனே,
இதயப் பாற்கடல் எழுஞ்சுட ரமுதே,
ஆதி நாராயணா, அனந்த சயனா,
வேத முதல்வா, கீதைக் கண்ணா,
தூயா, நல்லோர் நேயா, சரணம் :
மீனாய், ஆமையாய், ஏனமாய்க் குறளாய்ச்
சிங்கமாய் அரக்கரைச் செற்றாய், போற்றி !
இராமனாய் வந்தே, இராவணா காரமாம்
அசுரக் கொடுமையை அழித்தாய் போற்றி !
ஆயர் கொழுந்தாய் ஆடல் புரிந்தே,

மாயப் பூதகி வஞ்சனை தீர்த்தாய்.
காளிங் கன்மேற் களிநடம் புரிந்தாய்,
மலைக்குடை தாங்கி, மழைபுய லிடியில்
கலங்கும் அன்பரைக் காத்தாய், போற்றி !
கம்சன் கொடுங்கோல், கவிழ்ந்திடச் செய்தாய்
சுயோதனக் கும்பலைத் தூருடன் அழித்தாய்,
இருவினைப் போர்க்களம் மருவிய விசயன்
உள்ளந் தெளிய யோக சாதனம்
ஓதினை, கீதைக் குயிரே போற்றி !
அந்தணர் உள்ளத் தமர்ந்தாய் போற்றி !

வீரர் தோளில் விளங்குவாய், போற்றி !
வணிகர் தராசில் வளர்வாய், போற்றி !

*தொண்டர் பணியில் துலங்குவாய், போற்றி !*
*தொழிலா ளர்தொழும் எழிலே போற்றி !*
*இல்லற வாழ்வில் இலக்குமி களையை*
*வீசிக் குலம்வளர் விமலா, போற்றி !*
*செல்வரை நல்கும் செல்வா போற்றி !*
*மங்கலம் பொழியும் மாதவா, போற்றி !*
*வரமருள் ஸ்ரீநி வாசனே, போற்றி !*
*பண்ணருள் வேணுகோ பாலனே போற்றி !*

*ஜயமருள்  வீர சக்தனே, போற்றி !*
*உள்ளம் உள்ளுக உன்னருட் சோதியை,*
*வாக்குநின் பெருமையை வழுத்துக, நாளெலாம்*
*புரிகநல் லுடலுன் புண்ணியப் பணியே,*
*இறைவநின் மாண்பை எழுதுக கையே,*
*பாடுக நின்னைப் பழுத்தருட் புலமை,*
*ஆடுக பரவச மாகிய மனமே,*
*அறிவும், ஆற்றலும் அருள்வாய், போற்றி !*
*சினமும் செருக்கும் சிறுமையும் கொண்ட*
*தீயரைத் திருத்தும் திறலளி, போற்றி !*

*அக்கிர மஞ்செய் அரக்கரை யடக்கச்*
*சக்கர மேந்தி சாடுவாய் போற்றி !*
*தூய மனமும் தூயநல் லுரையும்*
*தூயநல் லுடலும், தூயநற் செயலும்,*
*சித்தம் நிலைத்த தியான சித்தியும்*
*அருளாய், வாழ்வின் பொருளே, போற்றி !*
*சரியை கிரியை யோகம் ஞானம்*
*அட்டாங்க சித்தி, ஆதார சக்தி*
*துரியாதீத சுத்த ஓம் சக்தி*
*உணரும் உன்னை, உரைப்பதெப் படியோ?*

*வைராக் கியமே வாகன பீடமாம்.*
*அன்பின் வாழ்வே அபிஷேக தீர்த்தம்.*
*தியான நிலையே, திருவளர் விளக்காம்.*
*நல்ல நினைப்பே, நவமணியாரம்.*
*நாம ஜபமே, நான்மறைச் சங்காம்,*
*ஆர்வமே தூபமாம், அருட்கவி மாலையாம்,*
*சித்த உறுதியே சிதையாப் பொட்டாம்,*
*பரவச பக்தியே, பரிமளச் சாந்தாம்.*
*உடல்பொருள் ஆவியும் உகந்த நிவேதனம் !*
*பேச்சு மூச்செலாம் பெருமாள் அருச்சனை*

*நெஞ்சக் கோயில் நிலவும் பரமனே,*
*சுத்தான்ம ஜோதியாய்ச் சுடரும் பெருமான்.*
*உன்பணிக் கேநாம் உயிர்த்திட அருளாய்.*
*நினது விருப்பமே, நிறைவே றுகவே !*
*பரமாநின் னருட் பாத்திர மாக*
*நடத்துவாய், ஓம்நமோ நாராயணாய.*
*கல்வியும் கலையும் செல்வத் தொழிலும்*
*சீரும் சிறப்பும் பேரும் புகழும்*
*அஞ்சா நெஞ்சமும் அறஞ்செய் வீரமும்*
*துஞ்சா முயற்சியும் தோலாத் துணிவும்*

எடுத்த காரியம் இயல்பாய் வெல்லும்
யோக சித்தியும் தேக சக்தியுடன்
அருளாய், எம்மை ஆளுடையானே !
துருவனைப் போலே சுதந்தர யோகமும்
நாரதர் போலே பூரண பக்தியும்
சுகரைப் போலே தூய ஞானமும்
அத்தைத் தின்றே ஆங்கே யிருந்த
நம்மாழ் வாரின் நிம்மதி யுணர்வும்,
மதுர கவியின் மகாகுரு பக்தியும்
ஆண்டாள் போலே ஆர்வத் துடிப்பும்

பாணர் போலே பணிவுத் துணிவும்
மழிசை போலே மனந்தெளி யன்பும்
விப்பிர நாரணர் வேண்டிய சுவையும்
திருமங் கையெனத் திருமால் சேவையும்
குலசே கரனார் கொண்டநற் காதலும்
பூதத் தாழ்வார் பொய்கை யாழ்வார்
பேயாழ் வார்போற் பெருகிய அறிவும்
பெரியாழ் வார்போல் அரியநல் வெற்றியும்
ஆளவந் தார்போல் அருட்பெருஞ் செல்வமும்
உடையவர் போலே உயர்ந்த ஒழுக்கமும்

தேசிகர் போலே தெள்ளிய புலமையும்
துளசியைப் போலே துதிபெறு வாக்கும்
கம்பனைப் போலே கலைவளர் கவியும்
வியாசர்வான் மீகி பேசிய பொருளும்
கபீரைப் போலே கடந்தவுள் ளமைதியும்
மீரா போலே கிரிதர வேட்கையும்
சமர்த்த குருவெனச் சபதப சித்தியும்
பரம ஹம்ஸரின் பரவச பக்தியும்
மகரிஷி ரமணரின் மனோஜய சாந்தமும்
காந்தியைப் போலக் கடமைத் திறனும்
அரவிந் தர்போல் அத்யாத்ம சித்தியும்

அளித்தெமை யாட்கொண் டறவழி வாழ
நடத்துவாய், உலக நாதனே போற்றி !
உடலுக் குயிருக் குலகுக் கிறைவா !
புராண புருஷா, புருஷோத் தமஓம் !
அடைக்கலம் உனக்கே, அந்தராத் துமனே !
ஹரிஓம் தத்ஸத் தத்வமஸி ஓம் ! ஓம் !
ஆத்மா ராமா ; ஆனந்த ரமணா !
கண்ணா, கண்ணின் கண்மணி யொளியே,
காதல் எல்லாம் ஈதல் உனக்கே.

தந்தோம், எம்மைத் தயவுடன் ஆளாய் !
எங்கும் உன்மயம் இலகுக உலகில்;
எங்குமுன் அன்பே பொங்குக நன்றே !
சரணம், சரணம், சக்கரக் கண்ணா !
சரணம், சரணம், ஜகத்குரு நாதா,

நாராயண ஓம், நாராயண ஓம் ! 116

## வேண்டுகோள்

எல்லா வுலகுந் தானாகி,
எங்கும் நிறைந்த பரம்பொருளே !
நல்லார்க் கருளும் நாரணனே,
நம்பும் அன்பர் தாரகமே !
பொல்லாங் கொழியப் புண்ணியமே
பொலியுந் தொண்டு பொலிவுறவே,
செல்வாக் கீவாய், சின்மயனே !
ஜீவ முரளிக் கிசை பொழிவோய் !

## வந்தனம்

எப்படி நடத்து வாய் நீ, எங்கெமை உய்ப்பாய், கண்ணா
அப்படி யாங்கே நின்றுன் ஆடலிற் கலந்து கொள்வோம்.
இப்படி என்று நாமுன் இச்சையை ஏவா துன்றன்
சொற்படி நடக்க வந்தோம் வந்தனம், தோழா போற்றி!

## நிவேதனம்

உண்ணும் உணவும் உனதேயாம் ;
உடுக்கும் உடையும் உனதேயாம்.
எண்ணும் எண்ணம் உனதேயாம்,
இதயக் கோயிற் பெருமானே !
பண்ணும் பணியும் உனக்கேயாம்,
பணியின் பயனும் உனக்கேயாம் !
கண்ணின் மணியே கண்ணா நின்
கருணை யமுதங் கனிந்தீவாய் !

உடலம் உனது திருக்கோயில்
உள்ளம் உனது சந்நிதியாம்.
திடமார் மனமே திருப்பீடம்
சீவன் உனது திருத்தொண்டன்.
நடமா டுலக வாழ்வெல்லாம்
நாளும் புரியும் வழிபாடாம்;
இடமார் கருணை புரிந்தேலாய்,
இதயக் கோயிற் பெருமானே !

## ஆர்வம்

பேருக்கும் புகழி னுக்கும்
பெருநசை கொள்ளோம்; இங்கே
ஊருக்குச் செய்யுந் தொண்டும்
உனக்குறு தொண்டே யாகும்.
வேருக்கு நீரே ! இன்பம்
விளைகனி ரசமே ! இந்தப்
பாருக்கு வந்த வாழ்வின்
பயனுனைப் பணிவதாமே !

*தாகமாய்க் கூவு கின்றோம், சஞ்சல மாயமின்றி,*
*மோகமாம் பேயு மின்றி மும்மலக் கசடு மின்றி,*
*ஏகமாய் இதயம் ஒன்றி இன்புறும் சுத்த சக்தி*
*யோகமே வாழ்வதாகி உனைச்சரண் புகுந்தோம் ஐயா !*

### 10. தீபாராதனை

*ஓம் பரமாத்ம ஜோதி, ஓம் பரி சுத்த ஜோதி,*
*ஓம் ஜய சக்தி ஜோதி, ஓம் சம தர்ம ஜோதி !*
*ஓம் தப யோக ஜோதி, ஓம் மகா துரிய ஜோதி !*
*ஓம் ஜக ஜீவ ஜோதி, உள்வளர் ஜோதி வாழ்க !*

## 5. சுத்த சக்தி உபாசனை

*சுத்த பரமாத்ம சக்தியே எங்கும், எதுவும் எல்லாம். அதன் அருளாடலே ஆருயிர் உலகம். அசுத்த சக்திகளான ஆசையாணவ மாசுகளால் அல்லலுறும் உலகம், சுத்த சக்தி உபாசனையாலே அமைதியுறும்.* ***ஓம் சுத்த சக்தி .......*** *இம்மந்திர சக்தியே எனக்கு யோகசித்தி யளித்தது. இது எல்லா உலகிற்கும் பொது மந்திரம். இடர்ப்படும் மானிடத்தை மாசறுத்துத் தேசுறுத்தி, வீறுபெற்ற சக்திக் கனலாக்கும் யோக சித்தியைத் தருவது ஓம் சுத்த சக்தி மந்திரம். வான், வெளி, வளி, தீ, நீர், மண், கதிர், கடல், மழை, பயிர், உடல், உயிர், உணவுத் தொகுதி எல்லாம் சுத்த சக்தி விளக்கமேயாம். சுத்த சக்தியின் சச்சிதானந்தக் கூத்தே உலகாடலாம். உலகம் சுத்த சக்தி சைதன்ய லீலை. அதுவே விராட் ஸ்வரூபம்; அதுவே ஹிரண்யகர்ப்பம்; அதுவே அந்தர்யாமியான பிராக்ஞன்; அதுவே வியஷ்டி, சமஷ்டி, தனி, தொகுப்பு. உடலில் கட்டுண்டது ஜீவாத்மா; அதில் சுத்த பரமாத்ம சக்தி சுதந்தரமாக விளங்குகிறது. கைதி சிறையிலிருக்கிறான்; அவனைக் காக்கும் காவலனும் சிறையுட் புகுவான், வருவான்; ஆனால் அவன் கைதியன்று. அதுபோலவே சுத்த பரமாத்ம சக்தி, உயிருடலில் கட்டில்லாமல் விளையாடுகிறது. அதுவே விழிப்பில் உலகம், கனவில் மனக்காட்சி, சுழுத்தியில் மறதி, தியானத்தில் உணர்வு, துரியத்தில் அறிவு, மகாதுரியத்தில் தூய பேரின்பமாக விளங்குகிறது. அதுவே அன்பருள் அன்பு, அறிஞருள் அறிவு, இன்பருள் இன்பு, இறைவருள் இறைமை, புலவருட் புலமை, யோகியுட் சக்தி.*

### 1. மஹா குண்டலிக் கனல்

*உடல் சவம்; கடவுள் சிவம்; இரண்டிலும் கலந்துறையும் சீவன், சுத்த சக்தி சைதன்ய வடிவம். சுத்த சக்தியே ஆக்கும் அயன், காக்கும் மால், அழிக்கும் உருத்திரன், அடக்கும் மகேசன், அருளும் சதாசிவன், அமைதியான சாட்சியாக அமரும் சுத்த சிவன். சுத்த பரமாத்ம சக்தி, ஐந்துதொழில் புரிந்தும், அதற்கும் அப்பாற்பட்டது. அது தூய அரு, மாசற்ற சாட்சி. அதுவே ஆணில் ஆண்மை, பெண்ணிற் பெண்மை. உடலும் உலகும் மாறும் மறையும்; சுத்த பரமாத்ம சக்தி என்றும் இயல்பு திரியாதிருக்கும். அதுவே அறிவும், தெளிவும், கலையும், கல்வியும் நல்கி, நம்மைப் பக்குவப் படுத்தும் கலைமகள்; அதுவே அழகும், திருவும், செல்வமும், சீரும் சிறப்பும் நல்கி வாழ்வை இன்பக் கவிதையாக்கும் திருமகள்; அதுவே உக்கிர வேகத்தால் தட்டுத் தடைகளை முட்டி யெறிந்து, விடுதலை நல்கும் மகாகாளி. அதுவே அமைதியும், அடக்கமும் உபசாந்த நிலையும் தந்து தியானத்தை*

*நிலைநாட்டும் மகேசுவரி. அதுவே மாசற்ற இன்பமும், அகமகிழ்வும் தெய்வப் பொலிவும் அருளும் மனோன்மணி; அதுவே யோகசித்தி நல்கி, மானிடத்தில் தெய்வத் தன்மையை விளக்கும் சுத்த பராசக்திக் கனலாகும். அதுவே மூலாதாரத்தில் குண்டலிக் கனல்; அதுவே ஸஹஸ்ராரத்தில் மஹா சுத்த குண்டலிக் கொழுந்து.*

## 2. சுத்த சக்தி சாதனம்

*சுத்த சக்தி சாதனத்தால் மஹாகுண்டலி சித்திக்கும். சரியை, கிரியை, யோகம், ஞானம் இந்த நான்கும் அதன் முதற் படிகள். மஹாதுரிய சமாதி இரண்டாம் சுத்தபடி. ஜோதிலயம் மூன்றாவது படி. சுத்த சக்தி மயம் நான்காவது படி. சுத்தானந்த தத்பரம் ஐந்தாவது படியாகும். ஆணவம், மாயை, கன்மம் ஆகிய அழுக்கேறிய சகலாத்மா, சுத்த பரமாத்ம சக்தியைச் சரண் புகுந்து, பிரளயாகலனாகி, பிரளயாகலன், விஞ்ஞான கலனாகி, விஞ்ஞானகலன் ஆனந்தனாகி, சின்மயனாகி, தன்மயனாக விளங்க வேண்டும். இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியா காரம், தாரணை, தியானம், சமாதி(நன்னெறி, தூய வாழ்வு, நல்லிருக்கை, உயிர்ப்பமைதி, அடக்கம், ஒடுக்கம், உன்னம் (தியானம், ஒருமை)) ஆகிய எட்டும் யோக சாதனங்களாகும். சரியை, கிரியை, யோகம், ஞானம் (ஒழுக்கம், வணக்கம், ஒருமை, அறிவு) இவை சித்தாந்த சாதனங்களாம். சிரவணம், மனனம், நிதித்தியாஸம், நித்தியாநித்திய விவேக விசாரம், சமம், தமம், திதீட்சை, உபரதி, இம்மை அம்மைப் பயன் விழையாமை, முமுட்சுத்துவம் ....... ஆகிய பத்தும் வேதாந்தப்படிகளாம். இவையெல்லாம் சுத்த சக்தி சாதனத்தால் எளிதாக வரும். இருட்டறையில் குருட்டுக் கிழவனைப்போலத் தவிக்கும் ஜீவான்மாவை, சுத்த பரமாத்ம சக்தி அன்பு காட்டி, அருளூட்டி, இளமையாக்கி கண்ணைத் திறந்து, கருணை விளக்கி, உண்மைக்கு நடத்துகிறது. அறியாமையில் களிம்பேறிக் கிடக்கும் ஆன்மாவை, சுத்த சக்தி மாசறுத்து மாற்றேற்றி, மெருகேற்றிப் பத்தரை மாற்றுத் தங்கமாகப் பொலியச் செய்கிறது. ஊனத்தில் மயங்கிய ஆன்மாவைத் தியானத்தில் நாட்டி, தியான மலர் ஞானக் கனியாகச் செய்கிறது. அழிமுனையில் அலையும் சீவனைச் சுழிமுனையில் அடங்கச் செய்கிறது. சிறிய இன்பத்தில் மயங்கி வருந்தும் சீவனுக்கு, சுத்த சக்தி பெரிய நிலையின்பம் அளிக்கும். இரவு பகலில் வட்டமிட்டலையும் உயிருக்கு, என்றும் நின்று ஒளிரும் நித்திய ஜோதியை விளக்கும் சுத்த சக்தி சாதனம் அளவற்ற இன்ப நலமாகும்.*

## 3. மந்திர விளக்கம்

*ஓம் சுத்த சக்தி என்பதன் உட்பொருளைக் காண்போம். ஒரு காலம் பரமாத்மனிடம் வரம் பெறுவதற்காக ரிஷிகளும் ரிஷிபத்தினிகளும் நீண்ட தவம் புரிந்தனர். பரமாத்மன் ரிஷிகளுக்கு 'த்' என்றார். ரிஷி பத்தினிகளுக்கு 'க்' என்றார். அதன் விளக்கம் கேட்டனர். முன்னே தேவர், அசுரர், மாந்தர் ஆகிய மூவரும் பிரம்மாவின் உபதேசத்தை நோக்கித் தவம் புரிந்தனர்; பிரம்மா மூவருக்கும் த, த, த — என்றே ஒலித்தார். அதன் பொருள் தேவருக்கு தமத்வம் வேண்டும். புலன் மனம் அடங்கிய யோகம் வேண்டும். அசுரருக்கு தயத்வம் — பிறரிடம் இரக்கம் வேண்டும். மாந்தருக்கு ததத்வம் (ஈகை, தியாகம்) வேண்டும் என்பதாம். அதே மாதிரி பரமாத்மன் ஆண்களுக்கு த்—என்றது—சுத்தம், தயை, தருமம், தானம், தமனம், ஆத்ம தரிசனம், தனம் முதலிய தன்மைகளைக் குறிக்கும். சுத்தம் என்பது சிவம், விஷ்ணு, பிரம்மா, கணபதி, புத்தன், அருகன், அகரன், யகோவா ஆகிய எல்லாத் தெய்வங் களையும் குறிப்பதாகும். த்த—என்பது சித்தாந்தம், சித்தமாக பரமாத்ம சுகத்தை நல்குவதாகும். சுத்தம் மனோ வாக்கு காய சுத்தமாகும். கருணை, அன்பு, புலனடக்கம், தியானம் இவற்றால்*

மனந்தூய்மையுறும். தீமையில்லாத வாய்மை, இன்சொல், நாமஜபம், அருளிசை இவற்றால் மொழித்தூய்மை பெறலாம். அருட்பணி, நல்லுழைப்பு, உண்டுடுத்து வாழத் தொழிலியற்றல், ஈட்டிய பொருளைப் பகுத்துண்ணல், சமூகசேவை, பெரியார் தொண்டு இவற்றால் மெய்த்தூய்மை எய்தும். இந்த முத்தூய்மையால் அகப்புறத் தெளிவும் அமைதியின்பமும் உண்டாகும். உள்ளம் திறக்கும், தியானம் நிலைக்கும். சுத்தாத்மப் பொலிவெய்தும். தெய்வத்தன்மை வளரும், ஆத்ம சக்தி விழித் தெழும். சுத்த சாதனத்தால் சக்தி மலரும். சு—சுத்த யோகம் ; த்—சித்தி; த—தானம், தயை, தருமம், தமம், தகராகாச ஞானம் என்பதாம்.

இனி க் — என்பது மூலாதாரத்தில் அழுத்தும் பக்குவ நாதம். க் என்பது கனல் — குண்டலிக் கனல். தி—என்பது பக்தி, முக்தி, புத்தி, சாந்தி ஆகிய நலங்களாம். ச — என்பது சமம், சந்தோஷம், சாந்தம் என்பதாம். சக்தி — என்பது உலக வாழ்வு வெற்றி பெறும் யோகக்கனலும், வீறும், ஆற்றலும் தருவதாம். சுத்தம்—என்பது உள்ளுணர்வும், தெய்வத் தெளிவும் தருவதாம். ஓம் என்பது அ, உ, ம் என்ற ஒலிகளின் தொகுப்பாம். அ — அவன், சிவன், இறைவன், ஆண்டவன், அல்லா, அகரன், அப்பன், அன்னை, அறம், அன்பு, அருள், அமைதி, அகமகிழ்வு முதலிய நலங்களைக் குறிப்பதாம். உ — என்பது உள்ளம், உலகம், உண்மை, உவகை, உத்தம குணங்கள், உயர்தவ யோகம், உலகான்மா இவற்றைக் குறிப்பதாகும். ம் — என்பது மனிதான்மா, அறிவு மலர்ச்சி, மகிழ்ச்சி, மதமச்சரமின்மை இவற்றைக் குறிக்கும். ஓம் என்னும் பரமாத்மனை சுத்த யோகத்தால் உபாசித்து, சக்தி பெற்று, சுத்த பரமாத்ம சக்தியால் உலகாலயத்திற்கு அருட்பணி செய்து, ஆறு போல வாழ்ந்து, அறிவுக்கடலைக் கலந்து, ஆனந்தமாதலைக் குறிக்கும் மஹா சுத்த யோகமந்திரமே ஓம் சுத்த சக்தி. வேதசாரம் காயத்திரி; அது ஓம் பரமாத்மனின் சுத்த சைதன்ய சக்தியைத் தியானித்து மேலோங்கத் தூண்டும். ஓம் சுத்த சக்தி என்பதே காயத்திரியின் விளக்கமாகும்.

இந்த மந்திரத்துடன் பல பீஜாக்ஷரங்களைச் சேர்த்து உபாசிக்கலாம். பீஜாக்ஷர ரகசியமெல்லாம் குரு முகமாகவே அறியத்தகும்.

## 4. சுத்த சக்தி சஞ்சாரம்

சுத்த சக்தி ஊற்றெடுக்கும்போது நரம்புகளில் ஒரு நுட்பமான மின்சாரக்கனல் உணர்வாகும். அதையே உள்ளாரக் கவனித்துக் கொண்டிருந்தால், தியான மோன சமாதி கைகூடும். அது தீவிரமாக ஆக துரிய நிலையும், அது தீவிரமாக துரியாதீத நிலையும், மஹா துரிய நிலையும், சுத்தானந்த சுயஞ்ஜோதி சைதன்ய நிலையும் சித்திக்கும். உள்ளனுபவங்கள் எல்லையற்றனவாகும். ஹடயோகம் தூல வீரிய தேகங்களை வளமாக்கி, நரம்புகளையும் சுரப்பிகளையும் செழிப்புறுத்தும். இராஜ யோகம் மனதை நிலை நாட்டி தர்ம மேக சமாதி நிலை கூட்டும். மந்திர யோகம் ஆதாரங்களை மலர்த்தும். தந்திர யோகம் பெண் சக்தியால் ஆண்மையின் வீறு பெற்ற ஆதாரங்களை மலர்த்தி, குண்டலியை எழுப்பி, ஸஹஸ்ராரத்தில் அதைச்சேர்க்கும். மூலாதாரத்தில் விழித்தெழுந்த குண்டலி, சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாஹதம், விசுத்தி, ஆக்ஞை, ஸஹஸ்ராரங்களுக்கு மேலும் அதி நுட்பமான சக்தி நிலையங்களில் பரவும். அவை கிரியா யோகங்களுக்கு எட்டாவாம்.

ஆஸனம், பிராணாயாமம், தியானம், சமாதி ....... இந்த நான்குமே சாதனயோகங்களின் முதன்மையான பயிற்சி. இவை நாம் முயன்று செய்வனவாம். இவற்றின் பயன் சக்தி சஞ்சாரமே. இடா, பிங்கலா, சுஷும்ணா

ஆகிய மூன்று யோக நாடிகளைச் சார்ந்தே சக்திக்கனல் ஓடும். கிரியா யோகங்களில் 'நான்' என்ற ஆணவ முனைப்பு இருக்கும்; 'எனக்கு' என்ற ஆசையுமிருக்கும். எனது, யான், எனக்கு என்ற உணர்வை ஊணாக்கி, எல்லாம் இறைவனுக்கு என்ற தியாக வுணர்வு தழைத்தாலே திருவருள் இறங்கும்.

கர்ம யோகம், பக்தி யோகம், ஞான யோகம் இம்மூன்றும் அருட் சக்தியும் தெய்வத் தன்மையும் தரும். இவற்றின் அடிப்படை அடைக்கலம். உள்ளத்தும் உலகத்தும் நிலவும் பரமாத்ம சக்திக்கே ஆளாகி அதற்கே வேள்வியாக அருட்பணி செய்தல், ஆராதனை செய்தல் கர்ம யோகம். அதையே உள்ளக்கோவிலில் ஆவாகனம் செய்து உயிர்த்துடிப்பெல்லாம் அன்பு மலராக்கி வழிபடுதல் பக்தி யோகம். அதனுடன் அதுவாக உணர்ந்து கலந்து ஒன்றுதல் ஞானயோகம். இதற்கு மேல் அதே நினைவாயிருந்து உள்ளத் துடிப்பெல்லாம் சுத்த சக்தியாக்கி உணர்வாயிருத்தலே சுத்த சக்தி யோகமாகும். இதனால் அந்தக்கரண சுத்தியும், ஆதார சுத்தியும், ஆத்ம சுத்தியும் எய்தி, மேலிருந்து "சுத்த சக்தி" உச்சியில் ஸஹஸ்ராரத்திற்கு மேல் உள்ள சுத்தாத்ம மண்டலத்தில் தாண்டவம் புரிய வுணரலாம். இந்தத் தாண்டவம் எனக்கு எட்டு வயதில் திருவருளால் எழுந்தது; இன்றும் நடக்கிறது. இதுவே திருவடி நடனம், சிதம்பர தாண்டவம், காளிங்க நடனம். உன்மினி சமனிக்கு மேலுள்ள சிதாகாச சிற்சபையில் சுத்த பரமாத்ம சக்தி இவ்வாறு தாண்டவமாடும் போதுதான், ஊனிடம் கொண்ட மானிடம், தேனிடங் கொண்ட ஞான நடம் புரியும் சுத்த சக்தி சைதன்ய நிலையமாகும். இது தான் பிறவிப் பயன். இப்பயனைப் பெறும் உபாசனையே சுத்த சக்தி உபாசனை. இனி உபாசனையில் முனைவோம்.

## 5. சுத்த சக்தி தியானம்

ஜயஜய சுத்த சக்தி சரண்பர மாத்ம ஜோதி !
பயந்தவிர்; பகைதீர்; ஆத்ம பலமருள்; பழுத்தவாக்கு
நயந்தருள்; யோகசித்தி நன்றருள் ஞாலவெற்றி
வியன்கலை நல்கு நீயே நான்எனும் வீறு தாராய்!

அலைமனம் அடங்கிச் சீறும் ஆணவப் பேயடங்கி,
மலையென நிட்டைகூடி வானென வாழ்ந்து தெய்வக்
கலைநதி யெனவுலாவுங் களிப்பெமக் கீவாய்; உள்ளே
நிலைபெறும் அன்பருக்கு நின்னையே நல்கும் எந்தாய் !

படிகம்போல் மேனிகண்டேன்
பால் வண்ணங் கண்டேன்; உள்ளம்
படிகக்கண் ணாடியாகிப் பளிச்சென ஒளிரக் கண்டேன்
அடிமுடி காணாத் தூய அறிவினைக் கண்டேன் ; இன்பத்
துடிநடங் கண்டேன் ....... சுத்த
ஜோதியின் அருளைக் கண்டேன் !

ஓங்காரக் கண்ணாடிமுன் ஒளிமணி விளக்கிலங்க
நீங்காத நிட்டைகூடி நெஞ்சிலே நீயிலங்க
ஆங்கார மில்லாநானுன் அன்பிலே ஆழ்ந்திலங்க,
தூங்காத தூக்கந் தந்தாய் சுத்தஓம் சக்திதாயே !

பகைவரின் பலமொடுங்கப் பாழ்சின வசையடங்க
நகைப்பவர் வாயடங்க நானெனும் செருக்கடங்கத்
தகைமிகுங் கவிதைச்செல்வம் தழைத்திட வரமளித்தாய்
வகைவகைச் சந்தத்தாலுன் மகிமையைப் பாடவாராய் !

*எனதுளத் துடிப்புநீயே என்னுள்யான் எனது—நீயே*
*உனதருட் கருணையின்றி யுயிரிலேன் உயிர்ப்புமில்லேன்*
*மனதினைக் கடந்து ஞான வானிலே நடனமாடும்*
*புனிதமே என்னுளத்தை புண்ணியகோயில் கொள்ளாய் !*

*ஆரறி வாருன் மாண்பை அற்புதச் சிற்ப ரம்பா !*
*பாரறி விளக்கே பந்த பாசத்தை யுருவி யோங்கும்*
*சீரறி யிரவியே நின் சித்தமே யாக வென்னும்*
*தாரக மொன்றே பற்றிச் சரண்புகும் என்னைக் காவாய் !*

*கலைதரு மறிவே ஞானக் கண்மணிக் கொளியே ; மாய*
*வலைதரும் தீமை நாடா மனத்தெளி வருளி, அன்பு*
*நிலைதரும் அருளே, ஆன்ம நேயமே, மூலாதார*
*வுலைதருங் கனலே என்னை உய்யக்கொண் டாளுவாயே !*

*தொன்றுநான் மறைகளீந்தாய், துலங்குமா கமங்களீந்தாய்*
*நன்றுயிர் வாழ நான்கும் வளம்பெற நல்கு கின்றாய்*
*வென்றுயர் கவிதை யீந்து வீரமும் வீறு மீந்தே*
*என்றுமென் இதய மன்றில் இருந்துல காளு வாயே !*

*வாழ்கநின் அன்பர் கூட்டம் வழிவழி நின்பேர் வாழ்க !*
*வாழ்கநின் யோக சித்தர் மரபுநீ டூழி யிங்கே ..*
*வாழ்கநின் அறிவுச்செல்வம் வரந்தருந்திருக்கை வண்மை*
*சூழ்கவோம் சுத்த சக்திச் சுடரொளி யுலக மெல்லாம் !*

## 6. சுத்த சக்தி அருச்சனை

*ஓம்சுத்த சக்தி ஜயஸத்ய ஜோதி*
*ஓம் சச்சிதானந்த பரம க்ருபா நிதி*

*அன்பு மலரால் அன்னையைத் தொழுவோம்*
*இன்ப மெல்லாம் எளிதாய் வருமே !*
*அறிவா யெங்கும் நிறைவாய் போற்றி !*
*அருளால் உலகை அளித்தாய் போற்றி !*
*அன்பே வடிவாய் அமர்ந்தாய் போற்றி !*
*அறவழி காட்டும் அரசியே போற்றி !*
*அன்னையே போற்றி, அமுதே போற்றி !*
*ஆற்றலைப் பெருக்கும் ஊற்றே போற்றி !*
*ஆக்கமும் புகழும் ஆக்குவாய் போற்றி !*
*ஆருயிர்க் கோருயி ரானாய் போற்றி !*

*ஆதி சக்தியே, ஆணையே போற்றி !*
*இகபர சுகங்களை ஈவாய் போற்றி !*
*இறவாக் கலையின் இறைவீ போற்றி !*
*இருள்கடிந் தொளியை யிலக்குவாய் போற்றி !*
*இகல்கெடுத் தமைதி யிசைப்பாய் போற்றி !*
*இதயக் கனலா யெழுந்தாய் போற்றி !*
*ஈரே முலகையும் ஈந்தாய் போற்றி !*
*ஈரிலாக் கருணை வாரியே போற்றி !*
*ஈகையிற் சிறந்த மேகமே போற்றி !*
*ஈன மொழிக்கும் ஞானமே போற்றி !*

ஈசனோ டொன்றாம் இறைவியே போற்றி !
உலகெலாம் கோயில்கொண் டிலகுவாய் போற்றி !
உயிர்களை நாளும் ஊட்டுவாய் போற்றி !
உணர்ந்தோர் உணர்விற் குணர்வே போற்றி !
உண்மை விளக்குங் கண்மணி போற்றி !
உள்ளத் தின்ப வெள்ளமே போற்றி !
ஊமையும் பேச வுன்னுவாய் போற்றி !
ஊழையும் வெல்ல வுதவுவாய் போற்றி !
ஊனுடற் பிணிகளை யொழிப்பாய் போற்றி !
ஊரெலாஞ் செழிக்குங் காரே போற்றி !

ஊணுடைத் தேவை யுதவுவாய் போற்றி !
ஊற்ற மளிக்கும் ஆற்றலே போற்றி !
எண்ணு மெண்ணத் தினிப்பாய் போற்றி !
எண்ணிலாப் புவிவளர் விண்ணே போற்றி !
எல்லாம் வல்ல வல்லபி போற்றி !
எங்குந் திருவரு ளிறைப்பாய் போற்றி !
என்னை யாளும் இறைவியே போற்றி !
ஏகம் அநேகமாய் எழுந்தாய் போற்றி !
ஏகாண்டத்தின் இரவியே போற்றி !
ஏக்கந் தவிர்த்தெமை யூக்குவாய் போற்றி !

ஏழைமை தவிர்க்கும் இலக்குமி போற்றி !
ஏற்ற மளிக்கும் இச்சையே போற்றி !
ஐந்தொழில் புரியும் அருளே போற்றி !
ஐம்பூத வுலகிற் காதியே போற்றி !
ஐம்பிழை தீர்க்கும் அறமே போற்றி !
ஐயந் தவிர்க்கு மெய்யே போற்றி !
ஐக்யானு பூதி யருளுவாய் போற்றி !
ஒன்றிய மனந்தொறு நின்றாய் போற்றி !
ஒற்றுமை யோங்கும் உயிரே போற்றி!
ஒருகுல முலகென் றுணர்த்துவாய் போற்றி

ஒவ்வோ ருயிர்க்கும் உள்ளமே போற்றி!
ஒளியே, அகண்ட வெளியே போற்றி !
ஓங்கா ரத்தின் உட்பொருள் போற்றி !
ஓதா துள்வளர் வேதமே போற்றி !
ஓங்குமா னந்தத் தீங்கனி போற்றி !
ஓவா முயற்சி ஈவாய் போற்றி !
ஓம்பரா சக்தி, ஓம்மஹா சக்தி !
ஔவியப் பேய்களை அடக்குவாய் போற்றி !
ஔதா ரியத்தின் ஆழியே போற்றி !
ஔடத மாகும் அன்பே போற்றி !

ஔபா சகரின் அருநிதி போற்றி !
அஃகா வளந்தரும் ஆற்றலே போற்றி !
கல்வி யருளும் கலைமகள் போற்றி !
காளியே, சக்திக் கனலே போற்றி !
காதலர் காணுங் காட்சியே போற்றி !
கிழக்கே பகலாய்க் கிளரொளி போற்றி !
கீழ்மை யகற்றுங் கீர்த்தியே போற்றி !

குருவே, யனந்த குணமே போற்றி !
கூன்பிறை சூடியின் குலசக்தி போற்றி !
கெம்புகள் கெழுமிய கொம்பே போற்றி !

கேண்மைக் கேற்ற பான்மையே போற்றி !
கைத்தொழில் வளர்க்குங் கையே போற்றி !
கொழுந்துவிட் டோங்குங் குண்டலி போற்றி !
கோபப் பேயைக் குமைப்பாய் போற்றி !
கௌரியே போற்றி, கன்னியே போற்றி !
சரணம் சரணம் சக்தியே போற்றி !
சாந்தப் பொலிவருள் சங்கரி போற்றி !
சிந்தனைக் கினிய சிற்பரை போற்றி !
சீலந் தந்தருள் சிவையே போற்றி !
சுத்த சக்திஓம் நித்திய சக்தியே !

சூரிய னுள்ளொளிர் சுடரே போற்றி !
செந்தணல் போன்ற சுந்தரி போற்றி !
சேயா யெனைவளர் தாயே போற்றி !
சைதன்ய ஜோதி தருவாய் போற்றி !
சொல்லற் கரிய சுகமே போற்றி !
சோதி யளிக்கும் சொல்லே போற்றி !
சௌபாக் கியமருள் சாம்பவி போற்றி !
அஞ்சா நெஞ்சுரம் அளிப்பாய் போற்றி !
ஆண்மையும் வீறும் அருளுவாய் போற்றி !
ஞான மஹேஸ்வரி, நாரணி போற்றி !

அஞ்ஞா னத்தை யழிப்பாய் போற்றி !
வஞ்சர் கொடுமையை மடிப்பாய் போற்றி !
சஞ்சலந் தவிர்த்தருள் சாந்தையே போற்றி !
அட்டமா சித்தி யளிப்பாய் போற்றி !
ஆதார கமலத் தமர்வாய் போற்றி !
இடாகினீ, ராகினீ, லாகினீ போற்றி !
காகினீ, சாகினீ, ஹாகினீ போற்றி !
ஸஹஸ்ரா ரத்தமர் சக்தியே போற்றி !
திங்களிற் புன்னகை செய்வாய் போற்றி !
மங்கள சக்தி மாதவி போற்றி !

சிங்கம் போன்ற திறலளி போற்றி !
தங்கம் போன்ற தனுவளி தாயே !
துணிவுளார்க் குதவுந் துணையே போற்றி !
பணிசெய்வார்க் குதவும் பயனே போற்றி !
மணிமருந் தருளு மந்திரம் போற்றி !
அணிபெரும் படைப்பின் அரசியே போற்றி !
தகரா காச சக்தியே போற்றி !
தாரக மான சாந்தமே போற்றி !
திறமைக ளீயும் தீயே போற்றி !
தீனரைக் காக்கும் தெய்வமே போற்றி !

துஷ்டரை யழிக்கும் துர்க்கையே போற்றி !
தூயரைக் காக்கும் நாயகி போற்றி !
தெவிட்டா துள்வளர் தேனே போற்றி !
தேவியே, வாழ்விற் காவியே போற்றி !

தைரிய மளிக்கும் தருமமே போற்றி !
தொந்தந் தவிர்க்கும் சுதந்தரி போற்றி !
தோற்றப் புலியைத் தோற்றினாய் போற்றி !
தையலாய் உலகந் தருவாய் போற்றி !
தயவே வடிவாம் தாயே போற்றி !
நல்லார் விரும்பு நட்பே போற்றி !

நாடி வீணையிற் பாடுவாய் போற்றி !
நித்திய மான நிமலையே போற்றி !
நீலியே போற்றி, பாலையே போற்றி !
நுண்ணியர்க் கறிவாம் பண்ணே போற்றி !
நூலறி வுணரா நுட்பமே போற்றி !
நெஞ்சினிற் கொஞ்சும் கிஞ்சுகம் போற்றி !
நேர்மையாளர் நெறியே போற்றி !
நைவுதீர் மருந்தை நயப்பாய் போற்றி !
நொந்தவர் நோவற நோக்குவாய் போற்றி !
நோன்பிற் குறுதி நுவலுவாய் போற்றி !

பரமனோ டொன்றிய பார்வதீ போற்றி !
பார்வையுள் ளாக்கினார் பார்ப்பே போற்றி !
பிரம சக்தியாம் பிராமியே போற்றி !
பீடுறு மன்பரை நாடுவாய் போற்றி !
புண்ணியர் போற்றும் விண்ணே போற்றி !
பூரணர் வணங்கும் நாரணி போற்றி !
பெண்வடி வான பிரமமே போற்றி !
பேதங் கடந்த நீதியே போற்றி !
பைரவி போற்றி, பவானி போற்றி !
பொதுநிலை வளரும் போதமே போற்றி !

போகமார் பூரண யோகமே போற்றி !
பௌவமும் வானும் பரந்தாய் போற்றி !
மங்கலம் பொழியும் மனோன்மணி போற்றி !
மாசிலார் வணங்கும் மலரடி போற்றி !
மின்னிப் பறக்கும் புன்னகை போற்றி !
மீனைப் போன்ற விழியே போற்றி !
முத்தர் விரும்பும் முதல்வீ போற்றி !
மூலா தாரச் சுவாலையே போற்றி !
மெய்யுணர் வளிக்கும் வித்தையே போற்றி !
மேகலை யாடுந் தோகையே போற்றி !

மைமுகில் விரிந்த மதியே போற்றி !
மொள்ளக் குறையா வெள்ளமே போற்றி !
மோகனக் கதிர்விரி முகமே போற்றி !
மௌனிக ளுள்வளர் வானமே போற்றி !
யாழெனக் கொள்ளென் யாக்கையை அம்மே,
யோக சித்தி யுதவுவாய் போற்றி !
பெரியவ ருள்ளப் பெருமையே போற்றி !
அரியவ ருள்ளத் தருமையே போற்றி !
வரங்களைப் பொழியும் வண்மையே போற்றி !
வாழ்வு செழிக்கும் வாய்மையே போற்றி !

விஞ்ஞா னத்தின் விளக்கமே போற்றி !

*வீறு மிகத்தரும் வீரியே போற்றி !*
*வெற்றி யருளும் வித்தகி போற்றி !*
*வையகங் கோயிலாய் வளர்வாய் போற்றி !*
*பழமையே, என்றும் புதுமையே போற்றி !*
*அழகே போற்றி ! அணியே போற்றி !*
*அளவிலா விளையாட் டாற்றுவாய் போற்றி !*
*அறநெறி வாழ்வை யளிப்பாய் போற்றி !*
*உன்னரு ளோங்கி உயிர்க்குலம் வாழ்க !*
*ஆன்ம நேயம் அவனியிற் பரவுக !* 170

*நன்மை யோங்குக, நாடெலாம் வாழ்க !*
*இன்ப வளங்கள் எங்கும் நிறைக !*
*அன்பும், அருளும், ஆயுளும் செல்வமும்*
*புலமையும் புகழும் பொங்குக நிதமும் !*
*புதுயுகம் வருக, பூரணம் பொலிக !*
*அமரவாழ் வருளாய் அன்னையே போற்றி !*
*சுத்தம் அருளாய் சக்திஓம் சக்தி*
*முத்தி யருளாய் சக்திஓம் சக்தி*
*சமத்துவ மருளாய் சக்திஓம் சக்தி*
*சித்தி யருளாய் சக்திஓம் சக்தி*
*சக்திஓம் சக்தி, சுத்த சக்தி ஓம் !* 182

## 7. சுத்த சக்தி முழக்கம்

*வானமாய் விரிந்தனை மழைக் கருணை காட்டினை*
*தேன்மலரில் வண்டெனத் திருந்துவேத மோதினை*
*நானவ னவளென நடந்தனை; வளர்ந்தனை*
*ஞான மான சுத்த சக்தி ஞாயிறே சரண் சரண்*

*வஞ்சமற்ற சேயைப்போல மழலைபேசி வந்தனன்,*
*அஞ்சலென் றருளுவாயென் அன்புத் தெய்வமே சரண்*
*தஞ்சமுன்னை யன்றியார்? தருவதுன்னை யன்றி யார்?*
*நெஞ்சிலே துடிக்குமின்ப நேயமே சகாயமே !*

*பாடும்போது பாடுவாய் பசித்தபோ தருந்துவாய்*
*ஆடும் போதி லாடுவாய் அடங்கும்போ தடங்குவாய்*
*வாடும்போது வாட்டம்போக வாழ்வின்யாழை மீட்டுவாய்*
*வீடு கொண்டென் னுள்ளத்தே விளங்கு சுத்த சக்திஓம் !*

*கண்ணிற் காணுங் காட்சிநீ கருத்திலே நினைப்புநீ*
*விண்ணிற்காணு மற்புத விள க்குநீ; கிழக்குநீ*
*மண்ணிற்காண் இயற்கைநீ வளம்பெறும் பசுமைநீ*
*பண்ணிற் காணும் ஓசைநீ பழத்திலே சுவையுநீ !*

*பெண்ணி லன்புப் பெண்மைநீ பிறக்குமா ணறிவுநீ*
*எண்ணிலா வுயிர்களின் இதயக்கூத் தியல்புநீ*
*தண்ணருட் பெருக்குநீ தழைத்த வாழ்வின் மூச்சுநீ*
*எண்ணநெஞ்ச கத்திலே இலங்குசுத்த சக்தியே !*

*உன்னையன்றி யானில்லை உயிரிலை உலகிலை*
*அன்னையப்ப னன்பெலாம் அடங்குமன்பு வானமே*
*என்னையாக்கி யுன்னையே யெனக்குள் வைத்தஜோதியே*
*தன்னைப்பன்மை யாக்கியே தழைத்த சுத்த சக்தியே !*

*கனக்குமாயக் காட்டிலே கலங்கிநிற்கும் சேயெனை*
*நினக்கெழுந்து நின்னிலே நிலைத்தியங்கு நேயனை*
*உனக்கினிய தொண்டனை உதறித்தள்ளி யிப்படி*
*மனக்குரங் கிடம்வருந்த வாட்டல்ஆட லாகுமோ?*

*எனக்குறும் பெருமைகள் உனக்குறும் பெருமைகள்*
*எனக்குறும் சிறுமைகள் உனக்குறும் சிறுமைகள்*
*வினைக்குலப் பகைகடந்து வெற்றிநாட்ட நீயருள்*
*எனக்கு வெற்றி யென்பதும் உனக்கு வெற்றியாவதே.*

## 8. சக்தி உச்சாடனம்

*உலகையாளும் சுத்த சக்தி எல்லா வரங்களையும் ஈய வல்லது. உள்ளம் உருக உச்சாடனம் செய்து ஜபிக்க ஜபிக்க சக்தி வீறு தணலும், குண்டலி சுழலும். புத்தி தெளியும். பலம் வளரும். நினைத்தது கைகூடும். பராசக்தி உச்சாடனத்தை பக்தி சிரத்தையுடன் செய்பவர் உலகில் இணையற்று விளங்குவார்கள். அதற்கேற்ற மந்திரநாதங்களை இந்தப் பகுதி விளக்குகிறது.*

## சக்தி உச்சாடனம்

*தொண்டர் நாதன் துணைவி பராசக்தி*
*கண்ட கண்கள் களிக்கும் மனோன்மணி*
*கொண்ட நெஞ்சங் குளிரு மருட்சிலை*
*வண்டு வார்குழ லம்மையை வாழ்த்துவாம் !*

*ஓம்சுத்த சக்தி, ஓம்சிவ சக்தி*
*ஓம்பர தேவி உன்னடி பணிந்தேன்;*
*உன்னை யன்றிப் பின்னொரு துணையிலேன்*
*அன்னை, அன்னை, என்முகம் பாராய்*
*உறுதியாக உன்னையே நம்பினேன்*
*வருதி யென்றொரு வார்த்தைசொல் லாயோ?*
*பெற்றவள் வெறுத்தாற் பிள்ளையென் செய்வேன்?*
*கற்றவர் போற்றுங் கனியே, தேனே*
*கல்வி யறிவிலேன், காட்சியு மில்லேன்*
*செல்வப் பெருக்கிலேன், சிந்தையி லுன்னை*
*அன்புடன் கூவும் ஆர்வமே கொண்டேன்*
*பண்புட னென்னைப் பரிந்தாட் கொள்வாய்*
*இல்லற மாகிய நல்லறத் திருந்தே*
*வல்லபி யுன்னை வழுத்துவோர் வாழ்கவே.*
*உன்னடி பற்றி உலகினில் வாழ்வேன்*
*இன்னடி யாரின் இணையிலாத் துணையே*
*கண்டதே காட்சி, கொண்டதே கோலம்*
*என்றலை மனதை இழுத்துள் ளடக்கி*
*ஐம்புலச் சேட்டைகள் அறவே நீங்கிப்*
*பைம்புல னுலவும் பசுங்காற் றெனவே*
*சுதந்திர மாகவுன் பதமலர் பற்றி*
*இதந்தரு தமிழால் இசைத்துனை நாளும்*
*கவலையை வெல்லுங் களிப்பெனக் கருளாய்.*
*திவலையும் உறுதி சிதையா தருளாய்*
*மனத்தி லின்பமே மல்கிட வருளாய்*
*தனகனஞ் சுற்றம் மனைமகா ரெல்லாம்*

*உனதென மதிக்கும் உளமெனக் கருளாய்*
*வறுமை யின்றி வளமிகத் தருவாய்*
*நறுமண மலரின் நகையெனக் கருளாய்*
*உண்மையே பேசும் உரையெனக் கருளாய்*
*வண்மையே பெருகும் வளமெனக் கருளாய்*
*பிள்ளைச் செல்வம் பெருகிட வருளாய்*
*வள்ளற் கையால் வரமிகத் தருவாய்*
*கற்புள மனைவி களிப்புற வருளாய்*
*நற்புக ழோங்கும் நாவுக் கரசுபோல்*
*பத்தியும், பணியும், பைந்தமிழ் வாக்கும்*
*சித்த சுத்தியும், சிவக்கன லொளியும்*
*தருவாய்; உனது தாளை நினைத்ததும்*
*வருவாய் வருவாய் வரதாம் பிகையே !*
*அன்பர் கேட்டதை அக்கண மளிக்கும்*
*அன்பே, அருளே அறிவுச் சுடரே,*
*பெயரைக் கேட்டதுந் துயர்கள் விலகும்,*
*உயரும் கீர்த்தி, உலகும் வணங்கும்;*
*அம்மையே வாழ்வின் அமுதமே போற்றி*
*இம்மைச் சுகங்கள் ஈவாய் போற்றி*
*பொய்யறு புகழும், பொலிவுறு மறிவும்*
*செய்யநற் சிந்தையும், தியான சித்தியும்*
*அன்பர் அன்பும் அன்புப் பணியும்*
*விமலர் தொண்டும், வித்தகர் நட்பும்*
*அஞ்சா நெஞ்சும் ஆத்தும சக்தியும்*
*துஞ்சா முயற்சியும் தோன்றாத் துணையும்*
*வெற்றியுந் திருவும் வீரத் தணலும்*
*பெற்றுநான் வாழும் பெருமை யருளாய்*
*பகைவர் நடுங்கும் பலமெனக் கருளாய்*
*தகைபெருஞ் சுத்த தரும சக்தியே*
*மலைபோ லெனக்குக் கலைவள மளிப்பாய்*
*அலைகடல்போல ஆழ்ந்த நல்லறிவும்*
*பிணியிலா வுடலும் பிறகிடாத் துணிவும்*
*அணியழ கோங்கும் ஆத்தும நேயமும்*
*கொடியார் என்முன் குமையும் சக்தியும்*
*அடியார் மகிழும் அருட்பணித் திறனும்*
*பொருளும், புவியும், போகமும், போதமும்*
*அருளும், ஆயுளும், ஆர்வமுந் தருவாய்*
*அம்மைப் பயனை இம்மையி லளிப்பாய்*
*அம்மையே அமரத் தன்மை யளிப்பாய்*
*எண்ணிய தெய்துந் திண்மன மளிப்பாய்*
*புண்ணியம் பெருகும் கண்ணிய மளிப்பாய்*
*கண்பார்த் தென்னைக் கைதூக்கி விட்டுப்*
*பண்புடன் காவாய் பகவதி தாயே !*

*சரணம் சரணம் சதாசிவ சக்தி*
*சரணம் சரணம் சத்குரு தேவி*
*சுத்த சக்தி ஓம், சுத்த சக்தி ஓம்*
*சுத்த சக்தி ஓம் சுத்த சக்தி ஓம் !*

*பூவெலாம் படைத்த பூதநா யகியே,*
*புகலடை புண்ணியர் தமக்குக்*
*காவலாய் நிற்குங் கருணை நாயகியே,*
*கண்கருத் துயிருட லினிக்கத்*
*தேவர்கொண் டாடுஞ் சித்திநா யகியே*
*சிவந்தரு சக்திநா யகியே*
*ஆவலாய் உன்னைக் கூவினேன், பணிந்தேன்*
*அடியனுக் கருள்புரி வாயே !*

## 9. ஹாரதி கீதம்

*ஓம்ஜய ஓம்ஜய ஓம்ஜயஓம்*
*ஓம்ஜோதி ஓம்ஜோதி ஓம்ஜோதி ஓம்*
*ஓம்சிவ ஓம்சிவ ஓம்சிவ ஓம்*
*ஓம்குஹ ஓம்குஹ ஓம்குஹ ஓம்*
*ஓம்சக்தி ஓம்சக்தி சுத்த சக்தி ஓம்*
*சுத்த சக்தி சுத்த சக்தி சுத்த சக்தி ! ஓம்*
*ஓம்ஜய ஓம்ஜய ஓம்ஜய ஓம்*
*ராம்ஜய ராம்ஜய ராம்ஜய ராம்*
*சியாம்ஜய சியாம்ஜய சியாம்ஜய சியாம் !*
*பிரேம்ஜய பிரேம்ஜய பிரேம்ஜய பிரேம் !*

*ஜயஜோதி ஜயஜோதி ஜயஜோதி ஓம்ஓம்*
*ஓம்ஜோதி ஓம்ஜோதி ஓம்ஜோதி ஓம்ஓம் !*
*ஓம்சுத்த பரமாத்ம குருஜோதி ஓம்ஓம்*
*ஓம்சக்தி சைதன்ய ஜகஜோதி ஓம்ஓம்*
*ஹ்ருதயாத்ம நடராஜ பரஞ்ஜோதி ஓம்ஓம்*
*ஓம்விஸ்வ நாராயண த்யானஜோதி*
*ஓம்சர்வ கல்யாண நவஜீவஜோதி*
*ஓம்சுத்த யோக சமாஜாத்ம ஜோதி*
*ஓம்ஜோதி ஓம்ஜோதி ஓம்ஜோதி ஓம்ஓம் !*
*ஜயஜோதி ஜயஜோதி ஜயஜோதி ஓம்ஓம் !*

# 6. யோக வேள்வி

## 1. தியானம்

*சச்சிதா னந்தா சர்வாத்ம நாதா,*
*எல்லாம் வல்ல இறைவா போற்றி !*
*சூரிய னுள்வளர் ஜோதியே போற்றி !*
*உயிர்க்குயி ரான உயிரே போற்றி,*
*நலந்தரு மங்கள நாயகா போற்றி,*
*விண்புவிக் கெல்லாம் வேந்தே போற்றி,*
*வணங்கத் தக்க வாய்மையே போற்றி*
*உள்ளிடங் கொண்ட ஒப்பிலா ஒருவா,*
*அன்பும் ஆர்வமும் அடக்கமும் உறுதியுங்*
*கொண்டு மனதுட் குவிந்துனை நினைந்தோம்*

*அருளால் அறிவைத் திருவுறத் தூண்டி*
*பேரின்ப சித்தி பெருக நடத்துவாய்;*
*மடவிருள் போக்குஞ் சுடரொளி யாவாய்,*
*பொய்தவிர் சத்திய போகமே யாவாய்,*
*இருளற ஒளிக்கொளி எம்மை நடத்தாய்;*
*பொய்யற வாய்மைப் பொருளை யுணர்த்தாய்,*
*தாமத மொழியச் சத்துவ மீவாய்,*
*சாவறு ஞானத் தண்ணமு தாவாய்,*
*மானிடம் அமர வாழ்வுறச் செய்வாய்,*
*பாவம் போக்கிப் பரிசுத்த மருளாய்,*

*கிழக்குந் தெற்கும் வடக்கும் மேற்கும்,*
*மேலும் கீழும் மேவிய பரமா,*
*சக்தி மயனே சாந்த ஜோதியே,*
*எல்லாத் திசையிலும் எல்லா நிலையிலும்*
*உளங்கொண் டுன்னை உபாசிக்கின்றோம்,*
*சுகநா யகனே, சுபதா யகனே*
*சிவன்அரி அயன்குரு தேவேந் திரனெனப்*
*பலபெயர் கொண்ட பகவனே போற்றி !*
*சர்வமுந் தானாம் சமத்துவக் கடவுளே,*
*எங்கள் வாழ்வுன் இச்சையா லியங்கி,*

*மனமொழி மெய்யில் மாசிலா தொழுகி,*
*நலமே நினைந்து நலமே பேசி*
*நலமே செய்து நற்கதி யடைந்து,*
*விஞ்ஞா னத்தவ வேள்வியாய் வளர்ந்து,*
*நாலாச் சிரம நன்மையும் பெற்று,*
*அறம்பொரு ளின்பம் அருட்கலப் பென்னும்*
*பேறுக ளெல்லாம் பெரிதும் அடைந்து,*
*துன்மார்க்க மற்ற சன்மார்க்க மெய்தி*
*நோய்துய ரற்ற தூய பலத்துடன்,*
*பகைசினம் பொறாமைப் படைகளை வீழ்த்தித்*

*தீர சக்தியாற் செயமே ஓங்கிப்*
*புகழ்பெற வாழ்ந்துன் புண்ணியம் போற்றி,*
*உன்னொளி கலந்து தன்மய மாகிச்*
*சச்சிதா னந்தந் தழைத்திட வருளாய் !*

*உனது தியானமே உயிர்ப்பா குகவே*
*உனது துதியே உரையா குகவே*
*உனது சேவையே உழைப்பா குகவே !*
*பொறிபுலன் கரணம் அறிவாம் ஆன்மா,*
*ஆகிய தத்துவம் அனைத்துமுன் அருளால்,*
*தூய இன்பந் துலங்கிடச் செய்வாய்.*

*நலந்தருங் கனலே ஞாயிறே போற்றி,*
*உன்னரு ளாலே உலகெலாம் வாழ்க !*
*எல்லா உயிர்களும் இன்புற் றொளிர்க,*
*ஒருவரை யொருவர் திருடுத லின்றி*
*உன்மய மான உலகினர் என்றும்*
*தொழில்செய் தீந்துண் டெழில்பெற வாழ்கவே.*
*யோகமும் சுத்த போகமும் வளர்க,*
*ஞானமுஞ் செல்வமும் தானமும் தவமும்,*
*நீண்டநல் ஆயுளும் நிறைவாம் இன்பமும்,*
*அருள்வாய் ஓம்பரம் பொருளே வணக்கம் !*

*சேதனக் கனலே, திவ்வியச் சுடரே,*
*ஞான சக்தியே, நலந்தருங் கொழுந்தே,*
*ஆருயிர் உனக்கே ஆகுதி யாகுக !*
*ஓம்புவி அந்தரம் ஓம்விண் மஹஜன*
*ஓம்தப ஸத்திய உலகெலாம் பரவிய*
*ஓம்ஓம் ஓம்ஓம் ஓம்சுயஞ் ஜோதி*
*ஓம்சுத்த சக்தி, ஓம்பரமாத்மா !*
*ஓம்ஓம் வணக்கம் உண்மையே போற்றி*

## 2. வேள்வித்தீ வளர்த்தல்

*எப்பொருள் அறிந்தார் அறிந்தவர் ஆவார்*
*எப்பொருளாள ரின்புறுவார்,*
*எப்பொரு ளிரவுபகலென்ப தின்றி*
*இறப்பையும் பிறப்பையும் வென்றே*
*சிற்பர ஒளியாய் அமரவாழ் வருளும்,*
*தேன்விளை ஞானவூற் றாமோ,*
*அப்பொருளுண்மை அறிவினுக் கெம்மை,*
*அக்கினிக் கடவுளே நடத்தாய்.*

*அகர வுகர மகர ஓங்கார*
*சிகர ஜோதி சிற்பர ஜோதி !*
*சுத்த ஜோதி சுதந்தர ஜோதி !*
*சத்திய ஜோதி சமரச ஜோதி !*
*சிவநா ராயண பரிபூ ரணஓம்*
*ஹரிஹர சங்கர குருகுஹ ஜயஓம் !*

*ஒன்றாய்ப் பலவாய் உயிருக் குயிராய்*
*விளங்கும் கனலை விரும்பி வளர்ப்போம் !*
*அருட்பெருங் கனலே, ஆருயிர்க் கனலே !*
*இருட்டினை வெருட்டிடும் இரவிக் கனலே !*
*சக்திச் சுடரே, சாந்தச் சுடரே,*
*பக்திக் கனலுடன் பணிந்தோம் உனையே !*
*தாமத மாயை தன்னை விலக்கிச்*

*சேமந் தருவாய் சிவச்சுட ரொளியே !*
*வீறு தருவாய் வெற்றிக் கனலே;*
*ஆறுத லளிப்பாய் அன்புக் கனலே !*
*ஆற்றலும் ஆயுளும் அளிப்பாய் போற்றி*
*அருளும் பொருளும் ஆக்குவாய் போற்றி*
*மருளும் மதியை மாற்றுவாய் போற்றி*
*துன்பந் துடைத்துத் துயரை விலக்கி*
*இன்பம் பெருக்கும் எழிலே போற்றி*
*உள்ளன் புடனே உன்னை வணங்கினோம்*
*தெள்ளிய கருணை வெள்ளமாய் வருவாய்*
*மரபு விளங்க மக்களைத் தருவாய்*
*உழைத்த செல்வமும் உழைக்கும் ஆற்றலும்*
*உலகிற் கினிதாம் உத்தமத் தொழிலும்*
*வந்ததைப் பகுத்துணும் சிந்தையும் அருள்வாய்*
*சீர்மை யருளாய் நேர்மை யருளாய் !*
*வீர தீரமும் வெற்றியும் அருளாய்*
*அமைதி யுள்ளமும் அயரா முயற்சியும்*
*கட்டறு மனமும் கலங்கா வுறுதியும்*
*காரிய சித்தியும் கோரிய வரமும்*
*மங்கல வாழ்வும் எங்களுக் கீவாய் !*
*உலக மெல்லாம் ஒருகுல மாகி*
*அருள்வழி வாழும் அன்பினைத் தருவாய்;*
*யோகமும் சுத்த போகமும் கொண்ட*
*செவ்விய திவ்விய ஜீவனந் தருவாய் !*
*பிரம சரிய குருகுலக் கல்வியும்*
*திண்மையும் தண்மையும் ஒண்மையுந் தருவாய்*
*அறம்பொரு ளின்பமும் அருளும் பொலியும்*
*எங்கள் வாழ்வு பொங்குக திருவே !*
*எண்ணும் எழுத்தும் கண்ணும் கதிரும்*
*உயிரும் மெய்யும் உலகும் வானும்*
*இயற்கையும் கடவுளும் இதயத் துடிப்பும்*
*போல வாழும் பொலிவெமக் கருளாய் !*
*சீலமே தருவாய் சிவத்திருக் கனலே*
*ஒற்றுமை தருவாய் உள்ளொளிக் கனலே*
*நற்றவக் கனலே ஞானமெய்க் கனலே*
*பாரெலாம் பரவிய பராபரக் கனலே*
*இதயக் குகையில் எழுந்தவக் கனலே*
*முருக வேளாக முளைத்த கனலே*
*குமுறி மேலேறும் குண்டலிக் கனலே*
*போற்றி போற்றி புண்ணியக் கனலே*
*பூரணக் கனலே காரணக் கனலே*
*சரணம் சுத்த சக்திக் கனலே*
*ஓம்சுப மங்கல ஒளிமணிக் கனலே*
*ஓம்சுயஞ் சோதி ஓம்சுவாக ஓம் !*

## 3. சுடர் வணக்கம்

*ஓங்குக செழுஞ்சுடரே ....... எங்கள்*
*உள்ளொளி வானுயர் வெள்ளொளி காட்டி*
*வீங்குக வெண்சுடரே ....... நெஞ்சில்*

*வீரம் பெருகிடக் கூரம்பு போர்சிகை*
*தாங்குக நீள்சுடரே ....... நிதம்*
*தந்தெமக்கிந்திர போகமும் யோகமும்*
*ஓங்குக தெய்வச் சுடர் ....... நிதம்*
*ஓம்தத்ஸத் ஓம்தத்ஸத் ஓம்தத்ஸத் ஓமென (ஓ)*

*நெற்றிக்கு மேலுயர்ந்தே ....... அங்கு*
*நின்மல மாயொளிர் பொன்மணித் தீபம்போல்*
*கொற்ற நெடுஞ் சுடரே ....... கடுங்*
*கூற்றையுஞ் சாடிடும் ஆற்ற லளித்தருள்*
*பெற்றவள் போலுருகி ....... நிலம்*
*பேணியெம் அன்பினைப் பூணும் புகழ் பெறும்*
*வெற்றி மணிச் சுடரே ....... அருள்*
*விண்ணர சையிந்த மண்மிசை நாட்டிட (ஓ)*

*வேண்டி வணங்குகின்றோம் ....... தெய்வ*
*வேட்கைகொள் உள்ளத்தில் வீறுற் றெழுந்தின்பத்*
*தாண்டவ மாடிடுவாய் ....... சொக்கத்*
*தங்கத் தணலுடல் எங்களுக் கீந்திசை*
*தூண்டி நடத்திடுவாய் ....... நாங்கள்*
*சுத்த சுதந்தர நித்திய வாழ்வினை*
*யாண்டும் பரப்பிடவே ....... பர*
*மாத்ம பலமருள் அக்கினித் தேவனே ! (ஓ)*

*எண்ண முயர்த்திடுவாய் ....... வாக்கில்*
*இன்கவி பொங்குக வுன்கனல் வெள்ளம்போல்*
*கண்ணைத் திறந்திடுவாய் ....... உளக்*
*கண்ணைத் திறந்திடுவாய் ....... எங்கள்*
*காதலிலே தெய்வச் சோதி யொளிர்மனத்*
*திண்மை யளித்திடுவாய் ....... திரள்*
*செல்வங்கள் யாவையும் நல்கிடுவாய் ....... அறி*
*வுண்மை யின்பஞ் செழிக்க ....... நிதம்*
*ஓம்தத்ஸத் ஓம்தத்ஸத் ஓம்தத்ஸத் ஓமென (ஓ)*

*மூலக் கனலே முதிய வுலகாளும்*
*காலக் கனலே கதிரொளியே ....... நீலகண்டன்*
*பாகத் தமர்ந்த பரம சிவக்கனலே*
*யோகத் தமர்வாயென் னுள்.*

*காலைக் கமலம்போற் கட்டவிழு மல்லிகைபோல்*
*பாலைச் சுரக்கும் பசுவேபோல் ....... வேலருவி*
*யாழைப்போ லேகுழலின் ஏழிசைபோலேயுலகில்*
*வாழத் தருவாய் வரம்.*

# 7. நவக்கிரக மாலை

## 1. பரம்பொருள் வணக்கம்

*அன்றும் இன்றும் என்றும் பொன்றா
ஒன்றாய் எங்கும் நின்றாய் போற்றி !
பலவாய் உலவும் பரம்பொருளே நின்
அருளே துணையாய் ஆலய உலகில்
அல்லும் பகலும் அகநெக் குருகி
உயிர்த் தொகையான உனக்கே நாளும்
வாழ்ந்தேன், அன்பில் ஆழ்ந்தேன் ஐயா.
பூமாலையுடனே பாமாலை சூட்டி
வணங்கிநின் கருத்திற் கிணங்கிய பணிகளை
இயன்ற மட்டும் இயற்றியிந் நாள்வரை
வாழ்ந்தேன் என்னை வழிநடத் திடுவாய்...
உலக வாழ்வில் கலகம் எத்தனை
காசடிக் கான மோசடி எத்தனை...
முன்கோப மெத்தனை, பின்கோப மெத்தனை
நன்றி மறந்த நாசம் எத்தனை...
அடுத்துக் கெடுக்கும் அரக்கர் எத்தனை...
பொய்நரி வஞ்சப் பொறாமை எத்தனை..
எல்லாம் பொறுத்துன் இணையடி துணையென
நல்லதே நாடி நடந்த தூயனை
வருத்தாதினிநல் வளம்பெறச் செய்வாய்.
நவக் கிரகங்களும் நண்பராய்க் கூடித்
துணைசெய வருளாய், இணையறு பரமா !
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதனுடன்
வியாழன் வெள்ளி சனி ராகு கேதுவாம்
ஒன்பது கிரகமும் உன்னொளித் திரளே..
எல்லையற் றோங்கி இடம்விரி வானில்
கோடிக் கோடி கோடி சூரியர் ... !
மானிடர் காணும் வானக் கதிரோன்
மேனியிற் சிதறி மிளிர்கிர கங்கள்
நாண்மலர்க் கிடையே கோண்மணிச் சுடர்கள்
சடப்பொருளான சுடர்ப்பொறிச் சூழல்கள்
சித்துப் பொருளாம் சீவனைத் தாக்குதல்
எப்படி என்றும் இயம்பச் செயலிலேன்
சோதிடம் அறியேன்... சூழ்ச்சிகள் அறியேன்;
ஏமாற்றங்கள் எத்தனை வரினும்
மனமாற்ற மின்றிநின் மகிமையை நம்பும்
அனாதைக் குழந்தையை அன்புவைத் தாளாய் !
'எல்லாம் நீயே' என்னும் கொள்கையால்
நவக்கிர கத்திலும் தவக்கிரக கத்திலும்
உன்னையே கண்டுள் ளுவந்தேன்; குறைகளை
முறையிடு கின்றேன் மூலப் பொருளே .. !
கருணையா ரமுதே, கண்ணுக் கொளியே.. !
என்னையாண் டருளி இச்சையை நடத்தாய்...*

## 2. சூரியன்

*சூரிய னுள்வளர் சுடரே வணக்கம் !*
*வீரிய பலமும் வினைத்திட்ப முடன்*
*மனத்திட்ப மீந்தெனை மாண்புறச் செய்வாய்;*
*மனவிருள் போக்கி இனப்பகை தீர்த்து*
*நினைவை உயர்த்தி நீசப் பகையைச்*
*சுட்டெரித் தான்ம சுதந்தர ஒருமையிற்*
*கூட்டிநின் சக்தியை ஊட்டி வளர்ப்பாய்.*
*நின்னொளி கண்டு தன்னொளி கண்டு*
*உன்னொளி யாலே உலகொளி யாக*
*விளங்கும் யோக வெற்றியைத் தாராய்...*
*நோயில் லாது நூறுநூ றாண்டு*
*வாழும் வகையை வகுத்தெனைப் பழக்கி,*
*வாழ்வெலாம் அறிவு வேள்வி யாகிடவே*
*அருட்கவி வளமை அளிப்பாய் போற்றி !*

## 3. சந்திரன்

*பொங்கும் இன்பப் புன்னகை யமுதே,*
*திங்களே சாந்த மங்கலம் பொழிவாய்,*
*தேய்ந்து தேய்ந்துநீ தினம்வளர்ந் தாலும்*
*தேயா தென்னுட் சிரித்தொளி வீசாய்..*
*சினவா ளரக்கர் சீறித் துயர்செய*
*வரும்போ தவர்மனம் மாறித் திரும்பத்*
*தண்பனி மொழிகளைத் தருவாய் மதியே..*
*மொட்டுகள் மலரும் முத்து நிலாவே..*
*கட்டுகள் நீங்கிக் கவலைகள் ஒழிந்தே,*
*அழகும் மணமும் அருளும் அன்பும்*
*பொலிந்திடும் வாழ்வைப் பொழிந்தருள் சசியே !*

## 4. செவ்வாய்

*செவ்வாய் செவ்வாய் மணக்கச் செய்வாய் !*
*போட்டி பொறாமைகள் போர்புரி யுலகை*
*ஆட்டி வைக்கும் அங்கா ரகனே..*
*மனப்போர் வெல்லக் கனலொன் றளிப்பாய்..*
*அமைதி யாகநான் அமர்ந்துநல் யோகம்*
*புரியத் துணைசெய், அரிய துணைவா ..*
*செவ்வாய் என்றால் வெறும்வாய் என்பார்..*
*செவ்வாய் தோஷம் தேய்க்குமென் பார்கள்;*
*வறுமைப் பிணியை வெறுமை யாக்குவாய்;*
*மடமை தேய மாசறு ஞான*
*ஒளியைத் தருவாய், உலகத் துயர்கள்*
*பற்றா தென்னைப் பரிந்தருள் புரிவாய்..*
*அங்கா ரகனே, ஆங்கார மின்றிப்*
*பகைசின மின்றிப் பாரினில் வாழச்*
*செய்வா யிப்போ, செய்வா யப்பனே !*

## 5. புதன்

*புதனே போற்றி, இதமுடன் என்னை*
*நன்மைக்கு நன்மை நடத்துவாய் போற்றி !*
*அன்பு வடிவே இன்பம் பெருகும்*
*ஆண்மைக் காதலால் மாண்புறச் செய்வாய்..*
*காதலைக் கெடுக்கும் மூதேவி யான*
*பேரா சைப்பேய் பிடியா தொழிப்பாய்..*
*இதயக் குகையில் உதயக் கதிர்போல்*
*எழுந்து பொலிவாய் இன்பம் பெருகவே !*
*துன்ப வினைகளைத் தூருடன் போக்கித்*
*தொல்லையில் லாத தொண்டினில் ஊக்கி*
*நாளெலாம் அன்பு வேள்விசெய் திடவே*
*அறிவுந் திருவும் ஆற்றலும் அளிப்பாய்..*
*"பொன்கிடைத்தாலும் புதன் கிடைக்காதே"*
*என்பர் உலகோர்; இதனை நம்பி*
*இடைவிடா துன்னை ஏத்திப் பணிந்தேன்.*
*திருவும் அறிவுந் தருவாய் அரசே !*

## 6. வியாழன் (குரு)

*ஆழுநல் லறிஞனாம் வியாழ பகவானே !*
*உலகக் குருவே, உயர்தவச் சுடரே !*
*கல்வியும் கலையும் கைத்தொழிற் செல்வமும்*
*வேத ஞானமும் வித்தகச் சித்தியும்*
*யோகக் கலையின் உன்னதப் புலமையும்*
*பன்மொழித் திறனும் நன்மொழிச் சுவையும்*
*உயர்ந்த சிந்தையும் உள்ளத் தெளிவும்*
*சாதி மதமிலாச் சத்திய சுத்த*
*சக்தி யோக சாதன வெற்றியும்*
*ஈவாய் குருவே இன்பத் தெய்வமே !*

## 7. வெள்ளி

*உள்ளங் கவரும் வெள்ளியே போற்றி !*
*மிக்க நலந்தரு சுக்கிரா போற்றி !*
*எக்குறை யுமிலா மிக்குயர் வாழ்வை*
*சுக்கிர தசையெனச் சொல்லுவோர் மேலோர்..*
*சீரும் சிறப்பும் பேரும் புகழும்*
*செல்வமும் கல்வியும் சேர்ந்துல கெல்லாம்*
*போற்றும் பேற்றை ஆற்றுவாய் போற்றி !*
*வெள்ளிக்கு வெள்ளி வீறு மிகுந்த*
*விழுமிய னாகி விளங்கச் செய்வாய்..*
*அதிட்ட மென்பதுன் இட்டமே யாகும்..*
*கண்பார்த் தெனது கவலை தீரப்*
*புண்களைப் போக்கி பூரண மாக்கி*
*மங்கலம் பொங்க மகாலட்சுமியின்*
*புன்னகை யமுதம் பொலியப் பொலிய*
*வளம்பெறு வாழ்வை வழங்கி யருளாய்..*
*வெள்ளியே உனக்கென் உள்ளன் பாமே !*

## 8. சனி

*சனிபக வானே சனிபக வானே.. !*
*சரணம் சரணம் சனிபக வானே.. !*
*உன்னை உலகோர் என்னவோ சொல்லி*
*அஞ்சுவர்; சனியென அருவருத் தோதுவார்..!*
*தீயன நினைத்துத் தீயன சொல்லித்*
*தீயன செய்யும் தீயரை ஒறுப்பாய்..*
*நல்லன நினைத்து நல்லன சொல்லி*
*நல்லன செய்யும் நண்பரைக் காப்பாய்..*
*மண்பெண் பொன்னில் மயங்கித் திரியும்*
*ஆசைப் பேய்கள் அணுகா தொழிப்பாய் ;*
*ஏமாற்று கின்ற மாமாய வலையில்*
*இழுத்துத் துயர்செய் இகலைக் கெடுப்பாய் ;*
*புல்லிய தினவுகள் புகாதெனைக் காத்து*
*நல்லியல் யோக நாட்டமே தருவாய்..*
*சனியே என்னை இனிக்கலக் காமல்*
*அங்கும் இங்கும் அலைத்தழிக் காமல்*
*பகைவரைத் தூண்டிப் பழிசுமத் தாமல்*
*அமைதி தருவாய்; அன்புசெய் கின்றேன்*
*மேலும் மேலும் மேலும் யோக*
*சித்தி யளித்துச் சக்தியை வளர்த்துச்*
*சிந்தை யெல்லாம் சிவத்தேன் ஊறிக்*
*கவிமலர் மாலை கவின்பெறச் சூட்டிப்*
*பேரும் புகழும் ஊரின் மதிப்பும்*
*பொதுஜன நட்பும் பொங்கும் செல்வமும்*
*நாவசைந் ததுமே நாடசைந் துதவும்*
*செல்வாக் கருளாய், நல்வாக் கருளாய்..*
*சனிபக வானே, சனிபக வானே.. !*
*சரணம் சரணம் சனிபக வானே*
*சரணம் சரணம் சனிபக வானே !*

## 9. இராகு, கேது

*இராகுவே, கேதுவே, இப்புவி வாழ்வில்*
*இன்னலும் இடரும் எண்ணறப் பட்டேன் ;*
*இருளில் வருந்தினேன், இழிநிலை இன்றி*
*அருளைத் தூண்டி ஆக்க மளிப்பீர்.*
*படமெடுத் தாடும் பாம்பென நவில்வார்*
*மதியை விழுங்கும் மருளென மருள்வார்*
*அவ்வகை நினையேன், செவ்விய நல்லீர்*
*தீய பகையைத் தீண்டி விழுங்குவீர்..*
*நல்லதை யிங்கே நாடிடப் புரிவீர்*
*மதிரவி மறைய விதிநிழல் பரப்பும்*
*கோள்காள் உம்மைக் கும்பிடு கின்றேன்..*
*யோகமும் பாட்டும் ஆகுமெய் வாழ்வில்*
*பகைசெய் கவலைப் பாம்பு புகாமல்*
*ஆசை யகந்தை மாசு புகாமல்*
*ஒளியும் உரமும் தெளிவுந் தேசும்*
*அருளும் ஆண்மையும் அஞ்சா நெஞ்சும்*

*தந்து நடத்துவீர் தாயன் புடனே*
*வந்து நடத்துவீர்; வளம்பெறு வாழ்க்கை*
*உமக்கே நிவேதனம்; உயர்வான் சுடர்காள் !*
*நண்பராய் வருவீர், நவக்கிர கங்காள்..*
*உம்மை வணங்கி உலகில் வாழ்கிறேன்,*
*வாழ்வெலாம் யோக வேள்வி யாகுகவே !*
*நலமெலாம் பொலிய நிலமெலாம் வாழ்கவே !*

# 8. சமயோக தீபிகை

## 1. ஆழச்சிந்திப்போம்

*இந்த மாமரம் கனிகுலுங்குகிறது. புட்கள் வருகின்றன; கனியுண்கின்றன; காதலிக்கின்றன; கூடுகட்டி வாழ்கின்றன; குஞ்சுகளை ஊட்டி வளர்க்கின்றன; அந்தியில் 'ஜிவ்' வென்று பாய்ந்து பறந்து துள்ளிக் குதித்து ஆடிப் பாடிப் பரவசமாகின்றன; இரவின் மோகன மடியில் உறங்குகின்றன; மலர் குலுங்க, மணம் பரவ, மந்த மாருதக் குழலூத, காலைக் கன்னி கனிமுகங் காட்டுகிறாள். புட்கள் எழுந்து உதயகானம் செய்கின்றன; கூடிப் பேசிக் குலாவுகின்றன; 'வீர்' ரென்று நீலவானிற் பறந்து செல்லுகின்றன. பெயர், வடிவு, நிறம், பாட்டு, குரல், உணவு, இடம் — இவை பலவிதம்; இவற்றாற் சண்டை கிடையாது; மண்வெறி, மதவெறி, பெண்வெறி பணவெறிகளால் குத்திக் கொண்டு இறப்பதில்லை. பகுத்தறிவுள்ள மனிதன் ஏன் புறவேற்றுமைகளைப் பாராட்டிச் சண்டை போட்டு மண்டை யுடைகிறான்? சண்டையில்லாது, பிரிவினைப் பீடையில்லாது மாந்தர் உள்ளொருமையில் வாழ முடியுமா? ஆழச்சிந்திப்போம். புத்தகங்களைக் கட்டி வைப்போம். புத்—தகத்தால் சித்த சோதனை செய்வோம்.*

## உறக்கமேன் ?

*ஞான நூல்களும், நீதிநூல்களும், உபதேசங்களும், உபதேசியார்களும் எண்ணமுடியா. எல்லாம் கும்பகர்ணனுக்கு மணியடித்த கதையாயின ! மனித சமுதாயம் இன்னும் இருளில் உறங்குகிறது. சமயம், கிளைச்சமயம், குட்டிச்சமயம். ஒவ்வொன்றிற்கும் சாமி, மடம், கோயில், கொள்கை, குறி, செயல், பரிபாஷை, சாத்திரம்—இவை வெவ்வேறு; ஒவ்வொன்றிற்கும் மோட்சம் வேறு. இருக்கட்டும்; உலகம் பலவிதம். ஆகாயத்தில் நட்சத்திரக் கூட்டங்கள், அமைதியாகத் தமது கடமையைக் காத்துக் காலைக் கோயிலை நோக்கி யாத்திரை செய்யவில்லையா? மனிதன் மட்டும் எழுத்தாலும், வாயாலும், வாளாலும், சண்டை போட்டுத் தற்கொலை புரிந்து கொள்வதேன்? அதுவும் காணாக் கடவுள் பெயரால் !*

## சண்டை வேண்டா !

*கடவுள் ஒன்று; கட்சி பல. தருமம் ஒன்று; தர்க்கம் பல. வாய்மை ஒன்று; வாக்குவாதம் பல. சைவம், வேதாந்தம், சாக்தம், சமணம், பௌத்தம், ஜரதுஷ்ட்ரம், யூதம், கிறிஸ்தவம், இஸ்லாம்—எல்லாம் எதை நோக்குகின்றன? இன்பத்தை ! அருட் புலவர் இன்பத்திற்கு அறவழி காட்டினர்; மனிதன் மதக் கோட்டை கட்டிச் சண்டை போடுகிறான்: ஏட்டுச் சண்டை, எழுத்துச் சண்டை, சாமிச் சண்டை, சமயச்சண்டை, பூச்சுச்சண்டை, குடுமிச் சண்டை, சோற்றுச் சண்டை, மடச்*

*சண்டை, கோயிற் சண்டை, தீர்த்தச் சண்டை, மோட்சத்திற்குக் கூடச் சண்டை! பாராலயத்தில் ஏனிந்தச் சண்டைகள்? 'கடவுள் ஒருவன், உயிர்க்குயிர், அவனே கதி' என்று எல்லாம் பேசுகின்றன. கடவுளை ஒப்பா மதங்கள் 'ஆன்மா ஒன்று; அஃது இன்ப மயம்; ஆசையாணவ மாயத்தை யொழித்தால் அதை யடைந்து இன்புறலாம்; எல்லாருக்கும் அன்பாயிரு; ஒன்றையும் பகைக்காதே, கொல்லாதே! ' என்று பேசுகின்றன. நடப்பதென்ன? இத்தனை உபதேசங்களும் சந்தைக் கூச்சலுக்குச் சரளி போட்டவன் கதையாயினவே! ஏன் இன்னும் மனித சமுதாயம் இன்பத்தைக் காணவில்லை?*

## துன்பமேன் ?

*மக்களூரில் பல மதத்தினர்கள் இருந்தார்கள்; அவர்கள் தத்தமது கோயிலில், 'இறைவா, எமக்கே இன்பமருள்! ' என்று வேண்டினார்கள். கடவுள் ஒரு மலை மீது தோன்றினார்: "நானே இன்பம்; எல்லாருக்கும் இன்பந் தருவேன்; ஒற்றுமையாக வாருங்கள், அன்பாயிருங்கள்! " என்றார். "எல்லாருக்குமா? நானும் அந்த அஞ்ஞானியும் சரியா? குல்லா போட்ட நானும், தொப்பி போட்ட அவனும் சரியா? நெற்றியைப் பாரும்; நெடுக்கு குறுக்கு பார்த்துப் பேசும். கடவுளே, உமக்கு உயர்வு தாழ்வு தெரிய வேண்டாவா? நான் வெளுப்பு, அவன் கறுப்பு, இவன் பழுப்பு; அதோ அவன் மஞ்சள்; எப்படி ஒன்றாக முடியும்? " என்றனர் சாதிப்பித்தரும் நிறவெறியரும். "அன்பிருக்குமிடம் யானிருப்பேன். ஒத்தால் இன்பம்; பகைத்தால் துன்பம். சாதிமதச் செருக்குள்ள மட்டும் இன்பம் வாராது! " என்று மறைந்தார் கடவுள் !*

*வானம் பொழிகிறது; நிலம் விளைகிறது, உழைப்பிருந்தால் பிழைப்புண்டு; செழிப்புண்டு. எனினும் பஞ்சம், வறுமை, போட்டி, பொறாமை, சோற்றுச் சண்டைகள் — இவை மனித வகுப்பைக் கொல்லுவானேன் ! பாம்புக் கலியாணத்திற்குத் தேரை இலை போட்ட கதையாகிறது, மனிதரின் வாணிபச் சூழ்ச்சி. "பாகம் உனக்கு, பத்திரம் எனக்கு, மரம் உனக்கு, பழம் எனக்கு, நிலம் உனக்கு, நெல் எனக்கு, பாடு உனக்கு, பண்டம் எனக்கு" என்ற மாதிரி, மனித வுரிமையைப் பேராசை பிடுங்கித் தின்கிறது. உதட்டிலே ஐயர்வாள், வயிற்றிலே அரிவாளாயிருக்கிறது மனிதர் உறவு ! சபைகூடிச் சமாதானம் பேசுவர்; படை கூடிக் குண்டு வீசுவர் !*

*ஒரு சமயம் பல நாட்டார்கள் கூடிச் சமாதான தேவதையை வேண்டினர். தேவதை அசரீரியாகப் பேசினாள்: "நல்லது, சமாதானந் தருவேன்; ஆனால், அவரவர் அவரவர் நிலத்தைக் காத்துப் பிறர் பொருளுக்குப் பேராசைப் படாதிருப்பீர்களா? உங்கள் அணுகுண்டுகளைக் கடலில் எறிவீர்களா? அணுச் சாலைகளை மூடுவீர்களா? உள்ளதைக் கொண்டு உழைத்துப் பிழைப்பீர்களா? ஒருவரை யொருவர் பகற்கொள்ளை யடிக்கா திருப்பீர்களா? " என்று கேட்டது! "நல்ல சாமியம்மா நீ! என் அணுச் சாலையில் கையை வைக்காதே; அல்ஃபாக் கதிர் சுடும். மேன்மேலும் மண்ணும் பொன்னும் கொடுத்தால் நல்ல சாமி; உலகை வெல்ல உள்ளந் துடிக்கிறது, ஆயுதங்களைக் கடலிற் போடச் சொல்லுகிறாயா? எனது நிறமென்ன, மூளையென்ன, நாகரிக மென்ன? அந்தக் காட்டுமிராண்டியுடன், இந்த அஞ்ஞானியுடன், அதோ என்னுடன் போட்டி போட்டுக் கப்பல் வியாபாரம் நடத்தும் அவனுடன், எப்படி அன்பாக வாழ்வேன்? தேவதையே, எல்லா நாடும் எனது நாடு; எல்லாரும் என் அடிமைகள்; என்றால், சமாதானப் பேச்செடு; இல்லாவிட்டால் வராதே !" என்றான் ஆகாசகுண்டன். "அன்பும், அகமகிழ்வும், நீதியுமில்லாத இடத்தில் அமைதி வாராது. இரத்தங் கலந்தால் இரக்கம்; இரத்தம் கொதித்தால் யுத்தம், துக்கம். ஒன்று பட்டால் உபகாரம்; வேறுபட்டால் விவகாரம். பாம்புச் சவுக்கால் சிங்கத்தை யடக்கிச்*

*சவாரி செய்தாலும், ஆசையாணவத் திமிர் பிடித்தவன் அமைதியாக அரசாள முடியாது'' என்று சமாதான தேவதை சென்றாள்.*

*சாமிப் பஞ்சமில்லை; சமயப் பஞ்சமில்லை; நிலப் பஞ்ச மில்லை; நீர்ப் பஞ்சமில்லை. மடமையும் வறுமையும் உலகை ஏன் வாட்டுகின்றன? ஒன்றிக் கூடி வாழத்தெரியாததால், உள்ளொற்றுமை யில்லாததால், தன்னலப்பேயின் தாண்டவத்தால், ஆசையாணவத் திமிரால் மனிதன் அல்லற் படுகிறான்.*

## தரும தேவி

*''கடவுளே, உன்னைத் தொழுகிறேன்; அழுகிறேன், தூபம் போடுகிறேன்; தானம் செய்கிறேன்; எனது பக்கத்திலிரு; என் குண்டுக்கு வெற்றியளி! '' என்கிறான் மண்வெறியன். முகத்திலறைந்து முத்தங் கொடுப்பது போலிருக்கிறது இத்தொழுகை! தலையை வெட்டி மயிர்த் தானம் செய்வது போலிருக்கிறது இந்த ஈகை! தேனில் ஊறினாலும் எட்டி இனிக்குமா? ''மன்னர்களே, மனிதரை மனிதராக மதித்து ஆளுங்கள்; அறக் காவலர்களாயிருங்கள், அரசும் செல்வமும் கால நதிக்கரையிலுள்ள களிமண் மண்டபம் என்று நினையுங்கள்; உள்ள மட்டும் உண்மையாயிருங்கள், உலகில் அன்பை வளருங்கள்! '' என்கிறாள் தருமதேவி; யார் கேட்பது ?*

## சந்தேகம்

*'என் கோழியாலே தான் பொழுது விடிகிறது' என்று தனிமனிதன் தம்பட்டமடிக்கிறான். கண்ணாடிக் கோப்பையில் கொதிநீர் ஊற்றினால் கோப்பை வெடித்துப் போகிறது. மனிதர் நட்பும் ஒரு முன்கோபத்தால் தகர்ந்து போகிறது. முள்ளில்லாத ரோஜா இல்லை; சள்ளை யில்லாத சமயமில்லை. ஒவ்வொரு சமயமும் 'தனக்கே மோட்சம்; மற்றவர்களுக்கு நரகம்' என்கிறது. சாதி மதங்கள் பெருக்கிய இரத்த வெள்ளத்தைக் காண்பவருக்குப் பல சந்தேகங்கள் உண்டாகின்றன. கடவுள் உண்டா? இருந்தால் ஏன் அவர் பெயரால் இத்தனை மதச்சண்டைகள் நடக்கின்றன? சாமி மதத்தை உண்டாக்கினாரா? இல்லை. மதம், சாமியின் பெயர் வடிவின் மேல் மனிதன் பூசிய முலாம். சாமி ஒன்றா, பலவா? பலவானால், எந்தச் சாமி பெரியது? ஒன்றானால், பல சாதி சமயமேன்? ஏன் எல்லாரும் ஒரே சாமியுடன் கலந்து வாழக் கூடாது? மதம் அவசியமா? எல்லாருக்கும் பொதுவான மதம் உண்டா? மனிதன் எப்படி யிருந்தால் ஒரு குலமாக வாழலாம்? என்ற கேள்விகள் உதிக்கின்றன.*

## அகண்ட சக்தி

*ஆணவச் செருக்கு ''பார் என் மூளைத் திறத்தை; 500 மைல் மேலே ஏறிப் போகிறேன்; சந்திரனை ஆளுகிறேன்! '' என்கிறது. ''அப்பனே, அதற்குமேல் பரந்து விரிந்த ஆகாயம் உள்ளதே. உனக்குமேல் பருந்தும் பறக்கும்'' என்கிறது அடக்கம். ''பார், நான் பூமியைக் கட்டி யாளுகிறேன்; எனக்குமேல் யார் உண்டு? '' என்கிறது ஆணவம் ....... ''ஐயாவே, ஆகாயத்தில் பார்! எண்ண முடியாத விண்மீன்கள் உள்ளன; ஒவ்வொன்றும் சூரியன்; அதைச் சுற்றி எத்தனையோ உலகங்கள் உருளும். அப்படிப்பட்ட உலகக் கூட்டத்தில் இவ்வுலகம் ஓர் அணுவுக்குச் சமானம்! அந்த அணுவில் ஒரு நுனி உனது அரசு. ஏன் பெருமை பேசுகிறாய்? அண்டாண்ட கோடிகளையும் நடத்தும் ஒரு சக்தியுள்ளது. அதன்முன் உனது அதிகாரம் எந்த மட்டும்? '' என்கிறது அடக்கம். ''என் புகழ் பரவுகிறது பார்! '' என்கிறது ஆணவம். ''அப்பனே, உன்னைவிடச் சூரியன் கதிர் எங்கும் பரவி, உலகையே தாங்குகிறது பார்! ஆனால் அஃது உன்னைப் போல்*

அகந்தை பேசவில்லை" என்கிறது அடக்கம். இயற்கையின் அற்புதங்களையும், கடல், மலை, விண், மதி, கதிர், மலர், பறவைகளின் தோற்றங்களையும் உற்றறிந்தால், இவற்றை யெல்லாம் இயக்கும் ஒரு சக்தி உண்டெனக் காணலாம். அந்தச் சக்தியின் அற்புதங்களை நினைத்தால், மனிதனின் ஆணவம் தலை குனியும். கரியும் இரும்பும் சேர்ந்து மினுக்கு வயிரம் செய்கின்றனர். அஃது இயற்கை தரும் வயிரத்திற்குச் சமானமாகுமா? கோடி மின்சார விளக்கெரிந்தாலும், சூரியனுக்கு ஈடாகுமா? நீர்க்காற்று இரண்டு பங்கும், உயிர்க்காற்று ஒரு பங்குமாக (ர்ஜழு) எவ்வளவு சேர்ந்தாலும், வான் மழைக்கு ஈடுகட்ட முடியுமா? படி கொண்டு கடலளக்க முடியுமா? நமது மனத்திற்கு எட்டாத ஒரு சக்தி உலகை நடத்துகிறது. இதை அனைவரும் ஒப்பியே தீரவேண்டும்.

## ஆன்மா

அந்தச் சக்தி உண்டு; யோகிகள் உணர்கிறார்கள். அந்தச் சக்தியையும் இயக்கும் ஒரு சுத்த சக்தி உண்டு. அதையே சாமி, கடவுள், அல்லா, பிரமம் என்கின்றனர். வானத்தில் சூரியன் உதிக்கிறான். அவன் கதிர்கள் ஒளி வீசுகின்றன, கடல் ஆவியாகிறது; மேகங்கள் உண்டாகி மழை பொழிகிறது; பயிர் விளைகிறது, உயிர் செழிக்கிறது; பல தொழில்கள் நடக்கின்றன. அத்தனைக்கும் காரணம் கதிரொளி. அத்தனைக் குள்ளும் கலந்தது கதிரொளி. அப்படிக் கலந்தும் தான் தனியே ஆகாயத்தில் இருந்தபடியே இருக்கிறது. அதுபோலவே சுத்த சக்தி அகண்ட சேதனமாக, அறிவாக எங்கும் பரவியுள்ளது: ஒவ்வொருவரும் அதன் கோயிலே. ஒவ்வொருவர் உள்ளத்தும் அதுவே ஆன்மாவாக உள்ளது; வாழ்வின் அடிப்படை அதுவே. நீர் கடவுளை ஒப்பினாலும் சரி, ஒப்பாவிட்டாலும் சரி; மதங்களை மதித்தாலும் சரி, விடுத்தாலும் சரி; உம்மிடம் குடி கொண்டிருக்கும் உயிருக்குயிரான ஆன்மாவைப் பிரிய முடியாது. நீர் அதை அறிந்தாலும் சரி, அறியா விட்டாலும் சரி, அஃது உம் உள்ளத்தில் உள்ளது. உமது வீட்டுக்குள் ஒரு புதையலுள்ளது; உமக்கே தெரிய வில்லை; இடம் பார்த்துத் தோண்டினால் அகப்படும். உமது உள்ளத்தில் ஒரு பரம சுகப் பொருள் உள்ளது! உள்ளே ஆழ்ந்து தியானித்தால் அதை உணரலாம். அதைப் பரம நாத்திகனும் மனங் குவிந்து காணலாம். அப்பொருளை உள்ளே கண்டால், 'ஒவ்வொருவரும் அந்த ஆன்மாலயமே' என்று உணரலாம். அப்போது எல்லாரிடமும் பேரன்பு பிறக்கும்; ஒற்றுமை உண்டாகும். எல்லாவுடலும் இறைவனாலயமே — என்னும் சமயோக தரிசனம் உண்டாகும்.

## வேதகானம்

அந்த ஆத்மாவை அறிந்துதான் நம் பாரத மகரிஷிகள் வேதகானம் செய்தனர். முற்றிலும் சுயநலமின்றி, பெயர் புகழைக் கருதாமல் சமயோக சித்தர் மௌனத்தில் அருளிய உள்ளனு பவங்களில் நமக்குச் சந்தேகமில்லை. கடவுள் ஒருவன்; எங்கும் உள்ளவன்; ஒவ்வொருவருள்ளும் அவனே ஆன்மா! ஒவ்வொன்றின் உயிரும், உண்மையும் அவனே! உடல் கொண்டு உலாவுவோன் அவனே! ஆதலால், அனைத்துயிர்களும் எவ்வித வேறுபாடுமின்றி அவனில் ஒன்று. அவனை வேதம் 'அது' என்னும்; அன்பன் அவன் என்பான். சாக்தன் சக்தி— என்பான். சித்தாந்தம் மூன்றையும் சம்மதிக்கும். அந்த ஒன்றே, பலவானது; அதையறியாதவர்கள் சண்டை போடுகின்றனர். அந்த ஆன்மாவைப் பிரித்து உலகை நோக்கினால் பகையும் சண்டையும் கவலையும் மடமையும் வலுக்கும்; அன்னியம் எண்ணினால் அச்சமும் துயரும் ஓங்கும். 'அவனே புருஷன்; ஜீவான்மா. எனக்குள்ளேயுள்ள அந்த ஆன்மாவே சூரியனிலும் உள்ளான். உண்மையறிவாளிக்கு எல்லாம் ஒருமயம்; தானான

ஆன்மாவே அனைத்தும் '. இந்த ஆன்ம ஒருமையை எங்கும், எல்லாரிடமும் காணும் அறிவாளிக்கு அச்சமேது, மோகமேது? அந்த ஆன்மாவை அறிந்தால் அனைத்தையும் அறிந்ததாகும். ஏனெனில் அதுவே அறிவு; அதுவே அறிவின் எல்லை. உலகம் ஆன்மமயம். அந்த ஆன்மா நீ (தத்வமஸி) என்று வேதம் முறையிடுகிறது.

எங்கும் தானாய், எனக்குள் இன்பமாய், அனைவருள்ளும் அதுவாய் நின்று விளங்கும் பரமசுகப் பொருளான இந்த ஆன்மாவைக் காணவேண்டும். என் வீட்டில் நவ நிதிச் சுரங்கத்தை வைத்துக் கொண்டு பிச்சையெடுக்கலாமா?

## தத்வமஸி

"கடவுளரசு உங்களுக்குள் உள்ளது (வூந முபைனழஅ ழக புழன ளை றவைாைை லழர) நீங்கள் கடவுளர் (லுந யசந புழனள)" என்கிறார் ஏசுநாதர். "தத்வமஸி" (அது நீ, சாமி நீ) என்கிறது பாரத தருமம். நீர் இந்துவாயினும் சரி, வேறெந்த மதத்தினராயினும் சரி, மதமற்றவராயினும் சரி, கேளும்; சாதி மத சாத்திர கோத்திரங் களைப் பற்றிக் கவலையில்லை; பகுத்தறிவோடு வரலாம். வேதரிஷிகள், சங்கரர், அப்பர், வியாசர், ஏசுநாதர், சுகர், நம்மாழ்வார், நாயன்மார்கள், வள்ளலார், பரமஹம்ஸர், விவேகானந்தர், இராம தீர்த்தர், இரமண மகரிஷி, அரவிந்தர், மேஹர் பாபா போன்ற ஆன்ம ஞானிகளின் அனுபவ மொழிகள் பொய்யல்ல. வேட்ஸ்வொர்த், பிரௌனிங், கார்லைல், எமர்சன், விட்மன், பெர்க்லே, ஹெஜெல், தாந்தே, தாம்ஸன், மாக்ஸ்முல்லர் போன்ற வெண்ணாட்டறிஞர் ஆன்ம ஞானிகளாவர். ஆன்மா, மனைவி மக்கள் செல்வம் எதனினும் அருமையானது; அனைத்தினும் அது நமக்கு நெருங்கியுள்ளது; அது நாமே; நாமே அது. "ஒவ்வொருவரும் இந்த ஆன்மாவையே அருமையாக வழிபட வேண்டும்; உயிர் அதன் உடல்; ஒளி அதன் வடிவு; உண்மை அதன் குறிப்பு; அதுவே எங்குமுள்ளது; என் உள்ளத்தில் உள்ளது, அதுவே இதயக் கனல்" என்று உபநிடதம் முறையிடுகிறது. இந்த ஆன்மாவை அப்பர், 'உள்ளமே' என்றார்.

## ஒருமைப்பாடு

மனங்கள் பல, மதங்கள் பல. மனிதர் பல; அனைவருள்ளும் ஆன்மா ஒன்று. நதிகள் பல; கடல் ஒன்று. படித்துறைகள் பல; குளம் ஒன்று. மரங்கள் பல; தோட்டம் ஒன்று. கிளைகள் பல; மரம் ஒன்று. நட்சத்திரங்கள் பல; ஆகாயம் ஒன்று. இவ்வாறு சுற்றிலுமுள்ள இயற் பொருள்களை நோக்கினால், பலவாகக் காண்பது ஒன்றில் ஆதாரப் பட்டிருக்கும். கதிர்கள் பல; கதிரவன் ஒன்று. அதுபோல, உடல்கள் பல; உள்ளான்மா ஒன்று. அதுவே வீரரில் வீரம், அறிஞரில் அறிவு, காதலரில் காதல், சித்தரில் சித்தி! அதுவே வாழ்வின் ஊற்று. எல்லாருள்ளும் அதுவே இருந்து இயங்குவதால், அதுவே ஒற்றுமைக்கு அடிப்படை. மனங்குவிந்து, உள்ளத்தில் ஊன்றித் தியானித்து, யோகிகள் ஆன்மாவை அடைகின்றனர். எல்லாரும் அதை அடைய வேண்டும். மூச்சு இயல்பாயிருப்பது போல, ஆன்ம வுணர்வும் இயல்பாக வேண்டும். உள்ளே கண்டால் உலகில் அதுவே. அப்போது சாதிமத வேறுபாடின்றி ஆன்மகோடிகளை ஒரு குலமாகக் காணலாம். உள்ளும் புறமும் அதையடைந்து, உலகமே ஆன்மாலயமாகவும் மாந்தரெல்லாம் அத்யாத்ம சித்தராகவும் வாழும் வழியை சமயோகம் விளக்குகிறது.

## சமயோக சித்தி

*ஆன்மா சுத்த முக்த சமத்துவ சக்தி. எல்லா மதங்களும் சுத்த நிலையையே முடிவாகக் கொண்டன. ஆன்மாவை அடைவதற்குச் சுத்தமே வழி. மனம் மாசற்ற கண்ணாடி போலானால், அதில் ஆன்மா நிலவும். ஆன்ம சித்திக்குப் பல சாதனங்கள் உண்டு; சிலர் கடுந்தவ விரதங்களால் அடைவர்; சிலர் காணும் உலகை "அல்ல" என்று ஒதுக்கி "நானார்?" என விசாரித்து "நான் ஆன்மா" என்ற முடிவிற்கு வருவர். சிலர் அன்பால் அருட்கலப்பெய்துவர். எல்லாப் பாதைகளுக்கும் மதங்களுக்கும் அடிப்படையான கொள்கைகள் சில உண்டு; அவை மனோ வாக்குக் காய சுத்திக்காக ஏற்பட்டன. அன்பு, உறுதி, மெய்யறிவு, உட்களிப்பு, தைரியம், கற்பு, சமநோக்கு — இவை மனத்தைச் சுத்தமாக்கும். வஞ்சமற்ற மெய்யுரை, வீண்பேச்சின்மை, மௌனம் — இவை வாக்குச் சுத்தம் தரும். நல்ல உழைப்பால் பிழைத்தல், நேர்மை, அருட் பணி, உடலுறுதி, நல்லுணவு, தூயவுடை முதலியன தேகச்சுத்தமாகும். இவ்வாறு முத்தூய்மை பெற்றவர் சுத்த மணமெய்துவர். வீச்சிலும் பூச்சிலும் வேற்றுமை யிருக்கலாம். அன்பும் தூய்மையும் அனைத்திலும் ஒன்றே. சுத்த மனதால் ஆசையாணவ மாயத் தளைகளினின்று முத்தி பெறலாம். இந்த முக்தியால் "நான் ஆன்மா; எனக்கு பந்தமில்லை; ஆன்மா என்னுள் உள்ள கடவுள்" என்னும் அறிவு பிறக்கும். இவ்வறிவால், ஆன்ம சமத்வம் உண்டாகும். அதனால், 'நான் ஆன்மா; உலகில் உலாவும் உயிர்களும் ஆன்மத் தொகுதியே; நாம் நடமாடுங் கோயில்கள்' என்ற அகமான்ம சர்வான்ம ஞானம் சித்திக்கும். இதுதான் சமயோக ஒருமையாம். இதில் நிலைத்து ஜீவன் முக்தனாக, சுத்த முக்த சமத்வ சித்தனாக வாழ்வதே சமயோக சித்தி. அந்நிலையில், வெளித் தோல் விகாரங்களால் மனம் மாறுபடாது; சாதி, நிறம், மதம், நாடு முதலிய வேறுபாடுகளின்றி, 'யாதும் கோயில், யாவரும் ஆன்மா' என்ற உயர்ந்த சுத்த சமதர்சனமுண்டாகும்.*

*இந்த ஆன்ம விளக்கத்துடன் நம்முள் ஒரு சக்தி உணர்வாகும்; அதுவே சுத்த சக்தி. அல்லது ஆன்மசக்தி. அதற்கு அளவற்ற ஆற்றலுண்டு. நெப்போலியனின் பீரங்கி மதம், வாதர்லூவில் வீழ்ச்சி பெற்று, ஹெலனாவில் சிறைப் பட்டிறந்தது. ஏசுநாதரின் ஆன்ம சக்தி சிலுவையேறியும் சிரஞ்சீவியாக வாழுகிறது. சிவாஜியின் கூரிய வாளைவிட, புத்தரின் சாந்தப் புன்னகைக்குச் சக்தி அதிகம். கலிங்கப் போர் வீரனான குலோத்துங்கன் ஈட்டியைவிட, அப்பர் தேவாரத்திற்குச் சக்தி அதிகம். மூளை வலுவால் முரட்டு விலங்குகளை மனிதன் அடக்குகிறான். மூளையை விட புத்தி பலம் அதிகம்; அதைவிட ஆன்ம பலம் ஆயிரம் மடங்கு அதிகம்! இச்சமயோக சக்தி ஆண் பெண் அடங்கலுக்கும் எய்த வேண்டும். 'உலகில் ஓர் ஆண், ஒரு பெண் இந்தச் சுத்தான்ம சக்தியின்பத்தை இன்னும் பெறாவிடின் எனக்கு முக்தியில்லை, இன்பமில்லை. நான் ஆன்ம பரிபூரணம் பெறுவது முதற் கடமை; என்னைச் சுற்றி யுள்ளவர்களுக்கு அந்தப் பரிபூரணத்தை அளிப்பது இரண்டாங் கடமை' என்று ஒவ்வோருள்ளமும் உணர்க. சுத்தான்ம தரும சாதனம் அனைவருக்கும் பொது; அனைவருக்கும் உரிமை.*

### சாதனம்

*"நான் சுத்தான்மா; இவ்வுடல் சுத்தான்மக் கோயில்" எனக்கருது! இந்த ஆன்மாலயத்தில் மாயம், மடமை, சினவெறி, மோகப்பேய், சுயநலம் — இவை புகாமல் கவனமாயிரு! உள்ளே ஆன்மராஜன் உள்ளான். எந்த நினைப்பு உள்ளே புகுந்தாலும், 'நீ யார்? நண்பனா, பகைவனா?' என்று கேள்; தீய எண்ணமானால், திருப்பி விரட்டு! நல்லதானால் உள்ளே வரட்டும். கண்ணுக்கு இமை காவல்; தனக்கு அறிவே காவல். அதிகாலை எழுந்து தேக சுத்தி செய்து*

கொண்டு, குளித்துத் துவைத்து உடுத்தி, பரிசுத்தமாக எக்கவலையுமின்றி, ஒரு தூய தனியறையில், அல்லது இயற்கையழகின் முன், பத்மாசனத்தில் உட்காரு; தலை, கழுத்து, மார்பு நேராயிருக்கட்டும். உலகம் முழுவதையும் ஒரு கோயிலாகப் பாவித்துக் கொள்; சூரியன் அக்கோயில் விளக்கென்று நினை; உன் உள்ளம் அக்கோயிற் சந்நிதி யென்று கருது; அந்தச் சந்நிதியில் ஒளிவடிவாக ஒரு சக்தி கனலுவதாக தியானி! அது மன விகாரம், இனவிகாரம் அற்ற பரிசுத்தமான பொருள்; "அதுவே நான்; அதுவே எனது இஷ்ட தேவதை; அது சுத்தம்; அதன் வடிவு சக்திக் கனல்" என்று தியானி. "பந்த தொந்தங்கள் எனக்கில்லை; நான் சுத்தன், முக்தன், ஆன்ம சமத்துவன்" என்று சிந்தி; எண்ணங்கள் அலை வீசும்; பேய்க்குரங்கு போல மனம் துள்ளும்; உறுதியாயிரு; உள்ளத்தையே பார்! அதைரியப்படாதே! நாளடைவில் மனம் நிலைக்கும்; புயல் அடங்கும்; ஓர் அமைதி பிறக்கும்; அறிவு கனலும். வருஷக் கணக்காக யோகிகள் தவஞ் செய்து சுத்தான்ம சித்தி பெறுகின்றனர். 'இன்னும் எனக்கு வரவில்லையே' என்று அதைரியப் படாதே! தினம் இவ்வாறு காலை அரைமணி நேரம், அந்தியில் அதேமாதிரி பரிசுத்தமாக அரைமணி நேரம் தியானி! தூய அன்பர் பலர் கூடி இவ்வாறு தியானிக்கலாம். இல்லறத்தார் தங்கள் மனைவி மக்களுடன் தியானித்தல் நல்லது. மனைவி கணவனை சிவாம்சமாகக் காணுக; கணவன் மனைவியை சக்தியாகக் காணுக; குழந்தைகளை முருகன் கண்ணன் வள்ளித் திருமகளாகக் காணுக! நாளடைவில் மனவிகாரங்களும் விகற்பங்களும் ஒழிந்து, தூய சிந்தனையும் ஆன்ம வுறவும் ஆன்மக் கலப்பும் உண்டாகும்.

## தியான மந்திரம்

மதோபதேசங்களைவிட இந்தத்தியானம் ஆயிரம் மடங்கு மேல். இந்த ஒருமணி நேரம் உளங்குவிந்திருந்து, மீதி நேரத்தில் உனக்குரிய தொழிலைக் கவனிக்கலாம். நாளடைவில் எத்தொழிலைச் செய்தாலும், எங்கிருந்தாலும், உனது சித்தம் ஆன்மாவிலேயே நிலைகொண்டு அதையே பற்றி நிற்கும். பிறகு, உலகின் முக்குணப் போராட்டங்கள் உன்னைப் பற்றா; உன்னுள்ளமே திருவாசகமாகும்; வேறு உபதேசங்களுக்குத் தேவையிராது. இவ்வாறு ஒவ்வோர் ஊரிலும் அன்பர் கூடி ஒரு மணி நேரம் சுத்தான்மத் தியானம் செய்ய வேண்டும். ஒரு பெரிய தோட்டத்தில் தியான மந்திரம் அமைக்க வேண்டும். சாதி மத வேறுபாடின்றி யாரும் அங்கு வந்து குளித்து உடுத்தி கூடித் தியானம் செய்யலாம். தியான மந்திரத்தில் பளிச்சென்று ஓமொளிக் கண்ணாடி விளங்க வேண்டும். அதைச் சுற்றி சாந்த சுத்த சச்சிதானந்த விஞ்ஞான மன வீரிய தூல மண்டலங்கள் வட்டமிட வேண்டும். ஜோதி மேலிருந்து கண்ணாடியில் பளிச்சிட வேண்டும். அதையே தியானித்து வந்தால் ஆன்ம ஒளி பிறக்கும். சப்தஸ்வர ஓங்காரமே ஜபமாக வேண்டும். இதில் எல்லாரும் கலந்து தியானிக்கலாம். ஆன்மக் கோயிலின் விரிவே உலகாலயமென ஒவ்வொருவரும் கருத வேண்டும். இந்தச் சாதனம் இயல்பானால் மற்றப் பேரின்பச் செல்வங்களெல்லாம் தாமே வந்தெய்தும். இந்தச் சமயோக நிறைவிற்கே சமயோக சாதனம் வழி காட்டுகிறது. அன்பர் ஒவ்வொரு வரியையும் அமைதியாகச் சிந்தித்தறிக! பழுக்கப் பழுக்கப் பழுது நீங்கும்; உள்ளும் புறமும் இன்பமயமாம் ! இதுதான் சமயோக சமாஜத்தின் சாதனம். சமயோக வேதத்தை இனி ஓதுவோம்.

## 9. சமயோக சாதன மாலை

ஆன்மா யானென் றறிவா யின்பத்
தேனா றாகச் செழித்திடும் வாழ்வே!
அன்புமணியே, ஆர்வக் குயிலே
இன்பப் பொன்விதை யிருக்குதுன் னுள்ளே;

*இதயச் சுரங்கப் புதையலுன் செல்வம்*
*சிதைவற முயன்று புதைபொருள் காணாய்;*
*பொருளைப் புதைத்தது பொய்ம்மன வழுக்கு!*
*அருளைத் தூண்டி யதனை யுருக்காய்!*
*அன்புறக் கடைந்தால் அருளனல் பிறக்கும்.*
*துன்பக் காட்டைத் தூருட னெரிக்கும்.*
*இதுவது வெனநீ யேங்கித் திரியேல்.*
*பொதுப்பொரு ளொன்றே, பொருந்துக வுள்ளே!*

## ஆன்ம உபாசனை

*பாரெலாங் கோயில்; பலபெயர் வடிவாம்*
*ஆருயி ரெல்லாம் ஆண்டவன் மேனி.*
*உடலெலா மிறைவன் நடமிடுங் கோயில்*
*கடமெலாஞ் சித்தா காச நிறைவு.*
*உள்ளதொன் றென்னும் உறுதிபூண் டிருப்பாய்.*
*ஒள்ளிய ஆன்ம வொருமை யுதிக்கும்.*
*சிவனோ சக்தியோ திருவளர் முருகனோ*
*நாராயணனோ நடராஜ பதியோ*

*அவனவ னதுவென் றறிஞர் கண்ட*
*பொருளெலா மொன்றே; அருளினால் விளங்கும்.*
*இருளெலா மனத்தின் இருவிகற் பாட்டம்.*
*உருவைப் பணியினுங் குருவைப் பணியினும்*
*அருவையுள் ளுணர்கினும் ஆம்பயன் ஒன்றே.*
*கன்மன முருகிற் பொன்மன மாகும்;*
*பொன்மன மாயிற் பொன்னுட லாகும்;*
*புருவ மத்தியிற் பொலிபூஞ் சுடரை*
*முருக னென்றனர் முத்தமிழ்ப் புலவர்*
*குண்டலிக் கனலே குமுறும் வடிவேல்.*

*மண்டிரு ளாணவ மாயமே யரக்கன்.*
*இதயக் குகைக்குள் இலங்குவான் குகனே*
*உதயக் கதிர்போல் ஒளிர்வா னாங்கே.*

## அழிவறு மான்மா

*அழிவது நிலைப்பது யாதென் றாராய்*
*அழிவை விலக்கித் தெளிவைப் பற்றிநில்!*
*இறப்பதும் பிறப்பதும் இவ்வுடல் வினையே.*
*இறப்பதும் பிறப்பதும் இருவினைத் தீர்வை.*
*இருவினை விலகிற் கருவினை விலகும்*
*திருவினை முயலத் தீவினை தீரும்.*
*இவ்வுட லெதனால் இயங்குவதாமோ,*

*அவ்வரும் பொருளே ஆன்மா வென்பர்*
*யாக்கைச் சட்டை யணிந்தவ் வொன்றே*
*பார்க்கப் பலவாய்ப் பாரினி லியங்கும்*
*பெயர்வடி வத்தோல் பிரித்துளங் காணின்*
*துயர்வினை யற்ற சுகக்கனி யொன்றாம்!*
*உண்ணுக வதனை; உயிருள மினிக்கும்;*
*உண்ண வுண்ணப் பொன்னா முடலும்.*

*அழிவழி யாமை யறிவறி யாமை*
*பழிபழி யின்மை பயன்பய னின்மை*
*யாதென வுள்ளே யாராய்ந் தறிவாய்;*

*சோதனை செய்தே தூயன கொள்வாய்;*
*ஆக்கை சட்டையுள் அழிவறு மான்மா*
*தாக்கற நிற்குஞ் சாட்சியென் றறிவாய்;*
*மாறுமிவ் வுலகம்; மாறுமிவ் வுடலம்;*
*மாறான் பேரான் மாயான் ஆன்மா;*
*வாளுந் தீயும் வலியுறத் தாக்கினும்,*
*மாளா திந்த மன்னுயி ரான்மா !*

## ஆன்ம சுதந்தரம்

*அதுதான் அமுதம் ! அழிவெனக் கில்லை;*
*சுதந்தரன், இருவினைத் தொடர்பெனக் கில்லை.*
*ஆசை மோகம் அச்ச மெனக்கில்லை;*
*பாச பந்தப் படரெனக் கில்லை.*
*வென்றால் மகிழேன்; வீழ்ந்தால் வருந்தேன்.*
*என்று மிருந்தவா றின்று மிருக்கிறேன்;*
*சாதி சமயச் சழக்கெனக் கில்லை.*
*போதினி லிதழ்கள் பொருந்திய தொப்ப*
*உலகுயி ரெல்லாம் ஒருவனா மிறைவன்*
*பொலியரு ளுடலிற் பொருந்திய தொகுப்பே!*
*'அவன் மனப்படியே யாடுமிவ் வாழ்க்கை;*
*அவனிச் சைக்கிஃ தாகுக வேள்வி'*
*என்று திடமா யிருந்திடு வானைக்*

*கொன்றுயி ருண்ணும் கூற்றும் நடுங்கும்!*
*கூற்றை யுதைத்த கொற்றச் சேவடி*
*போற்றியுன் னுள்ளம் புரிநடங் காணாய்;*
*அதனைப் பற்றி யாங்கே யமர்வாய்,*
*அதுவே யுன்றன் அமைதி நிலையாம்.*

## மனமடக்கு

*துள்ளித் துள்ளி துடிக்கு மனத்தை*
*மெள்ளப் பிடித்துன் னுள்ளத் தடைப்பாய்.*
*பெண்ணிலும் பொருளிலும் பேய்போ லலையும்*
*கண்ணைச் சிமிட்டிக் கறங்கெனத் திரியும்*
*வம்புகள் விலைக்கு வாரி வாரிவீண்*
*கும்பலாய்க் குவிக்குங் கொடுமனக் குரங்கு;*
*எந்தை யடியி லிணைத்திம் மனத்தைச்*
*சிந்தனை யற்றுச் செய்வன செய்வாய்.*
*அமர்ந்த சித்தமும், அடங்கிய வுள்ளமும்,*
*தமரஜ சத்துவத் தளையறு சமமும்,*
*ஆறுகள் பாய்ந்தும் அலைகடல் போலே*
*அகண்ட மான அமைதி நிலையும்*
*குறைவறு நிறைவுங் குன்றென வுறுதியும்,*
*சிறையறு வாழ்வுந் திருவருட் கலப்பும்,*
*நீரிற் படகெனப் பாரினி லிருந்தும்,*

*பார்தனக் குள்ளே பற்றாத் துறவும்,*
*காற்றுங் கடலுங் கதிருங் கனலும்*
*வேற்றுமை யின்றி வேலைசெய் வனபோல்,*
*இருவிகற் பின்றி யியன்றதைப் புரிந்து,*
*வருபயன் கருதாக் கருமமே வேள்வியாம்.*
*உலகின் இசைவசைக் குட்படா தருந்தேன்*
*மலரில் வண்டென வாழுத லறமே!*
*அறிஞரை யெளிதில் அறியா துலகம்.*
*அறிஞரும் உலகின் அறிமுகம் வேண்டார்.*
*உன்னுள் அடங்கி யுன்னைநீ திருத்தாய்.*

*தன்னை யறிந்தாற் பின்னிட ரில்லை.*
*தானே தனக்குத் தகையும் பகையும்;*
*தானே தனக்குத் தகுநல மெல்லாம்*
*உனக்கு நீதா னுண்மையா யிருந்தால்*
*மனக்கி லேசம் மாய்வழி யதுவே.*

## வாழ்வு நெறி

*அருந்தல் பொருந்தல் அனந்தல் அளவுடன்*
*திருந்த மேற்கொள்! மருந்தது வாகும்;*
*பசித்தீக் கினிய பாத்தூண் விரும்பு*
*நசைவாய்ப் பட்ட நச்சுத் தீனி*
*நோய்தரும்; மேனி நுடங்கா திருக்கத்*
*தூய நினைப்பும், தொண்டொடு தொண்டர்*
*நேயமும், நல்ல நிறைமுறை வாழ்வும்,*
*ஏயதோர் பயிற்சியும் இசைந்தவா றியற்றாய்.*
*கண்மயக் காலே கருத்து மயங்கிப்*
*பெண்ணாண் பேதம் பிறந்தது காணாய்.*
*ஆணைச் சிவமாய் அரிவையைச் சிவையாய்*
*மாணுறக் கருதாய்; மாசறு மெண்ணம்.*
*இணைபிரி யாமல் இறைவ னருளாம்*
*உணர்வொடு வாழலே யோகம தாகும்;*
*உள்ளுணர் வாலே யோகக் கனல்வளர்.*

*வெள்ளமா யின்பம் விரிந்துனைச் சூழும்*
*தனித்திரு; விழித்திரு; தான்றன தற்றிரு;*
*மனத்தின் மாய மயக்குக ளொழியும்!*
*அற்றம் பாரா தகத்தினைப் பாரு*
*சுற்றம் பாராச் சுழிமுனை பாரு;*
*புருவ நடுவே பொருந்தப் பாரு;*
*பொறிவாய்ப் படாதுன் னறிவா யிருந்திடு;*
*நிறைபெறுந் தூய நித்தியா னந்தம் !*
*கால தேசக் கட்டுகள் பற்றா.*

*ஆலய முலகாம், ஆடலே வாழ்வாம்;*
*இறைவனுக் கீந்த நிறையன் புயிரை*
*இறைவ னருளே யின்புற நடத்தும் !*
*மூீந்துளக் காதலால் இரண்டறக் கலந்து,*
*வாய்ந்தரு ளின்பம் வாழிய வெல்லாம் !*

## 1. அனுபவம்

*ஏட்டுச் சோறு வாட்டந் தணிக்குமோ !*
*வாட்டந் தணிப்பது வாரியுண் ணமுதம்.*
*படத்தி லெழுதிய பலாக்கனி யினிக்குமோ?*
*நடத்தை யின்றிப் படித்தது பயனா?*
*காசி யென்றாற் கங்கை பொங்குமோ?*
*பேசிப் பேசிப் பெரும்பசி தீருமோ?*
*உரையை விழுங்கி யுலம்பறு மனத்தில்*
*கரையறு மோனக் கடலிலம் மனமே.*
*ஆழ்த்திடி னாங்கே யகப்படு முத்து;*
*காழ்த்திடு மாசையே வீழ்த்திடு முன்னை.*
*ஓடாப் புலனுந் தேடா மகிழ்வும்*
*ஆடா விளக்குபோல் அமர்ந்தெரி யறிவும்*
*கோடா வுறுதியும் வீடா வுறவும்*
*நாடா யுன்னுட் கூடா யுன்னை !*

### பலவாம் உலகு

*சுற்றுல கத்தைச் சுற்றிலுங் காணாய்*
*சற்றுநீ தனியே சார்ந்து நினைப்பாய்;*
*பலபல தேசம் பலபல மக்கள்,*
*பலபல சாதி பலபல சமயம்,*
*பலபல வாதம் பலபல போக்கு,*
*பலபல தெய்வம் பலபல கோத்திரம்,*
*பலபல நடையுடை பலவகை யுலகம் !*
*எதனைச் சார்வாய்? எவ்வழிச் செல்வாய்?*
*மத்தலை தயிரென மயங்குதுன் மனமே !*
*அன்றின் றென்னா தாங்கீங் கென்னா*
*தென்று மிருந்தவா றிலகுவ துண்மை.*
*உலகைப் பார்த்தாற் கலகம் பெருகும்;*
*உலகைப் பாரேல், உன்னையே பாராய் !*

### இரண்டறக் கலத்தல்

*பாருயிர் பண்புறப் பரமனைக் கூடி*
*இரண்டறக் கலந்தால் இன்பமொன் றேயாம்;*
*காதலன் வேறு; காதலி வேறு;*
*காதலிற் கலக்குங் களிப்பொன் றேயாம்;*
*திரிநெய் வேறாந் தீபந் தனிலே;*
*எரிசுட ரெழுந்தால், இன்னொளி யொன்றாம்;*
*ஆழி வேறாம், ஆறும் வேறாம்;*
*ஆழியிற் கலக்கின் அலைகட லொன்றாம்.*

*ஒன்று பட் டாலே யுவப்புணர் வாகும்;*
*ஒன்றிரண் டென்னும் உரையாங் கில்லை.*
*புதுமலர் சுற்றிப் பொம்மெனும் வண்டு*
*மதுவுணும் போது மௌனம் வகிக்கும்.*
*ஊடலால் அலையும், கூடலால் அடங்கும்,*
*ஆடலில் ஆடும் அடங்கா மனமே.*

## மனோ ஜயம்

*நிறத்தைப் பார்த்துப் புறத்தைப் பார்த்துப்*
*பரத்தை மனது பகடை யாடும்;*
*அதனை யுள்ளே மெதுவா யிழுத்தால்*
*மதனை யெரிக்கு நுதல்விழி திறக்கும்.*

*மனவெறி யெரிப்பதே மன்மத தகனம்;*
*சினவெறி நாசமே திரிபுரச் சிரிப்பு;*
*முன்னிலை யின்றித் தன்னிலை யிருப்பே*
*பன்னிலை யுலகப் படரொழி வழியாம்.*
*படித்த படிப்பெலாம் பாழுக் கானது;*
*படித்ததை யில்லை, பார்த்ததைப் பகர்வேன் !*

## உள்ளம்

*கண கண வென்றோர் காந்த சக்தி*
*தணலுமென் னுள்ளே தகதக வென்றே.*
*உள்ளக் குகையாம் ஓமகுண் டத்தில்*
*வெள்ளைச் சுடரொளி வீறுற் றேறும்;*

*அதனை வளர்ப்பதே யருந்தவ வேள்வி;*
*அதன்வெளி காண்பதே யம்பலக் காட்சி.*
*கருத்தி லொளிருங் கதிரவ னெழுந்தால்*
*கறுத்த மாயக் கங்குலெங் கிருக்கும்?*
*உள்ள முன்னைத் துள்ளி யழைக்கும்;*
*விள்ள று மின்ப விண்ணக மதுவே !*
*ஆழி யுள்ளத் தரிதுயில் கின்றான்;*
*ஆழி யுள்ளமே யமுதப் பொற்கலம்;*
*தன்னிலை திரியாத் தடங்கடல் போலே*
*உன்னிலை யூன்றாய்; உலகத் தரங்கம்*

*ஏறும் வீழும் எழும்பும் உறங்கும்;*
*மாறா தாழ்ந்த வாய்மையா யிருப்பாய்.*
*மேகப் படலம் விசைவிசை மாறும்;*
*ஆகாயத்திற் கழிவது முண்டோ?*
*வானமு நீல வண்ணமும் போல*
*ஞானத் துடனே ஞானியும் மொன்றாம்.*
*ஓடை வேறா, ஓட்டம் வேறா?*
*ஆடையிற் பாவும் ஊடும் வேறா?*
*உறுதியும் அன்பும் உண்மை யார்வமும்*
*செறிவழி பாட்டாற் சித்துள் ளுணர்வாம்*

## தத்துவம்

*அருட்சுவை நூலுட் பொருட்சுவை யொன்றே !*
*சுறுட்பெறு வாதம் இருட்புற மாயம்,*
*வித்தை வேண்டுவோர் புத்தகம் பயில்க,*
*சத்தை வேண்டுவோர் தன்னுளா ராய்க !*
*இன்பம் வேண்டின் இதயம் பற்று,*
*வம்பு வேண்டின் வாதிக ளிடஞ்செல் !*
*நன்மை தீமை மென்மை வன்மை*

*அண்மை சேய்மை அறமற மென்றே*
*எதிரெதிர் நிற்கும் இருவிகற் பூடே*
*மதிபெறு ஜீவ வளநதி பாயும்;*

*கரையின் அணையின் கட்டுக ளின்றி*
*விரைந்து கலந்து விரிகட லாவதே*
*உயிராற் றிற்கிங் குறுநல மாமே;*
*பயிர்களை வளர்த்தும் பாய்வது கடலில்.*
*[1]ஐந்தாம் பூதம் [2]ஐந்தாம் மாத்திரை,*
*[3]ஐந்தாம் வினைப்பொறி; [4]ஐந்தாம் உணர்பொறி;*
*[5]புத்தி மனமொடு சித்தம் அகந்தை*
*இத்தகைத் தத்துவம் இருபத்து நான்காம்.*
*இருபத் தைந்தா யியம்புவர் ஜீவனை;*
*இருபத் தாறாம் இலகுசுத் தான்மா.*
*[6]உடலுயிர் மனமறி வுயரின் பைந்து*
*திடமதில் சூழத் திகழுமே யான்மா !*
*ஜோதி மண்டலத்தே சுயானு பூதியாம்*
*[7]தூலம் காரணம் சூக்கும மென்றே*
*மேலு மவற்றை விளக்குவர் மேலோர்.*
*[8]சித்தாந்தர்முப் பத்தா றென்பர்;*
*அதனையும் யாதென் றறிவாய் மகனே;*

*[9]பூதம் மாத்திரை பொறிபுலன் கரணம்*
*ஆதி யியற்கை அறுநான் கென்பர்.*
*[10]கஞ்சுகை ஐந்து; காலமும் கலையும்*
*எஞ்சறு வித்தை யிராகம் நியதியாம்.*
*நானிது வென்பர்; [11] நாதம்விந் தென்பர்,*
*ஞானிக ளுக்கெலாம் மோன முடிவே.*
*சாற்று மீச்வர தத்துவம் விந்தாம்*
*சாற்றும் சாதாக்கிய தத்துவம் நாதமாம்,*

---

1. ஐம்பூதங்கள்: வான், காற்று, தீ, நீர், மண்
2. தன்மாத்திரைகள்: ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம்
3. வினைப் பொறி: (கர்மேந்திரியம்) வாய், கை, கால், குதம், குறி
4. உணர் பொறி: (ஞானேந்திரியம்) உடல், நாக்கு, மூக்கு, காது, கண்
5. புத்தி, மனம், சித்தம், அகங்காரம் இந்நான்கும் அந்தக் கரணங்கள் (உட்கரணங்கள்)
6. இவ்விரண்டு வரிகளும் பஞ்சகோசத்தைப் பற்றி யுரைப்பன. உடல்: அன்னமய கோசம், தூலதேகம். உயிர்: பிராணமய கோசம், வீரிய தேகம். மனம்: மனோமய கோசம், சிந்தனை யுலகம். அறிவு: விஞ்ஞானமய கோசம், அருளறிவு. இன்பம்: ஆனந்தமய கோசம், அருளின்ப நிலையம். இவ் வைந்து கோசங்களைக் கடந்து ஆன்மா சத்து ___ சித்தாய் (உண்மையறிவாய்) உள்ளது. அதற்கு மேல் சுத்த சாந்த ஜோதி மண்டலங்கள் உள்ளன.
7. அன்னம், பிராணன் இரண்டும் **தூல சரீரம்**, பருவுடல், விஞ்ஞானம் ஆனந்தம் **காரண சரீரம்** (அறிவுடல்); மனம் **சூஷ்ம சரீரம்** (நுண்ணுடல்)
8. முப்பத்தாறு தத்துவங்கள்
9. இயற்கைத் தத்துவம் ஐம்பூதம் 5, ஐம்புலன் 5, உணர்பொறி 5, வினைப் பொறி 5, உட்கரணம் 4 ....... ஆக 24.
10. அசுத்த மாயை: காலம், கலை, நியதி, வித்தை, அராகம் (இவை கஞ்சுகை), மாயை, புருடன் ஆக 7.
11. சுத்த மாயை: நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுரம், சுத்த வித்தை. இவற்றின் முழு விளக்கமும் யோகசித்தியிற் காண்க.

*உன்மினி சமனி யுயர்சக்தி தத்துவம்.*
*பன்னற வுயர்ந்தது பரசம் வித்தாம்,*
*நிகழ்த்து மதுவே நிர்க்குண பிரஹ்மம்*
*சுகக்கனி யதனைச் சுடருறக் கலத்தலாம் !*
*அப்பனே, யிச்சொல் லடுக்குக ளெல்லாம்*

*செப்பி விளங்கா சென்மநூ றெடுத்தும்.*
*இந்தப் பேச்சை யிகந்த பிறகே*
*சொந்த மான சுகப்பொருள் காண்பாய்;*
*தத்துவப் பேயுடன் சண்டைபோட் டலையேல்;*
*வைத்தவா றுள்ளே வாய்மையில் வாழுதி !*

## ஆன்ம ராஜன்

*மன்னனைக் காண மகிழ்ந்து செல்லுவோன்*
*சன்ன லித்தனை, சவுக்க மித்தனை,*
*அரண்மனை சார்ந்த புரங்க ளித்தனை*
*திரள்பெறு சேவகர் செலவுக ளித்தனை*
*என்று கணக்கிட் டிழுப்பனோ காலம்?*
*அரசன் உள்ளத் தரியணை கொண்டான்;*
*முரசொலி ஓமென முழங்கு கின்றதே.*
*இனியன் இன்பன் இறைவன் அரசன்,*
*இறைவன் இருக்கும் இருக்கை யறிந்தே*
*இதயத் தவனைக் கதுமெனக் கூடு !*
*விதவித நூல்களும், வதவதப் பேச்சும்,*
*விதவிதக் கேள்வியும் வீண்பொழுதாகும்.*
*வெதுவெதுப் பான விண்ணமு துண்ணாய் !*
*சாவை வென்றிச் சடலம் நிலைக்க*
*மேவுரை பலப்பல விளம்புவர் சிலபேர்.*
*உடலுயி ரெல்லாம் உடையா னிடமே*
*திடமுடன் விடுப்பாய்; திருவரு ளிச்சை*
*அடியனை நடத்துகென் றிடையறா தியம்பு;*
*குடிபுகுந் தென்னுட் கூத்தா டுவனே*
*'பொன்னாக் கினுஞ்சரி, மண்ணாக் கினுஞ்சரி,*
*நின்னா ணைவழி நிற்பதென் னுறுதி !*
*நினக்கா ளாகி நின்னையே நம்பினேன்;*
*எனக்கென வுடலுயிர் எதுவுமிங் கில்லை;*
*எல்லாம் வல்லோய், என்னா லென்னே?*
*எல்லாந் திருவருள் இச்சை நடத்துக! '*
*என்றிருப் பதுவே நன்றிருப்பது; தனை*
*வென்றிருப் பதுவே என்று மிருப்பதாம்.*

## அமுத நாடி

*உள்ள முதலாய், உச்சிமட் டமுத*
*ஒள்ளிய நாடி ஓடுவ தறிவாய்*
*அதனொளி, யுள்ளம் அன்புக் கனலாம்.*
*அதனொளி நெற்றியில் அழகுச் சுடராம்.*
*உள்ளத் தின்பமாம்; உச்சியில் அறிவாம்;*
*தெள்ளத் தெரியுந் திருவரு ளுணர்வால்;*
*வாரியி லெழுந்த வடவைக் கனல்போல்,*

*நீரி னிடையே நெருப்பங் கென்பர்.*
*எற்குணர் வானது சிற்கன லறிவு;*
*சிற்கன லாலோர் சிற்சுகம் பிறக்க,*
*அதனுட னதுவாய் ஆங்கனே யுள்ளேன்;*
*தத்துவ வாதம் சங்கட மெனக்கு.*
*மௌனமே யென்றன் மாவுப தேசம்;*
*மௌன மென்பது மனமடைப் பதுவே.*
*நின்றா லுள்ளே நித்திய சுகமாம்*
*சென்றால் வெளியே செகவிவ காரம்.*
*ஒன்றே யுண்மை யுரைத்தே னிதனை,*
*நன்றாய்த் தெளிந்து நடத்தலுன் கடனே !*

## 2. அவனே ஆன்மா

*பேசுவ தெல்லாம் பெயருருப் பான்மை;*
*காசு பெறாதிக் கசுமல வாதம்.*
*அப்பனே கேளாய், ஒப்பிலாப் பரமன்*
*இப்பா ருயிர்களின் இதயத் துள்ளான்;*
*அவனே யான்மா; அவனே ஜீவன்;*
*அவனே இயற்கையால் ஆற்றுவா னெல்லாம்*
*கதிரு மவனே; கதிரவ னவனே;*
*கதிரொளி வளர்க்குங் கண்ணில மவனே !*
*அவனை யன்றி யணுவுமின் றென்னில்,*
*அவனைத் தப்பி ஆருயி ரெங்கே?*
*அவன்மய மாகும் ஆன்மா நீயே !*
*ஆன்மத் தெளிவாம் அவனைத் தெளிவாய்.*
*தான்வே றாகாத் தன்மையோ னிறைவன்*
*ஆன்மா வுடனே அறிவாய்க் கலந்தான்.*

## ஆன்மத் தெளிவு

*தங்கச் சுரங்கம் நுங்கி யெடுப்பது*
*பங்க மில்லாத் தங்கக் கட்டியோ?*
*எத்தனைக் களிம்புட னீயமுஞ் செம்பும்*
*மொத்தமாய்ச் சேர்ந்த வத்துவா மதுவே !*
*எடுக்க வதனை எத்தனை முயற்சி,*
*வடிக்க வதனை வகைவகை யந்திரம் !*
*ஆலைக ளெத்தனை; வாலைக ளெத்தனை!*
*வேலைக ளெத்தனை; விரிப்பிற் பெருகும் !*
*மனவுயிர் வாழ்வு மாசுறு கட்டி !*
*இனிததை மாசறுத் திலகுபொன் னாக்க,*
*அன்பா லுருக்கி, யருண்மெரு கேற்றித்*
*தன்பாற் காணும் பொன்பா ரப்பா;*
*மாசுறு பொன்னே மாயைசூ ழான்மா;*
*மாசறு பொன்னே தேசுறு மான்மா;*
*மக்குத் தங்கம் மாசுறு ஜீவன்;*
*சொக்கத் தங்கம் சோதிசுத் தான்மா.*
*படித்ததை யில்லை, பார்த்ததைப் பகர்வேன்;*
*தடித்தமா சற்ற தானே யிறைவன்;*
*இம்மி யதனிற் கம்மியொன் றில்லை,*

*வம்மினுள் ளாழ்ந்து வாய்மை காணுமின் !*

## இருப்பிடம்

*இருப்பிட மதனை யியம்பிடக் கேளாய்:*
*ஒருப்படு முள்ளம் இருப்பிட முனக்காம்*
*உன்னையின் னொருவன் உரக்கப் பேசினால்,*
*"என்னையா பேசினாய்? என்னையா பழித்தாய்?*
*யானுனை என்னசெய் வேனெனப் பாராய் !*
*யானார் தெரியுமா? யான் சிவன்" என்றே*
*எங்குநீ கையை இயல்பாய் வைப்பாய்*
*அங்குநீ யான்மா; தங்கிட மறிவாய்.*
*எங்கே யகந்தை யானெனக் கிளம்பும்,*
*அங்கே யறிவால் அகந்தலை குனியும்;*
*நானெனக் கிளம்பும் நசுவல் மனத்தை,*
*ஏனெனக் கேட்டு மோனத் தடியால்*
*'நீயா ரெங்கென் னிலையத் துற்றாய்?*
*நேயன் போலே நின்றெனைக் கெடுத்தாய்;*
*எண்ணத் திரையே யெழும்பா தேநீ,*
*திண்ணமா யுன்னைத் தீட்டுவேன் பாராய்'*
*என்றதைப் போட்டால் ஒன்றுஞ் சொல்லா*
*தன்றே யடங்கி யகந்தை யழியுமே !*

### தான், நான்

*இரண்டு சக்திக ளிருப்பன வுள்ளே:*
*முரண்டு செய்யு மூட மனத்தால்*
*புரண்டலை நானெனும் பொய்யகச் சக்தி*
*வறண்டதுந் தானெனும் வாய்மை விளங்கும்.*
*நானென் பதெலா நலிமன வகந்தை;*
*தானென் றெழுவதே தவசிவ சக்தி;*
*நானெனக் கிளம்பத் தானது மறையும்;*
*நானது பணியத் தானது விளங்குமே.*

### முப்பாழ்

*ஐந்து கோசமும் யானெனுங் கோட்டைகள்;*
*ஐந்து கோசத் தப்பா லுள்ளதே*
*மன்றுள் வெளியாம்; மனமறு பாழாம்;*
*நன்றா யிதனை நின்றுள் ளுணர்வாய்*
*முப்பா ழென்னு மொழிசித் தாந்தம்*
*மூமுப்புடி யென்னு மொழிவே தாந்தம்;*
*உலகுயிர் இறையெனப் பலவித மாகக்*
*கலகுறு மனத்தை யிலையென நசித்தலே*
*முப்பாழ் கடந்து முப்புடி யற்றே*
*யெப்போ துந்தா னிருந்தவா றிருத்தலாம்.*

### 3. தன்னிலை

*சினமக மாணவச் சிக்குக ளொழிந்தால்*
*மனமறும்; ஆங்கே மன்றுள் வெளியாம்.*

*பலவாய்த் தோன்றும் பாரிறை யுயிரே.*
*அகந்தை மனத்தின் ஆணிவே ரகன்றால்*
*உகந்தது வாகும்; உன்னைநீ காண்பாய்;*
*உன்னைக் கண்டால் உலகுயிர் வேறிலை;*
*தன்னை விடாத தனிநிலை யின்பம் !*
*தன்னை மறத்தலே சாதலென் றறிவாய்;*
*தன்னை நினைத்தலே சத்திய நிலையாம்.*
*உன்னைநீ யறிந்தே உண்மைநீ யாகித்*
*தன்னிலை தானாய் தனித்திருந் தாலே*
*பின்னுனக் கென்ன? பேசுமோ மனது?*
*தின்னுமோ மாயை, நண்ணுமோ விகற்பம்?*

(* *முப்புடி — திரிபுடி; முப்புரி; மாயை — ஆணவம், மாயை, காமியம்)*

## மந்திரம்

*மந்திர மென்பது வாயுரை யன்று;*
*தந்திர மன்று; சாற்றுவேன் கேளாய்ః*
*மனதுளத் தடங்கி மாசறு நிலையில்,*
*எனதியா னென்னா திருக்குமந் நிலையில்,*
*மண்டையி லுள்ள மடல்விரி மலரில்*
*வண்டு போலும், மகரயாழ் போலும்*
*மாணவும் ஓமென வழங்கிடு நாதம் !*
*அந்த நாதமே மந்திர மாகும்;*
*அந்த மந்திரம் அந்தரங் கத்தே*
*எந்தவா றொலிக்கும், அந்தவா றறிஞர்*
*மந்திரக் கலையை வகுத்தன ரென்ப.*
*சாமி யொன்றே; சக்திகள் பலவாம்.*
*நாமமா யிரங்கள் நாட்டிப் பணிகுவார்;*
*அழகன் இன்பன் அறிவன் முருகன்*
*குழகன் உலகெலாங் கும்பிடும் பெருமான்*
*கண்ணன் அரங்கன் கனக சபேசன் .......*
*எண்ணிலா திவ்வா றியம்புவர் பெயர்கள்;*
*கலைமகள் இலக்குமி காளி பவானி*
*நிலமகள் என்று பலதிறஞ் சொல்வார்.*
*எதனை நினைக்கினும் இறைவனை நினைத்தலாம்.*
*எதனைப் பணியினும் இறைவனைப் பணிதலாம்.*
*கதிரவ னொன்றே....... கதிர்கள் கோடி;*
*கதிரைக் கண்டாற் கதிரொளி புலனாம்.*
*மனதும் பலபல, மாந்தர் பலபல.*
*எனதே கொள்கையென் றியம்புதல் மடமை.*
*இருப்ப தொன்றே ....... விருப்பது பலவாம்*
*இருமனப் பான்மை எண்ணில தாமே.*
*எவ்வகை மனத்திற் கொவ்விய வடிவோ*
*அவ்வகை யவரவர் அமைத்து வணங்குவர்.*
*வணக்கம் பலவாம், மந்திரம் பலவாம்;*
*குணக்க மின்றிக் குறிப்புடன் ஓதின்*
*வரும்பயன் பெரிதாம்; மனதுட் குவியும்;*
*அரும்பய னாகும்; ஆதலாற் கேளாய்;*
*வேதச் சுருக்கம், விளம்புகா யத்திரி;*
*ஓதிடின் எல்லாம் ஓமில் அடங்கும்.*
*ஓமெனு மந்திரம் உலகெலாம் பொருந்தும்;*

*ஓம்தத் ஸத்தெனும் ஒள்ளிய வேதம்;*
*அகர வுகர மகரம் ஓமாம்;*
*ஜகபர ஜீவன் அகமக மென்னும்.*
*விழிகன வுறக்கம் வேறிலாத் துரீயம்*
*மொழியறு மோனம், மொழிவ ரிதன்பொருள்.*
*எந்திர மியங்க மந்திர மொலிக்கும்*
*சிற்கனல் பாய்ந்து சீவ யந்திரம்*
*ஓம்ஓம் என்ன உள்ளத் தியங்கும்.*
*அதையே கவனித் ததிலே லயமாய்*
*மதுவுண் வண்டுபோல் மௌனத் திருக்கலாம்.*
*எந்த மந்திரம் இயம்பினு மொன்றே;*
*சிந்தைத் தூயரே சித்தி யெய்துவர்.*
*மந்திரம் போடல் மனத்தின் வேலை;*
*மந்திர முதித்தது மனமுதி யிடத்தே*
*மந்திர மடங்கும் மனமடங் கிடமே.*
*மந்திரப் பாம்பு மௌனத் தடங்கும்.*
*தன்னை யறியத் தானே ஜபமாம்.*
*தன்னைக் காணத் தானே இன்பாம்.*
*தன்னைக் காணார் அன்னியங் காண்பார்.*
*அன்னியங் காணின் ஆணவக் கலகம்.*
*தருக்கம் வாதம் மருத்துவஞ் சோதிடம்*
*இருக்கும் மட்டும் இன்பம் வராது.*
*ஆதலால் மகனே, தீதறு நெறியை*
*ஓதுவேன் கேளாய் உள்ளன் புடையாய்;*
*தன்னை யறிவதே முன்னறி வாகும்.*
*தன்னை விடுத்த தத்துவம் வீணாம்;*
*தன்னை யறிந்து தானே யானார்*
*அன்னிய மில்லாத் தன்னியல் பாவார்.*

## 4. உலகுடன் பழகல்

*உலகுடன் பழகுதல் ஒருபெருங் கலையாம்.*
*அறிந்து பழகினால் அச்சமொன் றில்லை.*
*உலகம் என்பது பலகுணப் போர்க்களம்;*
*பலநடை யுடைமனப் பான்மைகள் கூடும்*
*சந்தை யாகிய சகத்தில், எத்தனை*
*விந்தைகள் காண்கிறோம் ! விதவிதமான*
*நலமுந் தீதும் கலந்து நிற்கும்*
*உலகில், உண்மை யொன்றையே மதித்து*
*வாழ்வார் பட்ட வருத்தங் கோடி;*
*வாளும் விடமும் கோளும் பொய்யும்,*
*தீயுங் கொண்டு திண்மன வீரரை*
*வேதனை யாலே சோதித் துலகம்*
*செய்த கொடுமைகள் செப்பப் போமோ?*
*நரியும் புலியும் நாயும் பேயும்*
*பாம்பும் தேளும் பருந்தும் போன்றார்*
*சூழுந் தீதைச் சுற்றிலுங் காண்கிறோம்.*
*எடுத்த செயலை இறைவன் பூசையாய்*
*அடுத்து முயன்று முடித்துச் செல்வதே*
*அறிஞர் போற்றும் அருட்பணி வழியாம்.*

*சூதும் வாதும் சூழ்ச்சியும் கோளும்*
*அழிசெய லாற்றும் ஆணவ வுலகில்*
*போர்வெறி கொண்ட போட்டி வுலகில்*
*சிந்தித் தெதையும் செய்வது நன்றே.*
*சிறுமன வகந்தை சேட்டைசெய் யுலகில்*
*தாந்தா மென்று தடிபிடித் தலைவார்*
*காள்கா ளென்றே கட்சிகள் பேசுவர்.*
*வாள்வா ளென்றே வம்பிற் கிழுப்பார்*
*நாயும் கழுதையும் வாயில் உழலும்*
*வள்ளல் என்பார் ....... வள்ளே மிச்சம்.*
*முன்னே வணங்கிப் பின்னே வைவார்.*
*பொதுநலம் என்று பொருளபகரிப்பார்*
*நாப்பறை யடித்து நட்பைக் கலைப்பார்*
*உடன்பிறந் தவரும் உளம்பிரிந் தொறுப்பார்;*
*கட்டிய மனைவியும் கலகம் செய்வாள்;*
*பெற்றதாய் கூடப் பிரியம் விடுவாள்;*
*நம்பிய நண்பரும் அன்பினை மறப்பார்.*
*இத்தகை யுலகில் வித்தகப் பெரியார்*
*வந்த பணியை வருந்தி முடித்து,*
*விடுதலை பெறுவார் வீதியில் வாரார்.*
*கட்சி பேசார் கடமை காப்பார்*
*விளம்பரம் வேண்டார் உளமகிழ் தொண்டர்.*
*உருளும் உலகில் ஒட்டார், கற்றார்.*
*அன்பு மணியே, அவலப் படாதே;*
*கோள்பொய் யச்சக் கொடுமைகளின்றி*
*வேதனை பொறுத்துச் சோதனை தாண்டிக்*
*கடவுளை நம்பிக் காரியஞ் செய்வோம்.*
*எளிய வாழ்வை ஏந்தி மகிழ்வோம்.*
*புத்தர் ஏழை; புரந்தரர் ஏழை;*
*கிறித்துவும் ஏழை; குருநா னகரும்*
*அப்பர் சங்கரர் ஆகிய தீரரும்*
*ஏழை களாகவே இவ்வுல கத்தில்*
*இடர்களைப் பொறுத்துக் கடவுளை நம்பிப்*
*பணிபல செய்தனர் ....... பலப்பற் றின்றி.*
*அதுவே கீதைசொல் அறிவு மாகும்.*
*உண்டு தெய்வம், உண்டுநல் லுண்மை;*
*அசுரப் படைகளின் ஆற்றல் அழியும்*
*அன்பே வெல்லும் அறமே வாழும் !*
*நம்பி முயல்வோம் நம்மையின் றுலகம்*
*மதிக்கா விடினும், துதிக்கா விடினும்,*
*பதிவழி பாடெனப் பணிநலம் புரிவோம்.*
*எதுநங் கடமை, எப்படிச் செய்வோம்,*
*இன்றிதைச் செய்தோம், நாளையென் செய்வோம்?*
*நமது தலைவர் நாட்ட மென்ன?*
*நன்மை தீமை, இன்மை உண்மை*
*எதுவெனத் தேர்ந்தே இனிதெனத் தோன்றும்*
*வழியே சென்று, வஞ்சமில் லாமல்*
*மனச்சாட்சி மகிழ் மாண்வினை புரிவோம்*
*ஆற நினைத்தே ஆவன செய்வோம்*
*ஆட்க ளுடனே அளவுடன் பழகுவோம்;*

*படபடப் பின்றிப் பதமாய் நடந்தே,*
*நிதான மாக நினைத்து பேசிப்*
*பொறாமை கொண்ட புல்லர் முன்பும்,*
*முன்கோ பப்புயல் மூளும் பொழுதும்*
*புன்னகை யுடனே நன்மொழி சொல்வோம்;*
*அசுர மாயம் அழிநடம் புரியும்*
*இக்கா லத்தில் இன்னலே மிகுதி.*
*எதிர்த்துச் சினக்கும் எரிகுணப் பகைவர்*
*தூற்றித் திரியும் துறுதுறுப் பகைவர்*
*பின்வெடிவைக்கும் பேய்மனப் பகைவர்,*
*எட்டியிருந்தே ஏளனஞ் செய்வார்.*
*அமைதித் தனிமையில் அருட்பணி புரிவோம்.*
*உள்ள மட்டிலும் உண்மை யறியார்;*
*செத்த பிறகே சேகண்டி யடிப்பார்;*
*உலகோர் இயல்பைப் பலகாற் கண்டோம்.*
*பொறுமையோ டிருந்தே புண்ணியம் புரிவோம்.*
*கம்பர் வள்ளுவர் கவிகள் பலரும்*
*ஆயிரம் ஆயிரம் ஆண்டுக ளுக்குப்*
*பின்னரே பேரும் பெருமையும் பெற்றார்.*
*காலங் கருதிக் கடமை காப்போம்*
*ஞாலங் கருதும் நாளும் வருமே*
*என்றிருப் பதுவே இயற்கை நெறியாம்.*
*அன்பைச் செய்தார் அழிவதுமில்லை;*
*வஞ்சனை செய்தார் வளர்வது மில்லை;*
*தீமை செய்தார் செல்வஞ் சேர்க்கலாம்,*
*பேரும் புகழும் பெருக்கப் பெறலாம்,*
*பட்டம் பதவி பவிசு மினுக்கலாம்.*
*ஆனால், முடிவில் அமைதி கெட்டலைவார்.*
*அன்பும் அறமும் அருளும் உண்மையும்*
*இறைவ னருளால் என்றுமே நன்றாம்.*

## 5. உலகிடை வாழ்வு

*உலகிடை யிருந்தும் உலகி லொட்டாது*
*நலம்பல செய்த புலவரைக் காணாய்*
*வெண்பா லுள்ளே விரவிய நெய்போல்*
*தன்பா லுள்ளது தத்துவ மெல்லாம்.*
*உள்ளத் தாழியில் வெள்ளை மனத்துடன்*
*கள்ளன் கரந்துளான்; காதலாற் கவர்வாய்.*
*ஆர்வத் துளியை யதிலுறை குத்து;*
*ஓரிடந் தனியே யுலம்பா திருத்து;*
*தனிமௌ னத்திலே தயிராம் பாலே !*
*இனியதி னினிய தியம்பாத் தியானம்*
*காலையில் விழித்துக் கடைநட் பாலே;*
*வேலைத் திரைபோல் விம்மிடு மன்பு.*
*தயிர்போ லிந்தத் தாரணி வாழ்வாம்.*
*அதிலே யொட்டா தாங்குறும் வெண்ணெய்.*
*அதுபோ லப்பனே யகிலவாழ் வினிலே*
*மிதக்க முடியும் மெலிவினை யின்றி.*
*நாடகந் தனிலே நடனா னந்தன்*
*ஆடுவன் வாடுவன் அரிச்சந் திரனாய்.*

*ஆடுவ துடையே, வாடுதல் வேடம்;*
*நாடி யுள்ளே 'நான்நட ராஜன்;*
*கட்டு கடனெனக் கிட்டி போட்ட*
*கொடியன் செய்த கொடுமை எனக்கிலை*
*கால கண்டனின் கடுமை யெனக்கிலை*
*எனக்கிலை மயானப் பிணஞ்சுடு வேலை;*
*எனக்கிது நடிப்பே ' யென்றுணர் வானால்;*
*இதுபோ லப்பனே யிவ்வுல கினிலே*
*பொதுவுற நோக்கிப் போலி யாடலை*
*உள்ளே தெளிந்தங் குறைவா யன்பா !*
*மெள்ள மெள்ள வுள்ளது விளங்கும்.*
*உள்ளியை யுரித்தால் எல்லாந் தோலே;*
*கள்ள வுலகின் கனவாழ் வதுவே;*
*அரசொன் றாளும்; அரசொன் றாழும்;*
*அரசொன் றடக்கும்; அரசொன் றடங்கும்.*
*உள்ள மட்டும் உண்மையா யிருப்போம்;*
*உள்ள பொருளில் ஊன்றி யுலாவுவோம்;*
*பிறிதெலாம் இறைவன் கருதிய வாறே*
*வந்துபோம்; உலகில் வெந்து போகாமல்*
*என்றுன் வாழ்வி லெடுத்தது முயன்று*
*நன்றுன் னுள்ளே நின்று நிலைப்பாய்.*
*பாரா யன்பா, பாவையர் தலையில்*
*நீர்க்குடஞ் சுமப்பர்; நீள்கரம் வீசுவர்;*
*வீட்டுப் பேச்செல்லாம் வாட்டமாய்ப் பேசுவர்;*
*நாட்டுப் பேச்சு நவிலுவர், நகைப்பர்;*
*கவன மெல்லாங் கடத்தி லிருக்கும்.*
*அவரிடம் உண்மை யறிவா யன்பா !*
*சத்தம் விட்டுச் சத்தினி லூன்று;*
*எத்தொழி லாற்றினு மிருவிகற் புறாதே !*
*நல்லது பொல்லது நாளும் நடக்கும்;*
*காட்சியெல்லாம் சாட்சியாய்ப் பார்த்திரு;*
*பாராய் மகனே பரிதியின் செயலை.*
*கதிரைச் சிலபேர் கைகுவித் தேற்பார்*
*ஐயோ வெய்யிலென் றலறுவர் சிலபேர்;*
*இரவிக் கில்லை இசைவசை யிரண்டும்.*
*உலகொரு தடாகம்; ஒண்மதி யதிலே*
*நிலவி நீருடன் அலைவது காணாய்.*
*தண்மதி மோதுந் தரங்கத் தலைந்தால்*
*விண்மதிக் கேதும் விகார முண்டோ?*
*நீதான் ஆன்மா; நீலவா னறிவில்*
*போத மயமாய்ப் பொலிகிறா யப்பா !*
*உலகத் தடத்தில் உலம்பும் அலைகள்*
*இலையுனக் கெல்லாம் இருமனத் திற்கே.*

## 6. மயக்கறல்

*ஐயோ வுலகின் அசட்டுத் தனங்கள்,*
*பொய்வே டங்கள் புகலப் படுமோ?*
*கண்ணா டிகளாற் கவின்செய் வீட்டின்*
*உண்ணா டியதோர் உரத்த வெறிநாய்;*
*சுற்றும் பார்த்தது, சுவான நிழல்கள்;*

*பற்றல ரென்று பாய்ந்தது மேலே.*
*நிலைக்கண் ணாடி நிழற்றிய நாய்களும்*
*குலைத்தன குதித்தன, குரலெடுக் காமல்.*
*துள்ளிக் கடித்தது, தோற்றமுங் கடித்தது;*
*உள்ள தில்ல துணரா மையினால்,*
*பொய்நாய்க் கூட்டம் போலிப் போர்தர,*
*மெய்நா யின்னும் வெறிமே லேறவே*
*சில்லுசில் லாயின சிலைக்கண் ணாடிகள்;*
*பல்லுவா யெல்லாம் பாறிடக் குருதி,*
*வீட்டுத் தலைவன் விரைந்துகோல் கொண்டு*
*ஓட்டி நாயை யுரைத்தா னிங்கனே:*
*'அறிவிலி நாயே, ஆன்ம நிழலுடன்*
*வெறித்துப் பொருது வேதனைப் பட்டாய்;*
*உன்னைப் போலவே யுலகிலும் மனிதன்*
*தன்மயந் தன்னைப் பன்மய மாக*
*மயங்கிப் பொருது வாதம் புரிந்து*
*நயங்கெடு கின்றான், நாயினுங் கேடாய் !'*
*அப்பனே யிந்த வொப்பினை யறிவாய்;*
*செப்பினுங் கல்லிலுந் தேடித் திரியேல்;*
*கொழுத்துச் சினந்து குலைநாய் மனத்தை*
*இழுத்துள் ளடக்கி யிருவிகற் பறுவாய்;*
*உள்ளந் தனிலே யொளிபெற வொளிந்த*
*கள்ளனைக் கருதிக் கருதிப் பற்றாய்;*
*ஓசைப் படாமல் உன்கடன் ஆற்றாய்.*
*ஆசைப் படாமல், அகமலையாதே*
*தன்னைக் கலந்தோர் தான்றா னாவார்.*
*தன்னொளி விரிவே பன்னிற வுலகம்;*
*எத்தனை கருதல், எத்தனை யுரைத்தல்,*
*எத்தனை யளவை, எத்தனை யொப்பு !*
*ஐதிகம் சம்பவம், அபாவம் சுபாவம்,*
*வைதிகம் சாத்திரம், வாய்ப்போ ரெல்லாம்*
*காட்டிடா இதனைக் கண்டு கலந்தால்,*
*வாட்டந் தீர வாய்த்திடுஞ் சுகமே !*
*கண்ட பின்னுங் கலந்தினி துறவே*
*தொண்டர் கதறினர் தோத்திரம் பலவே ;*
*இன்ப துன்ப இருகரை வழியே*
*தன்பொரு ளகண்ட தத்துவக் கடலை*
*நோக்க நோக்க நுட்பம் விளங்கும்;*
*நீக்க மின்றி நிறைபெறு மின்பம்.*
*தம்மை யுணரார் சாத்திர வாதம்,*
*பொம்மைக் காதலர் புரிமணம் போலாம் !*
*தம்மை யுணர்ந்தார் சாற்றும் மோனம்,*
*மெய்மைக் காதல் விளைத்த சுகமாம் !*
*அவமனக் கட்டற் றான்மா தூய*
*சிவமய மாதலே சீவன் முத்தி.*
*அறிவைக் கொண்டே யான்மா ஐந்து*
*பொறியைக் கொண்டைம் புலன்களை நுகரும்.*
*சிந்தையற் றுள்ளே தெளிந்தமர் சித்தைச்*
*சந்தியி லிழுப்பது சங்கட மனப்பேய்.*
*திரிந்துணர் அறிவு சிதறிப் போகும்.*

*இருந்துணர் அறிவே பொருந்திய தாகும்.*
*உலகவா தங்களில் உலம்புவர் மாந்தர்;*
*கலகந் தவிரக் காரிய மில்லை.*
*கண்ணுட் கண்ணாய்க் காணுவ தெதுசொல் !*
*உண்மை யது, நீயுணர்ந்துட் பாராய்;*
*உள்ள மட்டும் உள்ளுவந் திருப்பாய்.*
*புகையு மிடத்திற் பொலியன லுண்டு,*
*பஞ்ச பூதப் பஞ்சரத் துள்ளே*
*துஞ்சா துள்ளது சுத்தக் கிளியே;*
*உணரார் புணரார்; புணரார் நுகரார்.*
*உணர்ந்த புலவர் உரைநூல் வேண்டார்.*
*தன்னை யுணர்க; தன்னுடை யானைத்*
*தன்னி லுணர்க; தத்துவ மதுவே.*
*ஆணைச் சக்கரத் தாடுங் களிமண்*
*பானை செய்வன் பரமக் குயவன்.*
*மாயப் பானை வடிவை யமைத்துத்*
*தோயா திருக்குஞ் சுதந்தரங் காணாய் !*
*அவன் செயலின்றி யசையா துலகம்;*
*அவன்சந் நிதிக்கே ஐந்தொழி லாகும்.*

## 7. பெரியாரியல்பு

*பெரியா ரியல்பைத் தெரியா துலகம்;*
*அரியார் தம்முள் அடங்கி யிருப்பார்;*
*கடபட வென்று படிநூ லளவார்;*
*படபடத் தெதுவும் பகட்டிற் கியற்றார்;*
*உலகசைந் துருண்டும் உள்ளசைந் துலையார்,*
*மலைகுலைந் தாலு மனமது குலையார்;*
*அச்ச மென்ப தணுவு மறியார்;*
*துச்ச மான தூறுகள் பேசார்;*
*காதக ராயினுங் காதல ராயினும்*
*பாதக ராயினும் பண்டித ராயினுந்*
*தன்னைக் கொல்லுந் தறுகண ராயினும்*
*இன்னதி னன்பே யிதமா யுரைப்பர்;*
*சந்தை நடுவிலுந் தனிமை காண்பர்;*
*வந்ததில் மகிழார், வராததற் கேங்கார்;*
*இறைவன் கட்டளை யின்னதென் றறிந்து*
*நிறைவேற் றியதும் மறைகுவர் மின்போல்.*

## 8. காரண காரியம்

*காரண மின்றிக் காரிய மில்லை*
*காரிய மின்றேற் காரணப் பேச்சேன்?*
*பருத்தி யின்றேற் பாவுநூ லில்லை;*
*கருத்தா வின்றேற் காணுல கில்லை;*
*ஆன்மா வின்றேல் ஆருட லில்லை;*
*தானொன் றின்றேல் தத்துவப் பேச்சேன்?*
*தண்ணீர் இன்றித் தாமரை யில்லை;*
*விண்மழை யின்றி விளைபயி ரில்லை;*
*விண்ணணு வின்றி விஞ்ஞான மில்லை;*

*தந்தைதா யின்றித் தனயனு மில்லை;*
*இந்த விதமா யெண்ணி நீ பாராய் !*

## 9. பெயர்

*வாதச் சமய வழக்கிற் கப்பால்*
*ஆதிப் பழம்பொரு ளறிவிற் புலனாம்.*
*உறுதியாய் நம்பாய், உலகுயிர்த் தோற்றமும்*
*இறுதியு மதனரு ளிச்சையென் றுணராய் !*
*இன்பம் அமுதம் என்று முள்ளது;*
*துன்ப மறுப்பது தொந்தமற் றதுவே.*
*தானே தானாந் தன்னருள் விரிவால்*
*வானும் புவியும் வளர்க்கும் பொருளாம்.*
*சீவ சாட்சியாம் சிவனென் பதுவே;*
*கட்டுறச் சீவனாம், கட்டறச் சிவனாம்;*
*புலன்மனங் கடந்த பொலிவது வாமே.*
*எப்படி வேண்டு மென்னினும் போற்றி*
*அப்படி யதனி லன்பு பூண் டிருப்பாய்.*
*சுத்தன் சத்தியன் சுதந்தரன் சோதி*
*முத்தன் நித்தியன் முற்றுணர் முதல்வன்*
*எல்லாம் வல்லவன் எம்பிரான் இறைவன்;*
*அல்லா யஹோவா அரியரன் அகரன்*
*பரம்பொரு ளவனே பாரெலா மவனே*
*சிரம்பொரு ளவனே, சிந்தைசெய் மனமே !*
*சிற்றுல கத்தின் பற்றற முற்றும்*
*பற்றற் றானைப் பற்றுக மனமே !*
*வீட்டுள் ளிருட்டை வெருட்டினாற் போமோ?*
*ஓட்டினாற் போமோ ? ஒளியினாற் போகும் !*

## 10. உலகரங்கிற் பெரியாருலவல்

*செத்தபின் போற்றும் செகவியல் பறிந்தே*
*உத்தமர் மோனத் துறைந்தனர் பலரே.*
*வாழ்வொரு நாடக மன்றமே போலும்;*
*ஆழ்வினை யாடற் கமைந்தவன் மனிதன்.*
*வினையறிந் தாற்றின் விடுதலை பெறலாம்;*
*வினைக்கட் டில்லார் விழுமிய பெரியார்.*
*தன்வினை கண்டு தானதிற் பற்றி*
*முன்வந் தாடி முடிந்தனர் சிலபேர்.*
*நாடக மெழுதவோர் நற்கதை காட்டி*
*ஓடினர் சிலபேர் உரைபே சாமலே.*
*மோனம் வகித்து, மோனத் தெழுந்த*
*ஞானந் தன்னை ஞாலம் வாழத்*
*தனிமையி னின்றே யினிமையா யெழுதி*
*மனிதருக் கீந்து மறைந்தனர் சிலபேர்.*
*தன்னை யறிந்து தவக்கனல் விரித்து*
*நன்னெறி யன்பர் ஞானம் பழுக்க*
*யோக சக்தியா லுரையா டாமல்*
*தாகந் தணித்தே யேகினர் சிலபேர்;*
*கடவுட் கலப்பிற் சுடர்விரிந் தோங்கி*
*யுடல்கொண் டுலகில் உலவினர் சிலபேர்;*

*இவ்வா றப்பனே, எண்ணறு பெரியோர்*
*எவ்வெவ் வாறிங் கியங்கினர் காணாய் !*
*கடலுள் முத்தெனக் கரந்துளார் பலபேர்;*
*படலிற் கொடியெனப் படர்ந்தனர் சிலபேர்;*
*இன்பங் கண்டுள் ளின்ப மளிக்கவே*
*அன்பே வடிவா யருட்பெரி யார்கள்*
*முன்பு நின்றும் மூடர் காணார்;*
*பின்பு மெச்சிப் பேரிகை யடிப்பர் !*
*பெரியா ரியல்பு பேசா வான்போல் !*

## 11. உலகியற் கொடுமை

*உண்டுடுத் தீட்டி யூடிக் கூடிப்*
*பெண்டிரைக் கெடுத்துப் பெண்ணாற் கெட்டுப்*
*பொன்னே பொருளே போகமே சுகமே,*
*என்னு முலகம், இனிதுரைப் பாரை*
*அடித்துத் துரத்தி அரகரா வென்று*
*தடித்த மடமை நடித்திடும் உலகம்,*
*சுத்த சோதித் தொழுகையால் ஆன்ம*
*தத்துவ முரைத்த ஜாரதுட் டிரனைச்*
*செவிட்டி லடித்துச் செகுத்த திவ்வுலகம்;*
*தெவிட்டா தின்று செப்பும் புகழே !*
*மாசறு மெய்யன், பேசரு மன்பன்*
*ஏசுவைச் சிலுவை யேற்றிய துலகம் !*
*காட்டு மிராண்டிக் காப்பிரி யர்க்குக்*
*காட்டி யிரக்கம் கடவுளன் புறுதியைச்*
*சொல்லி வந்த துகளறு நபியைக்*
*கல்லா லடித்தது கக்கிடச் செந்நீர் !*
*கண்ண னன்பிற் கரைந்த நிமையின்*
*உண்மைச் சீடரை யுடைத்தது மண்டை !*
*ஞான முரைத்த நானகன் றன்னை*
*“ஏனிப் பைத்தியம்” என்றனர் புல்லர்.*
*பொங்குவே தாந்தச் சிங்கமா யெழுந்த*
*சங்கர னைவிடந் தந்துகொன் றனரே !*
*கல்லை நம்பிக் கடவுளை மறந்து*
*வல்வினை பெருக்கி மடமையி லாழ்ந்து,*
*சாதிச் சண்டையும் சாத்திர வகந்தையும்*
*பேத புத்தியும் பிடித்தலை யுலகில்*
*வேதம் விளக்கி, வீரந் தூண்டிய*
*தயவே வடிவாந் தயானந் தரையும்*
*கயவர் நஞ்சு கலந்து கொன்றனர் !*
*பரம ஹம்ஸனைப் பைத்திய மென்றனர் !*
*குணக்குன் றான கொன்புத் ஸன்னும்,*
*என்னை அறிவார் இல்லையென் றிறந்தார்*
*அடைக்கல முரைத்த உடையவர் சீடனை*
*வெடுக்கெனக் கண்ணைப் பிடுங்கினா னொருவன்!*
*கருணை வள்ளலும் கடையைக் கட்டினார்.*
*தாயுமானாரும் சதா சிவனாரும்*
*மோனத் தனிமையில் ஞான மிசைத்தார்.*
*தாளா தந்தச் சாந்த சிவனை*

*வாளால் ஒருவன் வலக்கை தறித்தான் !*
*பார்நலம் பேசிய பாபெனும் மகானைக்*
*கோரமாய்ச் சுட்டுக் கொன்றதிவ் வுலகம் !*
*வாழ்வெலாம் பொதுநல வேள்வி யாக்கிய*
*காந்தியைச் சுட்டதிக் கடுமன வுலகம் !*

## 12. தீயரியல்பு

*தன்னலம் போற்றித் தமியரை யிகழ்வர்;*
*பொன்னலம் போற்றிப் புகழுரை சொல்வார்*
*கணப்பி ருந்தால் அணைப்புட னிருப்பர்;*
*பணப்பை யவிழ்த்தாற் பல்லை யிளிப்பர்;*
*முகத்துதி பேசி முடிச்சை யவிழ்ப்பர்;*
*சகப்புரட் டுகளைச் சரடு திரிப்பர்;*
*மயங்கியோன் முகத்தில் மசகைப் பூசுவர்;*
*தயங்கிய சமயந் தலையி லடிப்பர்;*
*கனிபோற் பேசிக் காரியம் பார்ப்பர்;*
*எனதென தென்னும் இறுமாப் பாலே*
*கைக்கோல் கொண்டு கருணையைப் புடைப்பர்!*
*வைக்கோல் காத்த வறள்நாய் போல்வர்;*
*கொடுக்கு மட்டுங் குளிர்முகங் காட்டுவர்*
*கொடுத்ததைக் கேட்டாற் கொடுக்கைக் காட்டுவர்!*
*ஆமாம் என்றே யாடுவர் முன்னே;*
*போம்போ மென்றே பொரிகுவர் பின்னே;*
*தொண்டு நடித்துத் துரோகி களாவார்.*
*உண்டு புடைத்துத் துண்டு செய்தோடுவர்.*
*எதுவும் உதவார், பொதுநலப் பணத்தை*
*சுரண்டிச் சுரண்டிச் சுயநலங் காப்பார்.*
*விரட்டி விரட்டி வேலை வாங்குவார்.......*
*கூலி கொடுக்கக் கூக்குர லிடுவர் !*
*நடிப்பு நளாயணி ....... நடத்தை வழவழா அ !*
*அருட்பா படிப்பர், ஆடறுத் துண்பார்*
*உயிர்க்குயி ராக வுள்ளவ னெண்ணார்;*
*உயிர்களை யறுத்து வயிற்றிற் புதைப்பர்;*
*மனிதரை மனிதர் மற்செய் தறுப்பர்;*
*சனியன் பிடித்த சகத்தினர் அந்தோ !*
*ஒருவரை யொருவ ருண்ணக் கருதி*
*இருவரு மின்னோ ரெமன்வாய்ப் படுவர் !*
*இருட்குல வுலகின் இயல்பிது வாகும்.*
*அருட்சுட ரெழுந்தால் அனைத்துந் திருந்துமே.*

## 13. உன்னை நீ திருத்து !

*வாயாற் பேசி வளைக்க முடிந்தோர்*
*நாயின் வாலை நன்றாய் நிமிர்த்துக !*
*உலகைப் படைத்தோ னுலகைத் திருத்துவான்!*
*பலவா றுன்னைப் பார்த்துத் திருத்து !*
*நீவிளக் கானால், நின்னொளி யுலகில்*
*தாவிப் பரந்து தகுமுறை பயனாம்.*
*தீதும் நலனுந் திரண்ட வுலகில்*
*வாதம் பேசி மாண்டார் பலபேர்.*

*தாந்தாந் திருந்தச் சகமுந் திருந்தும்.*
*மாந்தரைத் திருத்துமுன் மனத்தைத் திருத்து !*
*அச்சங் காட்டி யாணவச் செருக்கால்*
*பிச்சை மாந்தர்முன் பெருக்கப் பேசி*
*அகமடக் காத ஜகப்புரட் டர்கள்*
*சுகமடை யாது துஞ்சினர் பலரே.*

## 14. சொரூப வணக்கம்

*யாவ ருள்ளும் யாங்கணு முணர்வாய்*
*மேவிய சக்தி வேந்தனை நம்பு !*
*நாற்ற வுடலிது நாளையே மண்ணாம்*
*போற்றுக வுள்ளே பொன்றா வொன்றை !*
*என்னைக் காணாய் இவ்வுடல் காணின்;*
*என்னைக் காணின் இவ்வுடல் காணாய்.*
*'இன்ப வழியை யென்னுளே முயன்றே*
*அன்பனே யிவ்வா றடைந்தனன் காணாய்,*
*உன்னுளே நிலையா யுள்ளுதவ் வின்பம்,*
*பொன்னுளே பொதிந்த புதையலைப் போலே;*
*இவ்வழி நீயும் என்போ லடைதி;*
*உய்வழி யிதுவென் ' றுரைப்பன் குருவே.*

## 15. பிரமாண்டம்

*விண்ணி லெத்தனை வியன்மீன் கூட்டம் !*
*அண்ண லருளின் அம்மனை யாட்டம்.*
*எண்ணப் போமோ? எழுதப் போமோ?*
*கண்ணினாற் கண்டு கணிக்கப் போமோ?*
*ஒவ்வொருமீனு மொவ்வொரு சூரியன்;*
*அவ்வதைச் சுற்றி அளக்க லாகாக்*
*கோளத் தொகுதியோ குடுகுடென் றுருளும்*
*கேளாய் மகனே, கிளர்மீன் குழுவில்*
*நம்முன் விளங்கு ஞாயிறு மொன்றாம்;*
*அம்மணி சுற்றி யலைவன கோள்கள்;*
*அக்கோட் குழுவில் ஆருல கொன்று;*
*அக்கண் ணுலகி லாருயி ரனந்தம் !*
*அவற்றுள் மனிதனோர் அற்பப் பிராணி;*
*சடத்துளே புகுந்த சத்துசித் தாட்டம்.*
*இத்தனை யுலகும், இத்தனைக் கதிர்களும்,*
*சக்தி யொன்று தாங்குத லறிவாய்;*
*அந்தச் சக்தியே யருட்சிவ மாகும்*
*அந்தச் சக்தியே அல்லா யகோவா.*
*அந்தச் சக்தியே அரிஅர னயனாம்*
*அந்தச் சக்தியே யாவையு மாகும் !*
*அந்தச் சக்தி யாண்டவ னென்பர்.*
*அந்தச் சக்தியே அகமும் புறமும்.*
*அந்தச் சக்தி யடியே னுள்ளும்.*
*ஆதலால் மகனே அந்தச் சக்தியைத்*
*தீதற மனதிலே தியானஞ் செய் செய்,*
*ஆரா யப்பனே அரிய வுதாரணம் !*

## 16. இறைவனைப் பணிக !

ஒரு ரரசன், ஒளிமணி மாடம்,
சித்திரக் கூடம், சிங்காரத் தோட்டம்
எத்தனை மாளிகை யெழுப்பு கின்றான் !
அதனுள் விளக்குக ளாயிரம் வகைகள் ;
விதவித மான விளைகனி மரங்கள் ;
கணிக்கரும் போகக் கட்டழ கின்பம் ;
அணியணி யாக மணித்திருப் பாவையர்
தத்தா தைத்தா ததிங்கிணத் தோமெனக்
கத்துங் கிண்கிணிக் கால்நடம் புரிவர்;
பாட்டு வேகம் பாய்ந்து பறக்கும்.
காட்டும் வித்தைகள் கண்ணைக் கவரும்;
இத்தனை யமளியும் எவருக் கெதனால்?
அத்தனை யமளியும் அரசனுக் கரசால்.
அரசன் முன்னிலை யன்பை வேண்டுவோர்
அரசனை நம்பி யடைந்திட முயல்க !
வாயிற் சேவகன் வழியைக் காட்டுவான் ;
வாயிலைக் கடந்து வழியே காமல்
வாயிற் காரனை வணங்கிக் கிடந்தால்
மாயக் காலம் மன்னனைக் காட்டுமா ?
அப்பனே, யதுபோல் அகிலமா ளிகையில்
இப்பா ருயிர்களுக் கிறைவ னொருவனை
எவ்விடை யீடு மின்றி யவரவர்
ஒவ்விய வாறே யுணர்வா லடையலாம்.
'என்னைப் பணியே லிறைவனைப் பணிகெ'னச்
சொன்ன முகம்மதின் சொல்லமு தாகும் ;
"சன்மார்க் கத்தீர் சற்றெனைக் கேண்மின் ;
என்னடி விழேன்மின், இறையடி பணிமின் "
என்ற வள்ளலின் இன்னுரை யமுதாம் !
"ஒன்றே தெய்வம் ; ஒருகுலம் மக்கள்"
என்ற வுண்மை யெவர்க்கும் பொதுவாம் !

## 17. ஆதாரம்

மூலா தாரம் முதலடிப் படையாம்.
சுவாதிட் டானம் சுற்றுத் திண்ணை ;
மணிபூ ரகமே மண்டப முதலாம்.
அநாகத மாகும் அதன்மேற் கூறை;
விசுத்தி யாகும் விமலமாம் மாடி ;
ஆக்கினை யாகும் அதன்மேன் மாடி ;
அதன்மே ரு லாயிரம் அழகிதழ் மலர்மேல்,
புதுவீ டொன்று பொலியுந் துரியம்;

அதுவே மாடத் தமர்ந்த கூடமாம் ;
அதன்மே லுள்ள தகண்டப் பால்வெளி ;
அதுவே துரியா தீதமாம் விண்ணே !
அதிற்கலந் தாலே யானந் தத்துயில் ;
சுத்த சாந்த ஜோதி சக்தி
மண்டலம் அப்பாலே உண்டாம் அறிவாய்.

## 18. சகவாசம்

*இதய மன்றில் இருப்பிட முனக்கே;*
*எதிலே நிலைப்போ அதுவாம் இதயம்;*
*குரங்கொடு சேர்ந்தால் குட்டிக் கரணம்.*
*கறங்கொடு சேர்ந்தாற் கருத்தும் அலையும்.*
*வேடன் வளர்கிளி வேட்டை பேசும்.*
*வேதியன் வளர்ப்பது வேதம் பேசும்.*
*ஏதே தெங்கே யியல்பது வாகும்.*
*யந்திரம் வேண்டின் யந்திரப் பயனாம்;*
*மந்திரம் வேண்டின் மந்திரப் பயனாம்;*
*இறைவனை வேண்டின் இன்பமே பயனாம்;*
*நிறைகளிப் பாவது நிறைபொருட் கலப்பே !*

## 19. ஜீவ யாத்திரை

*உயிர்போம் வழியை யுரைக்கக் கேளாய்,*
*அயர்ந்துடல் வீழ்ந்ததும் ஆவி துடிக்கும்;*
*நாடிக ளொடுங்கி நாத மடங்கும்;*
*வீடுவிட் டோட விரைந்து பொறிபுலன்*
*அந்தக் கரணம் அடங்கலும் மூட்டை*
*விந்தையாய்க் கட்டிச் சிந்தனை மனது*
*உள்ளக் கூடத் துறக்கலந் திருக்கும்;*
*கள்ள நாடகம் கணக்கில நடக்கும்.*
*அங்கே நாடக மாடுவ தெல்லாம்*
*சங்கற் பங்களின் சங்குல மனமே.*
*சித்தந் தன்னிற் சித்திர குப்தம்*
*கத்தை கத்தையாய்க் கட்டவிழ்ந் தெதிரும்.*
*துஞ்சும் போது துன்னிய வாறே*
*எஞ்சும் பிறவி யெய்துவ துறுதி;*
*சித்திர குப்தச் சித்திர மெதனிற்*
*சுற்றும் மனது சுருக்கெனப் பாயுமோ,*
*அத்தகைப் பிறவி யடைவ துறுதி.*
*மற்றதற் கேற்ப மனைவிடும் ஜீவன்*
*விஞ்ஞானிக்கு விழிவழி போகும்.*
*அஞ்ஞா னிகளுக் காசன வழியே.*
*சிரவழி யுபாசகர் சீவன் ஏகும்.*
*ஒன்பா னோட்டை யுடலை விடுத்துத்*
*தென்பாற் செல்லும் ஜீவ னெட்டுநாள்*
*ஆங்கே சுற்றும் ; அதன்பிற கேகித்*
*தான்கரு துடலைத் தாவிப் பற்றும்.*
*'ஐயா போனையா, அப்பா போனையா,*
*ஐயை யோ' வென் றடித்தழு மடமை*
*வேண்டா வேண்டா வியனுல கத்தீர் !*
*ஆண்டா னிச்சையென் றமைதியா யிருமினோ !*

## 20. அருள்

*அச்ச மின்மை அஹிம்ஸை யன்பருள்,*
*மிச்சை யின்மை வெளிமயக் கின்மை,*
*ஆசை வெறிகள் அற்றுநல் லான்மா*

*மாசறு தேவ வாழ்வினை யெய்தும்*
*ஆணவ மாயை யாசைகள் வற்றக்*
*காணுங் காணாக் காட்சிக ளெல்லாம்.*
*அமரர் தமக்கும் ஆணவ மிருக்கும் ;*
*விமல மானபின் விமலனைச் சேர்வர்.*
*அரனே விஞ்ஞா னிகளுக் கருள்வான் ;*
*குருவா யருள்வான் பிரளயா கலர்க்கு.*
*சகலர் குருவைச் சார்ந்தருள் பெறுவர்.*
*அகநா யகனே யருணெறிக் கிறைவன்.*
*அவனரு ளாலே யவனறி வாகும் ;*
*அவனறி வாலே யவன் கலப் புண்டாம்*
*அவன்கலப் பாலே யவன்மய மாவர்*
*அவன்மய மானோர் அருட்சுட ராவார்.*
*அப்பனே, யென்றன் அன்புப் பிஞ்சே,*
*செப்பிய வுரைகளைச் சிந்தித் தறிவாய் !*

## 21. அன்பு

*உண்மை யன்பர்க் குயிரையுந் தரலாம்*
*உண்மை யன்பால் உலகையும் வெல்லலாம்.*
*அன்பை வளராய் ; அன்புனை வளர்க்கும்*
*அன்பே கடவுள், அன்பே யின்பம் !*
*உண்மை யன்பன் உலகினு மரிதாம் ;*
*உண்மைக் காதல் உலகினும் பெரிதாம் !*

## 22. சாதனம்

*அன்பனே கேளாய், அனுபவச் சுருக்கம் ;*
*இன்ப மென்ப திறைவன் அருளே.*
*எல்லா வுயிர்களும் இறைவனைப் பணிக ;*
*உள்ளா னுயிர்களின் உள்ளத் தவனே !*
*தினந்தின மொருமணி தியானத் தாலே*
*மனந்தனை யடக்கி மாசற நின்றால்*
*உன்னுள் ளத்தே யுள்ளவ னொளிர்வான்.*
*உன்னுள் ளவனை யுணர்ந்து காணுக !*
*நோக்கா நோக்கால் நோக்க நோக்கப்*
*பார்க்கு மிடந்தோறும் பார்க்கலா மவனை.*
*பிறகே வேற்றுமைப் பீடைக ளொழியும் ;*
*பிறகே யின்பம் பிறந்திடு முறுதி.*
*அன்பனே, கடவுள் அருள்வடி வாகும் ;*
*உன்பளிங் குளத்திலோர் உணர்வாய்க் காணும் ;*
*விருவிரென் றுணர்வு வேகமாய்ப் பாயும்,*
*திருவுணர் வோடு திகழுமோர் சோதி !*
*அவ்வருட் சோதிக் கறிகுறி யாகவே*
*துவ்வெண் ணீறு துதைந்தனர் மேலோர்.*
*உன்னுள் ளிருந்தே யுதிக்கு மறிவொளி.*
*அறிவையே பற்றிடி னறிவா யிருப்பாய்*
*அவ்வறி வாலே யனைத்தையுங் கண்டால்,*
*எவ்வித பேதமு மிருக்கா துலகில்.*
*இப்போ தொருவரை யெதிரே கண்டால்,*

*தொப்பையைப் பார்ப்பாய்; தோளைப் பார்ப்பாய்*
*குட்டை நெட்டை, குறுகிய மூக்கு*
*கட்டை செவ்வல் கருவல் மாநிறம்*
*மறவன் முதலி, வடுகன் பார்ப்பான்*
*குறவன் நந்தன் குலமிவ னென்பாய் ;*
*இந்தியன் வெள்ளையன் இஸ்லா மியனிவன்;*
*சொந்தம் நேற்று வந்தவ னென்பாய்;*
*சொல்லு மிவையெலாந் தோல்வேற் றுமையே;*
*எல்லாம் மனத்தின் இருவி காரமாம்.*
*உணர்ச்சி யுற்றபின் உலகெலாங் கோயில்;*
*உணர்ச்சியா லுள்ளே ஒருமயங் காண்பாய்.*
*அப்போ தொருவரை யணுகிப் பார்க்கின்,*
*இப்போ திவரார்? இவ்வுட லில்லை;*
*இவ்வுட லுக்குள் ளிருப்பதோர் ஆன்மா;*
*அவ்வான் மாவால் ஆடுமிப் பாவை;*
*அதன்மே லிப்பெண் ணாணுருக் கற்பனை*
*அதன்மேற் குலம்வகை யனைத்துங் கற்பனை.*
*நான்காண் மனிதன் நானல தில்லை;*
*ஆன்மா நானே, ஆன்மா அவனே;*
*ஆவிக் குயிராய் அடியனுட் கலந்தான்;*
*ஆவிக் குயிராய் அவனாங் குள்ளான்;*
*இவ்வுயிர் போலே யவ்வுயிர் எனதே.*
*எவ்வித பேதமும் இல்லையென் றறிவாய்.*
*பார்க்குந் திசையெலா நீக்கற நிற்போன்;*
*ஆர்க்கும் பொதுநிலை யமர்ந்தா னுள்ளம்.*
*உடலைப் பார்த்தா லுண்டாம் விகாரம்.*
*உடையா னுணர்வா லொன்றே புலனாம்.*
*இந்தவோர் பொருளை எதனிற் காணினும்*
*சொந்த மன்னியந் தோன்றுமோ மனமே?*
*சாதிச் சமய சழக்குக ளிருக்குமோ?*
*பேத புத்தியின் பிழைக ளிருக்குமோ?*
*அன்றே வேற்றுமை யற்றுல கெல்லாம்*
*உண்டா மான்ம வொருப்பாட் டுரிமை !*
*ஓர்பெரு மான்ம ஒற்றுமை யின்றிச்*
*சீர்திருத் தங்கள் செய்வார் மாந்தர்;*
*ஊனுடைச் சண்டை, ஒற்றுமைச் சண்டை,*
*ஆண்பெண் சண்டை, யடுக்குட் சண்டை !*
*உள்ளறி யாத வுலக மாயம்;*
*உள்ளொன் றானால் உலகொன் றாகும்;*
*உள்ளொற் றுமையா லுலகொற் றுமையாம்.*

## 23. ஆத்மானுபூதி

*ஆன்மா என்பது யாதெனக் கேட்டாய்.*
*பான்மை யுரைப்பேன் பார்த்தா லதுநீ.*
*சற்றிவ் வுடலைச் சாம்பிண மாக்குவேன்;*
*உற்றுப் பாராய், உறுப்பெலாஞ் சரியே.*
*மூக்கதற் குள்ளது, மூச்சு விடுமோ?*
*நாக்கதற் குள்ளது, நற்சுவை யறியுமோ?*
*கண்ணதற் குள்ளது, காணுமோ வுன்னை?*

*பண்ணொலி கேட்குமோ பரந்த செவிகள்?*
*மண்டை யுள்ளது, மனனஞ் செய்யுமோ?*
*தொண்டை யுள்ளது, தொனியெடுக் கும்மோ?*
*முற்று மில்லை; மூச்சுப் பேச்சிலை;*
*சற்றுமுன் னிந்தச் சவத்தி னுள்ளே*
*மூச்சு விட்டது, பேச்சு விரித்ததும்,*
*ஓச்சிக் கையை ஓய்யா ரமதாய்*
*நடந்ததும், பார்த்ததும், நான்நா னெனமனம்*
*உடைந்ததும், உகந்ததும் உற்றறி ! யாரது?*
*இதயந் துடிக்கின் இயந்திரம் நடக்கும்;*
*இதய மயர்ந்தால் இயந்திரம் பிணமாம்;*
*அதிலொரு சூக்குமம் அசைக்குமிக் கூட்டை.*
*அதுவே ஜீவன், அதுவே யான்மா.*
*அதனுணர் வாலே, ஐம்பொறி யுணரும்*
*அதனால் மூளைக் கறிந்திட வொண்ணும்;*
*அப்பனே நீயின் றயர்ந்து தூங்குழி*
*சொற்பனங் காணுஞ் சூக்கும மெதுசொல்?*
*கட்டைக் கிந்தக் கனவுக ளுண்டோ?*
*திட்டமா யுள்ளே திரியுதோர் மனது.*
*யாங்கிம் மனமெழு மாங்கே யான்மா.*
*உன்னான் மாவை யொளிப்பது மனதே;*
*அன்னதை யடக்கினால் அமைதிவீ டாகும்.*

## 24. ஒழுக்கம்

*அச்ச மசூயை யழுக்கா றகந்தை*
*துச்ச மான தூறுகள் வேண்டா:*
*மனிதர் தங்கள் மனச்சான் றின்படி*
*இனிது நடந்தால் இடரிங் கில்லை.*
*பூசி னாலும் பூசா விடினும்,*
*நேசத் தாலே நெஞ்சைத் தொட்டிரு;*
*ஆலயம் புகினும் அல்லா விடிலும்*
*ஞாலால யத்து ஞாயிறைக் காணாய் !*
*அதுபோ லறிவொளி யான்மா யார்க்கும்*
*பொதுவுற வுள்ளே பொலிவதென் றுணராய்.*
*உயிரிற் கலந்த வொருவனைக் கண்டால்*
*உயிர்க்குல மனைத்திலு முயிர்ப்பவ னவனாம்.*
*மனத்திற் கலந்த மதியினைக் கண்டால்*
*மனத்தை யியக்கு மதியவ னாவான்.*
*பாலினுந் தேனினும் பருப்பினும் மினியாய்,*
*பாலினிப் பறிபவன் பாராய்; யாரவன்?*
*யானென் கின்றாய்; யானார் சொல்லாய்?*
*யானிவ் வுடலிலை, யானிவ் வுயிர்ப்பிலை;*
*யானோ ரான்மா; ஊனா ருடலெலாம்*
*தானா யிருக்குந் தன்மை யதுவே.*
*கண்ணிற் கலந்த கண்மணி கண்டால்,*
*கண்காண் பொருளிற் காண்பான் புலனாம்.*
*யானே யனைத்துளும் யாவையு மென்னுள்*
*யானே யென்பதெங் கோனே வேறிலை;*
*அவனினு மன்னிய மாம்பொரு ளில்லை;*

*எவனு மெதுவும் அவனே யாவான்.*
*இச்சம நோக்கே எவர்க்கு மினிதாம்;*
*அச்ச மகந்தை யதனா லடங்குமே !*

## 25. யோகம்

*உள்ளந் தன்னி லூன்றிய திருவடிக்(கு)*
*அள்ளித் தன்னை யளித்தலே யோகம்*
*கடலினி லாறு கலப்பது போலே*
*உடையா னுடனே யொன்றுதல் யோகம்.*
*கண்ணவன் கண்ணாய்க் கருத்தவன் கருத்தாய்ப்*
*பண்ணுவ தவன்பணி, பகருவ தவனுரை;*
*அனைத்திலு மவனரு ளாணையி னிற்றலே*
*தினைத்துணைப் பேதமுந் தீர்சம யோகம்.*
*அத்தகை யோகம், அன்பினின் றெழுந்தால்*
*அத்த னாணையை மெத்தநன் கறியலாம்.*
*பிள்ளைபோ லுன்னைப் பிரான்கை தந்திடு;*
*வள்ளல் அன்னைபோல் வளர்ப்பான் உன்னை*
*நீக்கமற் றெங்குமே நிற்பவ னவனாம்.*
*ஒழுக்கம், வணக்கம், உடலுறு திக்காம்*
*இருக்கை உயிர்ப்பால் இருமனம் அடங்கும்*
*பொறிபுல னடக்கம் புந்தி நிலைப்புடன்*
*உள்ளம் ஒருமை ஒளிபெறத் தன்னுள்*
*தானே யாகும் சகச சமாதி.*
*சமாதி கடந்த தனிமக துரியா*
*தீத நிலைதனில் ஆதிப் பொருளே*
*உள்ளது, தன்னுள் உணர்வது சுத்த*
*சக்தியென் றறிவுறு முத்திசேர் யோகம்*
*எல்லாம் அவனுடன் அவனா யிருப்பதே.*
*தாக்கற் றவனை நீக்கறக் கலந்திடும்*
*அந்நிலை யிருப்பின் அதுசம யோகம்.*
*இந்நிலை வந்தால் எல்லா மின்பம்;*
*உலகுயிர் வாழ்வே யோக சமாஜமாம்.*

## 26. பூரணம்

*இன்புற வாரீர், இயங்குங் கோயில்காள் !*
*அன்பை வளர்ப்போம், அன்பே கடவுள் !*
*சாதி சமயச் சண்டைகள் வேண்டா;*
*மாதரு மாந்தருந் தீதற வாழலாம்.*
*அறிவையுள் ளடைவாம்; அறிவே யான்மா;*
*அறிவால் வாழ்வை யழகுறச் செய்வாம்.*
*அவரவ ருள்ளமே அன்பு நிலையம்*
*அவரவ ருள்ளமே ஆனந்த வூற்றாம்.*
*ஒவ்வோ ருயிரும் உலவுங் கோயில்;*
*எவ்வெவ ருள்ளும் இருப்பதோர் ஆன்மா.*
*மோன மாக வுள்ளத் தாழ்ந்து*
*தியானஞ் செய்க தினஞ்சில நாழிகை !*
*அமைதி பிறக்கும்; ஆன்மா புலனாம்;*

*தமவிரு ளகலும்; சக்திபாய்ந் தொளிரும்;*
*உலக வாழ்க்கையும் உயர்சம யோகமாம்;*
*நலமெலாம் ஓங்கு நல்வழி யிதுவே !*
*மெய்ப்பொரு ளறிக; விண்ணமு துண்க;*
*தெய்வ நிலைக்குத் தினந்தின முயர்க;*
*பூரணம் பெறுக; பூரணம் பொழிக !*
*பாருயி ரின்பப் பாலூற் றாகுக !*
*எல்லா வுயிர்க்கு மிறைவ னொருவனே,*
*எல்லா வுடலு மிறைவனா லயமே !*
*எல்லா ருக்கும் இயல்பாம் இன்பம்*
*எல்லார் வாழ்வும் இயற்சம யோகமே !*

## 27. சமயோக விண்ணப்பம்

*மெய்தாங்கி யுலவுகின்ற கடவுளர்காள்,*
*மெத்தவுமென் வணக்கங் கொள்வீர்;*
*பொய்தாங்கு வேற்றுமைகள் கட்டோடும்*
*ஒழிக; சமயோகம் வாழ்க !*
*துய்தான புதுவுலக மறுமலர்ச்சி வாழ்வை யிங்கு*
*துலக்கு கின்றேன்.*
*வைதாலுந் தமிழினிலே வையுங்கள்;*
*வாழ்த்தெனக்கொண் டியம்பு வேனே.*

*சாதிமத பேதங்கள் யாவிற்குஞ்*
*சாவுமணி யடிப்போம்; விண்ணில்*
*ஆதித்தன் எழுந்தபொழு ததற்குவழி*
*யமைந்ததுபோல், மதிம யக்கால்*
*வாதித்த வகுப்பினங்கள் வருமுன்பே,*
*வேதங்கள் வழுத்து முன்பே,*
*யாதிற்கும் பொதுவான இயற்கை யறம்*
*இருந்த ததற் கிசைந்து வாழ்வோம்.*

*சத்தியத்தை யறிந்திடுமின்; சமயலறைச்*
*சண்டைகளை யொழிமின்; உள்ளே*
*நித்தியத்தை வைத்துலவுந் திருக்கோயில்*
*எனவுயிரை நினைமின்; யாரும்*
*'ஒத்திநில்'லென் றுரையேன்மின்; உயர்சாதி*
*கீழ்சாதித் திரைக ளெல்லாம்*
*பொத்துவிழக் கிழித்தெறிமின்; பொதுமன்றிற்*
*சுதந்தரமாய்ப் பொருந்து வீரே.*

*யாரொருவன் மேல்வகுப்பென் றிறுமாப்பான்*
*அவன்கால மாயிற் றென்போம்;*
*யாரொருவன் கீழ்வகுப்பென் றுரைத்திடுவான்*
*அவனறிவைத் தூண்டி 'யெங்கும்*
*பாரப்பா, வோரான்மா பலவுடலம்*
*பூண்டுலவும் பான்மை' யென்போம்;*
*சேரப்பார்ப் போமுலகு; பிரிவினையைச்*
*சிந்தையிலும் பிரித்து வாழ்வோம்.*

*சித்தாந்த வேதாந்தச் செம்மல்காள்,*
*சீக்கியர்காள், பார்ஸியர்காள்,*

*புத்தர்காள், ஜைனர்காள், முஸ்லீம்காள்,*
*கிறிஸ்தவர்காள், பௌதிகர்காள்,*
*சக்தர்கள், வாருங்கள்; எல்லாரும்*
*சமயோக சங்கமா வோம்.*
*ஒத்தமன நேயமுடன் உலகால*
*யப்பணிசெய் தோங்கு வோமே.*
*சைவர்காள், வைணவர்காள், சாக்தர்காள்,*
*சன்மார்க்கச் சங்கத் தீர்காள்,*
*வையகத்தில் ஆண்பெண்ணாய் வந்தவர்காள்,*
*யாவர்க்கும் ஆன்மா வொன்றே;*
*மெய்யிதனை யவரவர்தொட் டுள்ளுணர்மின்;*
*வேறுபுற வேடங் கொண்டு*
*பொய்கட்டிப் போராடிப் பொழுதிழந்து*
*போகேன்மின், பொருந்தி வாழ்மின் !*

*பந்தமறுத் தோன்புத்தன்; புலன்வென்றோ*
*னேஜைனன்; பரிவு கொண்ட*
*சிந்தையுளோன் கிறித்தவனாம்; தெய்வத்தி*
*லுறுதியுளோன் செய்ய முஸ்லீம்;*
*எந்தவுயிர்க் கும்மினியன் அந்தணனாம்;*
*இழுக்கற்றோன் ஜார துஷ்ட்ரன்;*
*முந்துலக மான்மமய மெனவுணர்ந்தோன்*
*வேதாந்த முத்த னாமே.*

*ஆரொருவ னுயிர்களெலாங் கோயிலெனப்*
*பணிசெய்வான் அவனே சைவன்;*
*பாரெலாங் கடவுளெனப் பணிபவனே*
*வைணவனாம்; படைப்பி னங்கள்*
*ஓர்சக்தி விளையாட்டா யுணர்பவனே*
*சாக்தனாம்; இயற்கை யாலே*
*நேரான வுலகமென நினைப்பவனே*
*பௌதிகனாம்; நிகரின் னோரே.*

*மானிடர்காள் சிந்தியுங்கள்; சாதிமத*
*வேடங்கள் வருமு னெங்குந்*
*தானான தன்மயமா யிருந்ததுசுத்*
*தான்மவொளி, ஜீவசாட்சி;*
*'நான் சொன்ன படி நடநீ, நலம்பெறுவாய்'*
*என்ற துள்ளே நலியா வுண்மை.*
*ஏனிடர்கள்? மக்களற மொன்றெங்கும்*
*அதனையெடுத் தியம்பு வேனால்.*

*தெய்வத்தை நம்புங்கள்; நம்பாதார்*
*இயற்கையினைச் சிந்தி யுங்கள்;*
*வையத்தை சுத்தசக்தி வைத்தாளும்*
*வாய்மையினை மறுக்கொண் ணாதே.*
*பொய்வித்தை நம்பாதீர்; பொறுமையருள்*
*அன்புண்மை புனித வாழ்க்கை*
*எய்துசம யோகத்தில் எல்லாரும்*
*இதயான்ம நேய ராவீர்.*

*ஒற்றுமையைச் சிதைப்பதெல்லாம் உதவாதென்*
*றொதுக்கிடுமின்; மாய வித்தை*

*கற்றுமயக் கிடுஞ்சூது வாதுகளைக்*
*களைந்தெறிமின்; காத லுண்மை*
*பற்றிமணந் தொருகுலமாய்ப் பழுதற்று*
*வாழ்ந்திடுமின்; பாரீ ரிங்கு*
*வெற்றுரைகள் பேசாமல், வீரர்களாய்த்*
*தேவர்களாய் விளங்க வம்மின் !*

*பரிதியொளிர் விண்பரவும் பாரேநம்*
*ஆலயமாம்; பாரிலோங்கும்*
*உரிமைகொண்ட உயிர்த்தொகையே கடவுளென*
*வுணர்வோமிக் கடவுளுக்குப்*
*புரிபூசை பொதுநலத் தொண்டென வகுப்போம்*
*போராட்ட மில்லா ஆன்ம*
*விரிவான ஒருகுலமாய் விளங்குவோம்*
*விஞ்ஞான யுகத்தீர் வம்மின் !*

*என்னருமைச் சீவர்காள், எது நானென்*
*றிருக்கிறேன் அதுவே நீவிர்.*
*அன்னியமெண்ணாதீர்கள்; ஆளைவைத்*
*தினிச் சமயம் ஆக்காதீர்கள்*
*அன்னையெனச் சொல்லுகிறேன் .......*
*அனுபவங்கண் டாருலகைச் சுற்றிவந்தேன்;*
*முன்னேறி விண்ணேறும் அணுயுகத்தை*
*முன்னாள முயலுவீரே !*

*ஒவ்வொருவ ருள்ளத்து மொளிரான்ம*
*வுண்மையினைத் தூண்ட வேண்டும்;*
*இவ்வுலகக் கோயிலிலே எல்லாரும்*
*இன்புறவே வாழ வேண்டும்;*
*வெவ்வடிமை வறுமையிருள் வேற்றுமைகள்*
*வேரோடு மாய வேண்டும்;*
*எவ்வெவர்க்குஞ் சமவுரிமை தரவேண்டும்;*
*இதுவென்ற னார்வ மாமே !*

*இன்னியநல் லியற்கையிலே சமயோக*
*சமாஜத்தை யிலக்க வேண்டும்.*
*மன்னுயிர்கள் அதிற்கூடி மங்கலமாய்*
*வாழ்வாங்கு வாழ வேண்டும்.*
*பன்னிறமாம் பத்துநிலைக் கண்ணாடி*
*ஓமொளிமுன் பத்திசெய்து*
*தன்னறிவை யறிந்தெல்லாம் தானெனவே*
*சத்தியத்தைக் காண வேண்டும்.*

*இந்த அருள் வீட்டருகே யெம்மவரை*
*ஆளாக்கும் இனிய கல்வி*
*தந்திடவும், அருங்கலைகள் தொழில் வளமை*
*தழைத்திடவும், அறவோர் பேணும்*
*சுந்தரமா டங்களுடன் சுகாதார*
*வீடுகளும், அவற்றைச் சுற்றிப்*
*பந்திபந்தி யாயன்பர் மனைவாழ்வு*
*பாலிக்கும் பரிசும் வேண்டும்.*

*வேளாளர் வாணிபர்கள் தொழிலாளர்*
*உழைப்பாளர் காக்கும் வீரர்*

*தாளாளர் யாவருக்குஞ் சரிநிகராய்*
*உடையுணவு வீடு வேண்டும்;*
*நீளான்மத் தொகுப்பான சமுதாய*
*நெடுங்கரங்க ளாக மாந்தர்*
*தாழாது முயன்றுநிலம் விண்ணாகத்*
*தழைத்திடநன் றுழைக்க வேண்டும்.*

*மனிதசக்தி மேன்மேலும் வளர்ந்துதெய்வ*
*வாழ்வடைய வேண்டுகின்றேன்:*
*புனிதமுறப் பூரணம்பெற் றுலகினிலே*
*பூரணத்தைப் பொழிய வேண்டும்;*
*எனதுனதென் றிறுமாக்குஞ் சாதிவெறி*
*சமயவெறி யொழிந்தெல் லாரும்*
*இனிதிங்கு வாழவருட் சக்தியையா*
*னிறைஞ்சுகின்றேன், இனிது கேளீர்.*

*இத்தனையும் என்காலத் தியலுமோ*
*இயலாதோ இறைவ னிச்சை;*
*உத்தமநல் லன்பர்காள் உரைத்தேன் என்*
*உள்ளத்தி லுள்ள வாறே.*
*மெத்த மெத்த சிந்தியுங்கள்; மெல்ல மெல்ல*
*மேன்மை பெறச் செல்வீர், இங்கு*
*சித்தமுட னிருக்கின்றேன், சீவ சிவ*
*சேவைக்கே யுயிர்க்கின் றேனே.*
*எந்நாளெம் மனிதர் குலம் சமயோகில்*
*வாழ்ந்திடுமோ, இதயமன்றில்*
*எந்நாள்சுத் தான்மமயங் கண்டதுநான்*
*எனுமுண்மை யேற்ற மாமோ,*
*எந்நாளில் மனிதசக்தி தெய்வசக்தி*
*யெனவளர்ந்து பொலிவ தாமோ,*
*அந்நாளே யான்வாழு நன்னாளாம்,*
*சுத்தசக்தி யருள்க மாதோ !*

***********

# 10. சிவமந்திர நாதம்

***நமசிவாய ஓம் சிவம் நமசிவாய ஓம் சிவம்***
***நமசிவாய ஓம் சிவம் நமசிவாய ஓம் சிவம்***
***ஓம் சிவம் சிவோஹம் சிவமயம்*** *(4 தரம்)*

*ஆனந்த பைரவி )* *(முத்தாளம்*

*ஓம் என ஒலிப்பதும் நமசிவாய ஓம் சிவம்*
*ஓது வேத நாதமும் ”*
*ஆம் என உணர்வதும் ”*
*ஆத்ம ஞான ஜோதியும் ”*

# சுத்தானந்தரின் மந்திர மாலை

நான் எனத் துடிப்பதும் நமசிவாய ஓம்சிவம்
ஞாலமாய் நடிப்பதும் ”
தேன் என இனிப்பதும் ”
சீவனாய்த் தழைப்பதும் ”

வானென விரிந்ததும் ”
வளி யெனப் பரந்ததும் ”
ஊனிலே உயிர்ப்பதும் ”
உள்ளத்துள் ஒளிர்வதும் ”

சிதம்பரப் பரமனும் ”
சிற்சபையில் ஆடிடும் ”
பதம் பிடிக்கும் பாடலும் ”
பக்தர் கூடி யாடலும் ”

திருவாசக வெள்ளமும் “
திருமந்திர உள்ளமும் ”
திருமுறையின் சாரமும் ”
திருத் தொண்டரின் வீரமும் ”

நோய்களைத் தவிர்ப்பதும் ”
நூறிடர் தடுப்பதும் ”
பேய்களைத் தொலைப்பதும் ”
பேரின்பம் விளைப்பதும் ”

கல்லைத் தெப்பமாக்கிடும் “
கனல் குளிர்மையானதும் ”
எல்லையற்ற சக்தியும் “
இதய ஞான சித்தியும் ”

தத்துவத்தில் உள்ளதும் ”
தனிக்கருணை வெள்ளமும் ”
நித்தியப் பொருளதும் ”
நீடுவாழ நேர்வதும் ”

சமயசார சத்தியம் ”
சகல யோக சித்தியும் ”
அமைதி நல்கும் அட்சரம் ”
அகர வுகர மகரமாம் ”

அன்பிலே வளர்வதும் ”
அறிவிலே விளைவதும் ”
என்பிற் பெண் எழுந்ததும் ”
எரி எரிக் கொணாததும் ”

வெள்ளத்தை எதிர்த்ததும் ”
வெற்றியை அளித்ததும் ”
உள்ளத்தைத் திறந்ததும் ”
உயிருடன் பிறந்ததும் ”

ஆத்ம வித்யா தத்துவம் ”
ஆதிசிவ தத்துவம் ”
தோத்திரத்திற் கேற்றதும் ”
தொண்டர் தொண்டினாற்றலும் ”

மந்திரத்துள் மந்திரம் ”

## சுத்தானந்தரின் மந்திர மாலை

மனங்கடந்த ரந்திரம் — நமசிவாய ஓம்சிவம்
யந்திரத்தின் யந்திரம் ”
ஈயுமே சுதந்திரம் ”

சீவனிற் சிவமணம் “
திவ்ய ஜீவனார்ப்பணம் ”
தேவர்கள் ஜெபிப்பதும் ”
செயல்களைச் செயிப்பதும் ”

நாலு வேதமாவதும் “
நாலு வாக்ய வுண்மையும் ”
நாலு சாதனங்களும் ”
நாலாச்ரம தருமமும் ”

நாலவத்தை யுள்ளதும் “
நாலுமுத்தி தருவதும் ”
நாலுமார்க்க பந்துவும் ”
நாலுயுக வேந்தனும் ”

இலிங்கமா யிருப்பதும் ”
இதய நடராசனும் ”
துலங்கு வேல்முருகனும் ”
சுத்தசக்தி முதல்வனும் ”

இலங்கும் ஓம் விநாயகன் ”
இமய கௌரி நாயகன் ”
நலங்களெல்லாம் நல்கிடும் ”
நாமசாதனந் தரும் ”

சிவதாரக மந்திரம் ”
ஜீவன் முக்தி யந்திரம் ”
பவபய நிவாரணம் ”
பரமபக்தி ஆரணம் ”

முப்பொருள் விளக்கமும் ”
முச்சரீர மானதும் ”
எப்பொருளு மீவதும் ”
இறையருளின் பாலதும் ”

உள்ளத்தில் துடிப்பதும் ”
உலகமாய் வளர்வதும் ”
தெள்ளிய விஞ்ஞானமும் ”
தெய்வ முனிவர் மோனமும் ”

யோகசக்தி யாவதும் ”
போகசக்தி யாவதும் ”
தேக சக்தி யாவதும் ”
திவ்ய சக்தி யாவதும் ”

பொங்கு மங்களந் தரும் “
துங்கு யோக சமாஜம் ”
பூரணபலந் தரும் ”
சுத்த சச்சிதானந்தம் ”

நமசிவாய ஓம்சிவம் நமசிவாய ஓம்சிவம்
நமசிவாய ஓம்சிவம் நமசிவாய ஓம்சிவம்
ஓம்சிவம் சிவோஹம் சிவமயம்

## 11. சிவலிங்க நாதம்

*மோஹனம்)* *(ஆதி*

*சிவ சிவ சிவ எனப் பணிவோம்*
*சிவலிங்கத்தினை அணிவோம்*
*ஹர ஹர ஹர என ஆர்ப்போம்*
*அன்பு லிங்கத்தைத் துதிப்போம்*

*ஓம் சிவகுருபர லிங்கம் ....... இந்த*
*உலகென நிலவிடும் லிங்கம்*
*சாம்ப சதாசிவ லிங்கம் ....... சுத்த*
*சச்சிதானந்த சிவ லிங்கம்*

*ஆதிபராத்பர லிங்கம் ....... எங்கள்*
*அகமொளிர் ஆத்தும லிங்கம்*
***ஜோதி சுத்தானந்த லிங்கம்*** *....... திருத்*
*தொண்டரைக் காத்திடும் லிங்கம்*

*மரண பயமொழித்த லிங்கம் ....... அன்று*
*மார்க்கண்டார்க் கருளிய லிங்கம்*
*அருணகிரியில் வளர் லிங்கம் ....... ஓம்*
*அற்புதச் சிற்பர லிங்கம்*

*மாணிக்க வாசக லிங்கம் ....... அப்பர்*
*மனமணியாகிய லிங்கம்*
*தோணியப்பரெனத் தோன்றி ....... ஞானந்*
*தோய்ந்த பாலளித்த லிங்கம்*

*சுந்தரர்க் கருளிய லிங்கம் ....... ஆத்ம*
*சுதந்திர சமரச லிங்கம் ....... திரு*
*மந்திர மூலர் வணங்கும் ....... மிக*
*மகிமையுள்ள யோக லிங்கம்*

*வானமுதளித் திடும் லிங்கம் ....... நம்மை*
*வாழவைக்கும் இராம லிங்கம்*
*தேனமுதத் தமிழ் மாலையான*
*தேவாரஞ் சூடிய லிங்கம்*

*அகப்புறத் தத்துவ லிங்கம் ....... ஓம்*
*ஆகாசமாகிய லிங்கம்*
*இகபர சுகந்தரும் லிங்கம் ....... காசி*
*இலகும் விசுவநாத லிங்கம்*

*வான்வடிவாகிய லிங்கம் ....... சுடர்*
*மதிவிழியாகிய லிங்கம்*
*ஊன்வளர் உயிர்க்குயிராகி ....... எங்கள்*
*உள்ளத்தில் நடமிடும் லிங்கம்*

*அகத்தியர் வணங்கிய லிங்கம் ....... யாரும்*
*அடிமுடி காணாத லிங்கம்*
*குகப்பொருளாகிய லிங்கம் ....... மகா*
*குண்டலி குலவிய லிங்கம்*

*பாபத்தைப் போக்கிடும் லிங்கம் ....... மலைப்*
*பாம்பணி மேவிய லிங்கம்*
*சாபத்தை நீக்கிடும் லிங்கம் ....... ஓம்*

*ஆத்ம சுகமளிக்கும் லிங்கம்*

*தீபத்தின் சுடரினைப் போலே ....... எங்கள்*
*சித்தத்திலே பொலியும் லிங்கம்*
*சாபத்தை நீக்கிடும் லிங்கம் ....... பர*
*சாந்தத்தை யளித்திடும் லிங்கம்*

*அச்சத்தைப் போக்கிடும் லிங்கம் ....... சீ*
*வாலயத்துள் வளர் லிங்கம்*
*இச்சையை இயற்றிடும் லிங்கம் ....... பே*
*ரின்பமே யாகிய லிங்கம்*

*கைவந்த கனியென நிலவும் ....... ஞானக்*
*கண்ணுக்குக் கண்ணான லிங்கம்*
*வையத்தின் ஜீவிய லிங்கம் ....... என்றும்*
*ஐயந்தரு மங்கள லிங்கம்*

*ஜய ஜய சிவ சிவ லிங்கம்*
*சாந்தலிங்கம் சோமலிங்கம் ....... ஓம்*
*ஜய ஜய விசுவேச லிங்கம் ....... ஓம்*
*ஜய ஜய ஹரிஹர லிங்கம் ....... ஓம்*

## சுத்தனே, சித்தனே

*சுத்தனே சித்தனே சத்ய ஸ்வரூபனே*
*அத்தனே முத்தனே சக்தியோம் சக்தியோம்*
*அன்னைநீ தந்தைநீ அன்புநீ ஆதிநீ*
*என்னுயிர்க் கின்னுயிர் என்றுந்நீ யாகினை*

*கன்மமும் காயமும் காலமும் ஞாலமும்*
*சென்மமும் சீவனும் சிந்தையால் வந்ததே*
*என்னுளே நின்றிடும் ஏகனே நாதனே*
*உன்னுளே நின்றிடும் உள்ளமே நல்குவாய்*

*என்வினை தன்னையே இன்புறச் செய்துநான்*
*உன்மய மாவதற்கு உறுதுணை யென்றுளேன்*
*வேதமும் போதமும் ஓதறுஞ் சோதியே*
*பூதலம் எங்குமுன் பாதமே காணருள்*

*வாழ்கவோம் சக்தியே வாழ்கவோம் சக்தியே*
*வாழ்கவோம் சக்தியே வாழ்கவோம் சுத்தனே !*

## கடவுள் முழக்கம்

*கடவுளுண்டு கடவுளுண்டு காணுலகக் கோவிலில்*
*கருணைகொண்டு கதியளித்துக் காக்கும்ஒன்றை நம்புவீர்*
*கடலிலியங்குங் கப்பலுக்குக் கலங்கரை விளக்கெனப்*
*படமியங்கு திரையிலே பளிச்சிடும் ஒளியென (க)*

*அப்பர்மூலர் சங்கரர் அருணர்தாயு மானவர்*
*ஆண்டாள்மீரா நானகர் அரியஏசு நபிமணி*
*ஒப்புயர்வி லாதஒன்றை ஓதியன்பு செய்தனர்*
*ஒருமைகூடி உள்ளுணர்ந்தால் ஓம்எனும் கடவுளே! (க)*

*சரியைகிரியை யோகஞான சாதனங்கள் செய்குவீர்*
*சாந்தமாய் நிலைத்துளே சகசநிட்டை கூடுவீர்*

*அரியசீவன் சிவமதாகும் அமரத்தன்மை யெய்துவீர்*
*அறிவுந்திருவும் அருளும்பொருளும் அன்புமோங்கி உய்குவீர்*
*(க)*

*இல்லையென்பா ருள்ளத்தும் இருக்கிறேன் என்றாடுமே*
*இருப்பதும் நடப்பதும் இதயமாங் கடவுளே*
*பல்வகை யியற்கையைப் பகுத்தறிந்து பார்மினோ!*
*பரமசுத்த  சக்தியுண்டு பறைகள் கொட்டி ஆர்மினோ!  (க)*